
KALKI 16.10.94 ரூ. 3.00

கல்கி



டெலிவிஷன் தலையர்கள்!


கண்ணுக்கினிய
கலைவண்ணம்
ஷர்தா சேலைகள்
பண்பாட்டின்
தனிச்சின்னம்.
பெல்காம்
Sharda
SAREES [INDIA]
பட்டு பாலியெஸ்டர் சேலைகள்
மற்றும் பாவாடைகள்
எல்லா பிரபல ஜவுளி கடைகளிலும் கிடைக்கும்



பெரியார் தந்த புத்தி!

"69 சதவீதப் பிரச்னையில் அ. தி. மு. க. அரசுடன் இணைந்து செயல்பட்டதற்கு எத்தனையோ கண்டனங்கள், கேலிகள். "பெரியார் தந்த புத்தி" காரணமாக அவற்றுக்கு நான் மரியாதை கூடத் தர விரும்பவில்லை" என்கிறார் வீரமணி. தொடர்ந்து... :

"பெரியார் தந்த புத்தி என்ன? இந்த இயக்கத்தை நடத்தவும் சிக்கலான பிரச்னைகளில் தீர்வு காணவும் பெரியாரது பேச்சுக்களையும் எழுத்துக்களையும் நினைவில் கொண்டால் போதும். இதைத்தான் "பெரியார் தந்த புத்தி" என்று நான் குறிப்பிடுவது வழக்கம்.

"சிறு வயதிலேயே எனக்குத் திராவிட இயக்கப் பற்றையும் பகுத்தறிவையும் ஏற்படுத்தியவர் பள்ளி ஆசிரியர் திராவிடமணி. நீதிக்கட்சியானது திராவிடர் கழகமாக மலர்ந்த சேலம் மாநாட்டில் எனது 11வது வயதில் முதன் முதலாகப் பேச வாய்ப்புக் கிடைத்தது. தொடர்ந்து பள்ளி, கல்லூரி நாட்களில் இயக்கப் பணியாற்றி வந்தேன். அவ்வப்போது பெரியாரைச் சந்திக்கும் வாய்ப்புக்கள் பெற்றேன்.

"காங்கிரஸ் ஆட்சியில் 1956 இல் பெரியார் ஆறு மாதம் சிறையிலடைக்கப்பட்டார். அப்போது சிறையில் அவரைச் சந்தித்தேன். மணியம்மையாரோடு தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து அரசியல் சட்ட எரிப்பு பற்றிய விளக்கக் கூட்டங்களில் பேசச் சொன்னார்.

"சிறையிலிருந்து வெளியே வந்த பிறகு, "உனக்குப் பெண் பார்த்து வைத்திருக்கிறேன்" என்றார். "நான் இன்னும் சட்டப் படிப்பு முடிக்கவில்லையே" என்று தயங்கினேன். பெரியார் விடுவாரா? தமது பெயரிலேயே திருமண அழைப்பிதழ் அச்சிட்டார். பாரதிதாசன் தலைமை வகித்தார். இன்னொரு ஆச்சர்யமான விஷயம் - 1933 இல் எனது மாமனார் - மாமியார் திருமணத்தை நடத்தி வைத்தவரும் பெரியார்தான்!

"சட்டக் கல்லூரியில் படிப்பு முடித்து கடலூரில் நான் பிராக்டிஸ் செய்து கொண்டிருந்தபோது உடல்நலக் குறைவாக இருந்த பெரியார், என்னை அழைத்து 'விடுதலை' பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்கச் சொன்னார். 1962 இல் நான் பொறுப்பேற்ற போது அவரே என் கையைப் பிடித்து அழைத்துப் போய் ஆசிரியர் நாற்காலியில் அமர வைத்தார். அது முதல் என்னைப் பற்றிக் குறிப்பிடும்போது, "ஆசிரியர் வந்துட்டாரா?" என்றுதான் கேட்பார். தலையங்கங்கள் உள்பட எனக்கு முழு சுதந்திரம் கொடுத்தார்.

"1967 இல் அண்ணா ஆட்சியைப் பிடித்த சமயம் திராவிடர் கழகத்துக்கும் தி.மு.க.வுக்கும் இடையே பெரிய பிளவு இருந்தது. "கண்ணீர் துளிகள்" என்றுதான் நாங்கள் தி.மு.க.வினரைக் குறிப்பிடுவோம். ஒரு திடீர் திருப்பம். முதல்வர் அண்ணா திருச்சி சென்று பெரியாரைச் சந்தித்தார். உணர்ச்சிபூர்வமான அந்தச் சந்திப்பு பற்றி உடனே சென்னையிலிருந்த எனக்கு ஃபோன் செய்து நீண்ட நேரம் முழு விவரமும் தெரிவித்தார் பெரியார். சிக்கனத்துக்குப் பேர் போனவர் டிரங்கால் செலவு பற்றிச் சிந்திக்கவேயில்லை என்றால் அந்தச் சந்திப்பு எத்தகைய உணர்ச்சிகளை ஏற்படுத்தியிருக்கும்; அதை என்னிடம் உடனே பகிர்ந்து கொள்வது எனில் என் மீது எத்தனை பாசம் என்பதை உணரலாம்... இப்படி எத்தனையோ நினைவுகள், இந்தப் பொன்விழா சமயத்தில் இதயத்தில் அலைமோதுகின்றன.

"நான் இந்த இயக்கத்துக்குச் செய்த மிகப் பெரிய காரியமாக நினைப்பது இதன் சொத்துக்களைப் பாதுகாத்ததுதான். எமர்ஜென்சியில் நான் உள்ளே இருந்தபோது 80 லட்சம் வரிபோட்டுச் சொத்துக்களை "அட்டாச்" செய்வது வரை போய் விட்டார்கள். ஒரு பெரிய அறப் போராட்டம் நடத்தி நியாயம் பெற்றேன்!"

சந்திப்பு : ப்ரியன்

டெலிவிஷன் தலையர்கள்

இரண்டே நிமிடங்கள்; டி.வி.யிலிருந்து பார்வையை விலக்கி, உங்கள் பக்கத்தில் உட்கார்ந்து அதைப் பார்த்துக் கொண்டிருக்கும் கணவன்/மனைவி/நண்பன்/குழந்தையின் முகத்தைப் பாருங்கள். அவர் அறியாமல் பாருங்கள்...

ஏதோ மாயத்தால் கட்டுண்டவர்கள் போல் தெரிவார் டி.வி. பார்க்கும் நபர். சூழலை மறந்த லயிப்பு தெரியும். இப்படி டி.வியில் மூழ்கியிருப்பவர்களை அடுத்த அறையிலிருந்து அவசரமாகக் கூப்பிட்டுப் பாருங்கள்... பத்தில் ஒன்பது பேர் எழுந்து வர மாட்டார்கள்; பாதிப் பேர் பதிலுக்குக் குரல் கூட கொடுக்க மாட்டார்கள்!

அவ்வளவு வீரியமான காந்த சக்தி இருக்கிறது டெலிவிஷனுக்கு. இந்தக் காந்தத்திலிருந்து விடுபட இயலாமல் மாலைப் பொழுதுகளை நாம் டி.விக்கு தாரை வார்த்துக் கொடுத்து விட்டோம்.

சாப்பாடு, தூக்கம், குழந்தையைக் கொஞ்சுவது, மனைவியுடன் சல்லாபம் எதுவானாலும் டி.வி. நிகழ்ச்சிக்கு ஏற்ப மற்றவற்றை மாற்றி அமைத்துக் கொள்கிறோம். நமது வாழ்க்கையில் இந்த ஆக்கிரமிப்பை அனுமதித்ததன் மூலம் டெலிவிஷன் தலையர்களாக மாறி வருகிறோம். அன்றாட வாழ்க்கையின் இயந்திரத்தமான பணிகளில் உழன்று, உழன்று டி.வி. பார்ப்பதும் இயந்தரத்தனமானதாக நம்முன் உருக்கொண்டு விட்டதாகவே தோன்றுகிறது.

ஒரு சேனல், இரண்டு சேனல் பார்த்தது போக சாட்டிலைட் டி.விக்களின் படையெடுப்பால் நமக்கு 'சாய்ஸ்' நிறைய கிடைக்க, எதை எடுப்பது, எதை விடுப்பது என்று புரியாமல் மாற்றி மாற்றி மூழ்கித் திளைக்கிறோம். திகட்டத் திகட்டப் பொழுதுபோக்கு.

"எதையும் திகட்டத் திகட்ட அனுபவிப்பது என்பது மேல்நாட்டுக் கலாசாரம். முத்தம் முதல் ம்யூஸிக் வரை. அந்த மண்ணுக்கு அது இயல்பு. அதுவே நமது கலாசாரமாகவும் உருவெடுப்பது ஆரோக்கியமானதல்ல; மாறாக பல அபாயகரமான விளைவுகளுக்கு அஸ்திவாரமாகிறது'' என்கிறார் மனவியல் நிபுணர் தாரா ஸ்ரீனிவாசன்.

அறுபத்தெட்டு வயதான சரஸ்வதி பாட்டி, "அன்று கதை, கச்சேரிகளை நாம் தேடிப் போனோம்; இன்று அவை நம்மைத் தேடி வருகின்றன. டி.வி., என் வாழ்வின் தவிர்க்க முடியாத ஒரு அம்சமாகி விட்டது. என் பேத்தியை கவனித்துக் கொள்ளும் நேரம் தவிர, இதர நேரம் டி.விக்கே சரியாயிருக்கிறது" என்கிறார்.

ஆனால் எந்தப் பாட்டி - தாத்தாவும் டிவியில் காலட்சேபம் - கச்சேரி மட்டும் பார்க்கிறவர்களாக இல்லை. (அவை வருகின்றனவா என்ன!)

கர்நாடக சங்கீதத்தை எம்.டி.வி சாப்

டி.வி. : கிளிப்பிங் செய்திகள்!

♦ சென்ஸாரில் வெட்டப்பட்ட காட்சிகளைக் கூட சில சாடிலைட் தொலைக் காட்சிகளில் காண முடிகிறது. இது குறித்து சென்ஸார் போர்ட் சில தனியார் தொலைக் காட்சிகளுக்கு எச்சரிக்கை அனுப்பியுள்ளது.

♦ விஜயதசமி முதல் தொடங்கவிருக்கும் உலக தமிழ் தொலைக்காட்சி தினசரி எட்டு மணி நேர நிகழ்ச்சிகளை மூன்று தடவையாக 24 மணி நேரம் ஒளிபரப்பும். காரணம்,

உலகின் எந்த மூலையில் உள்ள தமிழனும் பார்க்க வசதி செய்யவாம்!

♠ சன் டீவி தினசரி மூன்று மணி நேரம் என்று ஆரம்பித்து ஆறு மணி நேரமாக்கி செப்டம்பர் 30 முதல் பன்னிரண்டு மணி நேரம் ஒளிபரப்புகிறது. ''இதனால் தரம் பாதிக்கப்படாது'' என்று அடித்துச் சொல்கிறார் கலாநிதிமாறன்.

♠ ராஜ் டீவி என்ற பெயரில் விரைவில் ஒரு சாடிலைட் டீவி வரப் போகிறது. மேலும் சஃப்பயர் வளாகத்தில் எழவிருக்கும் பல மாடிக் கட்டடத்தில், கட்சி அலுவலகம் தவிர ஜெ. டீவியும் செயல்படும்!

♠ சன் டீவியின் கன்னட சானலின் பெயர் உதயா டீவி. இதில் ராமானந்த சாகரின் ராமாயணம் கன்னடத்தில் 'டப்' செய்யப்பட்டு ஒளிபரப்பாகும் என்று அறிவிப்பு வந்து கொண்டிருந்தது. ஆனால் திடீரென்று நிறுத்தப்பட்டு விட்டது. காரணம்?

''ராமாயண ஒளிபரப்பை நிறுத்தாவிட்டால் போராட்டம் வெடிக்கும்'' என்று கன்னட நடிகர் ராஜ்குமார் பேசியதாகச் செய்தி. தொடர்ந்து, கர்நாடக அரசின் தலைமைச் செயலரும் தகவல் தொடர்பு அமைச்சரும் ஃபோனில், ''ராமாயணத்தை ஒளிபரப்ப வேண்டாம்; சட்ட ஒழுங்கு பிரச்னை வரும்'' என்று கலாநிதி மாறனிடம் கூறியிருக்கிறார்கள்.

இதன் பின்னணியில் அரசியல் காரணம் இருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸின் கணிப்பு. ''வரவிருக்கும் கர்நாடக மாநில சட்டமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதா பக்கம் வோட்டு வங்கி சரிந்து விடலாம் என்று கருதி, வீரப்ப மொய்லி ராஜ்குமாரைப் பகடைக் காயாகப் பயன்படுத்தியிருக்கிறார்'' என்கிறது எக்ஸ்பிரஸ்!

– மௌஷ்மி

பிட்டு விட்டது. காலட்சேபங்களை சினிமாவும் சீரியல்களும் விழுங்கி விட்டன. சிறுவர்கள் முதல் தாத்தாக்கள் வரை சன் மற்றும் மெட்ரோ சானல் போட்டிகளுக்கென தங்கள் புத்தியைத் தீட்டிக் கொண்டு



கையில் கார்டுடன் எப்போதும் தயாராய் டீ.வி. முன் தவம் கிடக்கின்றனர்.

"போம்மா! தாத்தா வீட்டுல ஸ்டார் டீ.வி. இல்ல; நான் அங்க வர மாட்டேன்!" என்கிறது ஒரு எட்டு வயது வாண்டு!

"சினிமா சம்பந்தப்பட்ட டீ.வி. போட்டிகள் அறிவிக்கப்பட்டதுமே அவற்றுக்கான விடை கேட்டு மணிக்கு நூறு டெலிபோன்கள் எனக்கு வருகின்றன'' என்கிறார் பிலிம் நியூஸ் ஆனந்தன். வயது வேறுபாடின்றி எல்லோருமே போன் செய்கிறார்கள் என்பது ஆனந்தன் தரும் கூடுதல் தகவல்.

போட்டிகள், விடை எழுதுவதில் மட்டுமில்லை. எந்த நிகழ்ச்சியைப் பார்ப்பது என்பதிலும்தான்.

ஏழு முதல் பதினாறு வயது வரையிலான பிள்ளைகள் (ஆண்-பெண் இருவரும்) ஸ்டாரில் வரும் WWF - முரட்டு மல்யுத்தப் போட்டிகளையும் சூப்பர் ஹிட் பாடல்களையும் மிக விரும்புவதாக ஒரு கணக்கெடுப்பு சொல்கிறது. இளைஞர்கள் விரும்புவது எம்.டீ.வி.யையும் ஸ்போர்ட்ஸ் சேனலையும். நடுத்தர வயதினர் - குடும்ப நிகழ்ச்சிகளையும் திரைப்படங்களையும் ஆதரிக்க, வயதானவர்கள் தொடர் நாடகங்களையும், ஜெயினும் சென்னைத் தொலைக்காட்சியும் போட்டி போட்டுக் கொண்டு ஒளிபரப்பும் அரதப் பழைய திரைப்படங்களையும் நாடுகிறார்கள்.

விசேஷம் என்னவென்றால் எல்லாரும் ஒரே சமயத்தில் வெவ்வேறு நிகழ்ச்சிகளைப்



• தாரா ஸ்ரீநிவாசன்

பார்க்க விரும்புவதும், விளைவாக அடிதடி இல்லாத குறையாக மனஸ்தாபங்களும்!

இதைச் சாதகமாக்கிக் கொண்டு 'உங்கள் வீட்டுக்கு இரண்டாவது டி.வி. வாங்கும் வேளை வந்தாச்சு!' என்று டி.வி. உற்பத்தியாளர்கள் விளம்பரம் செய்கிறார்கள்.

“பயங்கரமான வன்முறை நிகழ்ச்சிகளை விரும்பிப் பார்க்கும் சிறுவன் மனத்தளவில் தன்னையறியாமல் ஒரு முரடனாக உருவெடுக்கும் சாத்தியங்கள் அதிகம்” என்கிறார் டாக்டர் தாரா. இது போலவே எம். டி.வி. கலாசாரம்.

“ஆண்களும் பெண்களும் தமது உடை, நடையிலிருந்து பழகும் விதம் முதற்கொண்டு நமது பண்பாட்டையே எம்.டி.வியை ஒரு அளவுகோலாகக் கொண்டு நிர்ணயிக்கத் தொடங்கி விட்டார்கள். இதனால் நமது இப்போதைய வாழ்க்கை முறை பிற்போக்கானதென்றும் எம்.டி.வி. காட்டும் உல்லாசமே உயர்வானதென்றும் கருதும் மனோபாவம் வளர்ந்து வருகிறது” என்கிறார் இவர்.

இதனாலெல்லாம் குழந்தைகள் டி.வி. பார்ப்பதைக் கட்டுப்படுத்துவதோ அல்லது குறைப்பதோ பெற்றோருக்குச் சாத்தியமா?

அவர்களாலேயே பார்க்காமல் இருக்க முடியவில்லை என்னும்போது குழந்தைகளை என்ன சொல்லித் தடை செய்ய முடியும்? இரு தலைமுறையினரிடையே இருந்த கூச்ச சுவர்களைத் தகர்த்து 'சமன் செய்து விட்டது' டி.வி. ஆபாசக் காட்சிகள் வரும்போது யாரும் எழுந்து போவதில்லை. நான் தவறாமல் இடம்பெறும் மது அருந்தும் காட்சி, கொலைக் காட்சி போன்றவை வந்தால் வெறுப்படைந்து யாரும் டி.வி.யை ஆஃப் செய்வதில்லை. ஆபாசம் வன்முறைக்கான அளவுகோல் மாறி விட்டது!

“டி.வி.யினால் படிக்கும் பழக்கம் வெகுவாகக் குறைந்து விட்டது; நண்பர்களோடு பேசுவது, உறவினர்களைச் சந்திப்பது, பொது நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவது போன்ற மனித உறவுகளே அற்றுப் போய் விடும் சூழல் ஏற்பட்டு விட்டது” என்கிறார் தாராஸ்ரீனிவாசன்.

அதே சமயம் இந்த டி.வி. புரட்சியால் நன்மை இல்லாமலும் இல்லை என்பதையும் ஒருபுறம் யோசிக்க வேண்டியிருக்கிறது. ஒருபுறம் பிபிஸியின் செய்திப் படங்கள், உலக விவகாரங்களை டிராயிங் ரூமிலேயே கொண்டு வந்து கடைவிரிக்க, மறுபுறம் நியூஸ் டிராக், ஐ விட்னஸ் போன்ற நம்மூர் நிகழ்ச்சிகளும் அவற்றுடன் போட்டி போட முயல, மேலை நாட்டுத் தொழில்நுட்ப வளர்ச்சி, வாழ்க்கை முறை பற்றிய அறிவு, நம் நுண்கலைகள் பற்றிய தெளிவு - சுலபமாக எளிமையாக நமக்கு அறியக் கிடைக்கின்றன. கிரிக்கெட், டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களை நேரில் பார்ப்பதை விடவும் அற்புதமாக டி.வியில் காண முடிகிறது!

ஆனால் இவை போன்ற உபயோகமான நிகழ்ச்சிகளையெல்லாம் சினிமா, பொழுது போக்கு நிகழ்ச்சிகள் அளவுக்கு விரும்பிப் பார்ப்போர் குறைவு.

சன் டி.வி.யின் 'டிக்டிக்டிக்' நிகழ்ச்சியில், போட்டியில் கலந்து கொண்டு கேலிக்குள்ளாவதையும், கடலை மாவு உருண்டையை விழி பிதுங்க உண்பதையும் யாரும் தன்மானக் குறைவாகக் கருதக் காணோம்! தோற்றவருக்குத் தரும் சில்லறைத்தனமான தண்டனைகளை ஆங்காங்கே சிலர் திட்டிக் கொண்டிருந்தாலும் அந்நிகழ்ச்சிக்குக் கிடைக்கிற வரவேற்பும், பங்குபெறத் துடிக்கும் கும்பலும் ஆச்சர்யப்படும் விதமாக அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

இதற்கெல்லாம் காரணம் ஒளி-ஒலி சாதனத்துக்கு இருக்கும் மகத்தான சக்தி. முயற்சி இன்றி, இருந்த இடத்திலேயே கண்ணுக்கும் காதுக்கும் ஒரு சேரத் தீனி. கற்பனையை ஓட்டி மனத்திரையில் பார்க்கும் சிரமம் எல்லாம் கிடையாது! அதோடு செலவும் ரொம்ப ரொம்பக் குறைவு!

இப்படியிருக்க, டி.வி. நிகழ்ச்சிகள் வழங்குவோரின் பொறுப்புதான் மிக அதிகம். ஒரு தலைமுறையை, ஒரு சமுதாயத்தை நாம் ஆழமான பாதிப்புக்கு உள்ளாக்குகிறோம் என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்த்தால் நிகழ்ச்சிகள் இன்னும் தரமாகவும் நேர்மையாகவும் இருக்கும்.

கட்டுரை : கிச்சா
பேட்டி : மாலதி சந்திரசேகரன்.
அட்டை வண்ணப்படம் : கேமரா திருஞானம்
வடிவமைப்பு : மதிகுமார்
அட்டையில்: சர்வேஸ்வர ராவ், கிரண்மயி, பும்ஸி கிருஷ்ணா.

குறிப்பிடும்படியாக இரண்டு புதிய முகங்கள் அறிமுகமாகியிருக்கிறார்கள். ஹரீஷ், ரஞ்சிவ். மற்றவர்களும் அறிமுகம் என்றார்கள். சோனியா என்ற மீடியம் சைஸ் குஷ்பூவும் இதில் அடக்கம். நடிப்புதான் டவுட்.

இளைஞர்கள் வருங்காலத் தூண்



இளைஞர் அணி

கள். அவர்கள் வன்முறையில் ஈடுபடக்கூடாது என்கிற விஷயத்தை சுவாரஸ்யமாய்ச் சொல்லியிருப்பது தான் நிம்மதியான விஷயம்.

இளைஞர்கள் என்றாலே கூத்தும் பாட்டும் தமிழ் சினிமா மரபாச்சே. பாட்டுகள் ஒவ்வொன்றையும் பிரமாதமாய் ஷூட் பண்ணியிருக்கிறார்கள். நடிக, நடிகையருக்கான காஸ்டியூம்கள் வெகு அழகு.

கெஸ்ட் ரோலில் வருகிறார் கார்த்திக். என்ன முக்கியத்துவம் என்பதை கண்டவர் செப்பினால் புண்ணியம். ராதாரவி படம் பூராவும் வியாபகம்.

கதையில் ஒட்டாமல் காமெடி துண்டாக நிற்கிறது. படத்தில் காமெடி இருந்தே தீர வேண்டும் என்ற தமிழ் சினிமாயிஸத்தின் தொத்தல் இது.


வில்லன் என்றாலே கற்பழிப்பு, கடத்தல் இன்னபிற... இந்தப் படத்திலும் ஆஜர். புதுசாய் வில்லத்தனம் காட்டுவதாய் வக்கிரத்தையும் வெளிப்படுத்துவது ஆரோக்கியமில்லை.

வன்முறை வேண்டாம் என்று சொல்ல வரும் படத்தில் திகட்டத் திகட்ட வன்முறை காட்டி, கடைசி டைலாக்கில் பொன் மொழி உதிர்க்கும் ஏமாற்றுதனம் இதில் இல்லை. அதற்காக ஒரு கங்கிராட்ஸ்.

டைரக்டர் கலைக் குடும்பத்து வாரிசு என்றார்கள். சிரத்தை தெரிகிறது.

கீப் இட் அப்.


- துளசி



''நேற்று இண்டர்வியூ போயிட்டு வந்த கம்பெனியிலிருந்து அவசரத் தந்தி ஒண்ணு வந்துதே, உடனே வேலையில் சேரச் சொல்லித்தானே?''

''அந்த வயித்தெரிச்சலை ஏன் கேட்கிறே? 'நீங்கள் எங்க கம்பெனியின் இண்டர்வியூவுக்கு வந்த ஆயிரமாவது நபர் என்பதை அறிந்து பெருமை அடைகிறோம்; வாழ்த்துக்கள்'னு தந்தி அனுப்பி இருக்காங்க!''

- கோ. வீ. ராஜேந்திரன்



அடடா! சத்திய சந்தன்! முகத்தில் என்ன தேஜஸ்...
பிரதமர்
சங்கரானந்த்
மன்மோகன் சிங்
ஆமாமா புத்தரேதான்..
அப்படி ஒன்றும் பெரிய ஊழல் நடையாது!
உலகத் தமிழ் மாநாட்டுக்கு அழைப்பு
பிரதமர்
பிரச்சினைகள்
ஜெ
உங்க கதிதான் எனக்கும். சமாளிக்கலாம் தைரியமா இருங்க...
போனா
கிளிண்டன்



ஸ்ரீ

கல்கி



1994
அக்டோபர் 16
பவ
புரட்டாசி 30
மலர் : 53
இதழ் : 11

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

உ.பி. : எரிமலை வெடிக்கிறது!

உத்தரப் பிரதேசத்தில் வன்முறை தாண்டவமாடுகிறது. உத்ராகண்ட் மாநிலக் கோரிக்கையையொட்டிய ஆர்ப்பாட்டங்கள் டில்லிக்கும் பரவி அங்கேயும் வன்முறை, தடியடிப் பிரயோகம் எல்லாம் நடந்திருக்கின்றன. உ.பி.யிலோ துப்பாக்கிப் பிரயோகங்களில் பலர் மடிய, மக்கள் ஆத்திரமடைந்து ஐந்து போலீஸ்காரர்களைச் சூழ்ந்து அடித்துக் கொன்றே விட்டனர்! ஒன்பது நகரங்களில் ஊரடங்குச் சட்டம்! நிலைமை இந்த அளவுக்கு வளர்ந்த பிறகும் மத்திய அரசு பிடிவாதமாக 'உத்ராகண்ட் மாநிலம் கிடையாது' என்றும் 'உ.பி. அரசைக் கலைக்க மாட்டோம்' என்றும் கூறி வருகிறது.

'உத்ராகண்ட் மாநிலத்தைப் பிரித்துக் கொடுத்து விடலாம்' என்று உ.பி. சட்டசபையில் இருமுறை தீர்மானங்கள் நிறைவேறி, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளபோதிலும் மத்திய அரசு இதில் பிடிவாதம் காட்டக் காரணம், வேறு பல மாநிலங்களிலும் இதுபோன்ற கோரிக்கைகள் எழலாம் என்பதற்காக இருக்கலாம். ஆயினும் மக்களின் பொறுமையை அளவுக்கு மீறி சோதிப்பது நல்லதல்ல. தற்போது மலைப் பிரதேச மாவட்டங்களுக்கு சில சுயாட்சி உரிமைகளை வழங்கலாம் என்னும் அளவுக்கு மத்திய அரசு கீழிறங்கி வந்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால் உ.பி. மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திவாரியின் கோரிக்கையை ஏற்று, உ.பி. அரசை டிஸ்மிஸ் செய்கிற மனநிலையில் மத்திய அரசு இல்லை. இதனால் வருத்தமடைந்து ராஜினாமா சமர்ப்பித்த திவாரியை சமாதானப்படுத்தி ராஜினாமாவை ஏற்காமல் காலம் கடத்தி வருகிறார் ராவ்.

முலாயம்சிங்யாதவ்வின் சமாஜவாடி கட்சி, கன்ஷிராமின் பகுஜன் சமாஜ் கட்சி ஆகியவற்றின் கூட்டணி ஆட்சிக்கு காங்கிரஸ் ஆதரவு தர முன்வந்ததற்குக் காரணமே, பி.ஜே.பி.யின் கை ஓங்கி விடக் கூடாது என்பதற்குத்தான். ஆனால் எஸ்.எஸ்.பி. - பி.எஸ்.பி. கூட்டணியே ஈகோ பிரச்னைகளால் தடுமாறுகிறது. கன்ஷிராம், அரசுக்கு வெளியே இருந்தபடியே அரசாளப் பார்க்கிறார். முலாயம்சிங் யாதவ் ஆட்டி வைக்கப்படுகிறார். மாயாவதியின் மாய்மாலங்கள் வேறு. காந்திஜியையே பகிரங்கமாக அவமதிக்கிறது பி.எஸ்.பி.

இதிலே கட்சிநலன், ஆட்சி நலன் என்று இரண்டு அம்சங்கள் பின்னிக் கிடக்கின்றன. ஆட்சி நலன் என்று பார்த்தால் இன்றைய கூட்டணி ஆட்சி சரியாக நடக்கவில்லை என்பது கண்கூடு. ஆனால் இதற்காக டிஸ்மிஸ் உத்தரவு பிறப்பித்தால் பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் எஸ்.எஸ்.பி. - பி.எஸ்.பி. கூட்டணியே மேலும் மக்களின் அனுதாபத்தைப் பெற வாய்ப்புண்டு. காங்கிரஸ் மீது கோபம்தான் ஏற்படும். இந்தச் சூழலை பி.ஜே.பி. தனக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயற்சி செய்யும். வோட்டுக்களின் போக்கு கருதி காங்கிரஸ் மேலிடம் தயங்குகிறது. தேர்தலைச் சந்தித்து வெற்றி பெறும் அளவுக்கு உ.பி. காங்கிரஸில் ஒற்றுமையும் இல்லை; மக்களிடம் அதற்குச் செல்வாக்கும் இல்லை. அப்படி இருக்குமானால் டிஸ்மிஸ் உத்தரவு எதற்கு? முலாயம் சிங் யாதவ் ஆட்சிக்குக் காங்கிரஸ் சட்ட மன்றத்தில் அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெற்றாலே போதுமே! ஆட்சி விழுந்து விடுமே!

மேலிடம் தயக்கம் காட்டினாலும் திவாரி, தற்போதுள்ள ஆட்சி மீது மக்களுக்கு இன்றுள்ள அதிருப்தியையே காங்கிரஸுக்குச் சாதக வோட்டுக்களாக மாற்றலாம் என்று கணக்குப் போடுவதாகத் தெரிகிறது.

ஆக மொத்தத்தில் மக்கள் நலனுக்குப் பாடுபடுவதை விட ஆட்சியைப் பிடிப்பதே எல்லாருக்கும் இலக்காகி, அதற்காக உழைக்கவே தயாராகிறார்கள்!

கேட்டோ கேட்டோ கேரளச் செய்தி கேட்டோ!

●● கேரள எம்.எல்.ஏ. குஞ்ஞிராமன் ஒரு நாள் தமது தொகுதியைச் சுற்றிப் பார்க்க அரசு டவுன் பஸ்ஸில் சென்றார். எம்.எல்.ஏ. இறங்க வேண்டிய பஸ் நிறுத்தத்தைத் தாண்டி வெகுதூரம் சென்றுதான் பஸ் நிறுத்தப்பட்டது என்பதால் அந்த கண்டக்டர் பற்றி போக்குவரத்துத் துறை அமைச்சருக்குப் புகார் அனுப்பினார் எம்.எல்.ஏ. அமைச்சரும் அந்தக் கண்டக்டரை சஸ்பெண்ட் செய்து, விசாரணைக்கு உத்தரவிட்டார். முடிந்ததா பிரச்னை? அதுதான் இல்லை. எம்.எல்.ஏ. இடதுகம்யூனிஸ்ட் கட்சிக்காரர். அந்தக் கண்டக்டரும் அதே கட்சியில் ஒரு தொழிற்சங்கத் தலைவர். அதனால் தோழர்கள் எம்.எல்.ஏ.யிடம் முறையிட, அவர் மீண்டும் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு கண்டக்டர் மேலான தமது புகாரை வாபஸ் பெறுவதாகக் கடிதம் அனுப்பினார். அமைச்சர் மசியவில்லை. 'என்ன விளையாடுகிறீர்களா? நீங்கள் சொல்கிறபடியெல்லாம் என்னால் ஆட முடியாது. அந்தக் கண்டக்டர் மீது விசாரணை நடந்தே தீரும்!' என்று உறுதியாகச் சொல்லி விட்டார். எம்.எல்.ஏ. திண்டாடுகிறார்!

●● 'வருவாய்த் துறைக்கான புதிய நியமனங்கள், இடமாற்றம் போன்ற கோரிக்கைகளுக்காக அங்கு பணியாற்றும் ஊழியர்கள் அரசியல்வாதிகளின் சிபாரிசுடன் வரக் கூடாது. மீறி வந்தால் அவர்கள் மீது சட்டப்படியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்!' - இப்படியொரு சர்க்குலரை கோழிக்கோடு வருவாய்த் துறை அலுவலக ஊழியர்களுக்கு அனுப்பி வைத்தார் மாவட்ட கலெக்டர் அமிதாப் காந்த். இது ஏகப்பரபரப்பை ஏற்படுத்தி விட்டது. காரணம், அங்குள்ள தாசில்தார் ஒருவரை இடமாற்றம் செய்யச் சொல்லி வருவாய்த் துறை அமைச்சரிடமிருந்தும், மாற்றக் கூடாது என முதல்வர் அலுவலகத்திலிருந்தும் கலெக்டருக்கு வந்த உத்தரவுதான். இனி அமைச்சர்களின் சண்டையில் கலெக்டர் மாற்றப்படாமல் இருக்க வேண்டும்!


●● திருவனந்தபுரம் விமான நிலையத்தில் பறவைகளின் தொல்லை அதிகம். இந்த நிலையில் கசாப்புக் கடைகளும் அருகிலிருந்தால் அதற்காக வட்டமிடும் கழுகுகளின் எண்ணிக்கையும் அதிகமாகுமே! அதனால் விமான நிலையத்தைச் சுற்றிப் பத்து கி.மீ. தூரத்திற்குக் கசாப்புக் கடைகளே இருக்கக் கூடாது. மீறி நடத்தினால் அபராதத்தோடு சிறைச்சாலை வாசமும் உறுதி என்று திருவனந்தபுரம் கலெக்டர் உத்தரவிட்டுள்ளார்.

ஆக, இங்குள்ள மாவட்டக் கலெக்டர்களெல்லாம் உத்தரவு போடுகிற அளவுக்குத் தைரியசாலிகளாக இருக்கிறார்களே, அதைச் சொல்லுங்கள்!



திருவனந்தபுரத்திலிருந்து :
எஸ்.எஸ். மணி

ஒரு வீடு கட்டுவதற்கு மூன்று விஷயங்கள் தேவை.





ஒரு மனை... ஒரு ஆர்கிடெக்ட்... மற்றும்...

...மார்கதர்சி!

உங்களுக்கென்று ஒரு வீடு... ஒரு நாள் அது கைகூடும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். பதினைந்து வருடங்கள் கடுமையாக உழைத்தபிறகு, அந்த முயற்சியில் இறங்க நீங்கள் தயாராயிருக்கிறீர்கள்.

வீட்டுக்கான அனைத்தையும் நீங்களே பார்த்துப் பார்த்து தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். அனைத்தும் மிகக் தரமான பொருள்கள். ஆனால் இப்போது உங்கள் கையிருப்பு குறைந்து வருகிறது. 'நினைத்தபடி வீட்டைக் கட்டி முடிக்க முடியுமா' என்று யோசிக்க ஆரம்பித்து விட்டீர்கள்.

நீங்கள் திட்டமிட்டபடியே இறுதிவரை கட்டி முடிக்க மார்கதர்சி உங்களுக்கு உதவ முடியும் - சிட் ஃபண்ட் மூலமாக...

உங்களுக்குத் தேவையான தொகைகளைச் சுலபமாக அடையும் வழியை மார்கதர்சி காட்டுகிறது. இந்த வழியை பின்பற்றி கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளாக ஆந்திராவில் லட்சக்கணக்கானோர் மார்கதர்சியின் உதவி பெற்றுப் பயனடைந்து வருகிறார்கள். இப்போது உங்கள் முறை!

உங்கள் செலவுகளுக்கேற்ப திட்டமிட்டுக் கொள்ள மார்கதர்சி சிட் ஃபண்ட் உங்களுக்கு உதவுகிறது. ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி வரலாம். உங்களுக்குத் தேவை ஏற்படும்போது, செலுத்திய தொகையைக் காட்டிலும் அதிகமான தொகையைக் கேட்டுப் பெறலாம். 'ஏன், எதற்கு' என்று யாருக்கும் நீங்கள் விளக்கமளிக்க அவசியம் இருக்காது. நீங்கள் பெறக் கூடிய தொகையின் அளவை மற்றவர்கள் தீர்மானிக்கப் போவதுமில்லை. நீங்கள் சேரும் சிட் ஃபண்ட் திட்டத்தையும், தொகையின் அளவையும், மற்றும் மாதாந்திர தவணைகள் குறித்தும், திரும்ப கட்டும் சக்தியைப் பொறுத்து நீங்களே முடிவெடுக்கலாம்.

மார்கதர்சி பற்றியும் அதன் சிட் ஃபண்ட் திட்டங்கள் பற்றியும் இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ள இன்றே எங்களை அணுகுங்கள்.

மார்கதர்சி சிட் ஃபண்ட் (மெட்ராஸ்) லிமிடெட்,

ஏ 1 & 2, பார்சன் மானர்
602 அண்ணா சாலை, சென்னை – 600 006,
தொலைபேசி : 8266002

வாழ்க்கையைப் போல் உங்கள் தேவைகளும் நிஜமானவை!

32 வருடங்களாக ஆந்திராவில் முதன்மை பெற்று 27 கிளைகளுடன் விளங்கும் கம்பெனியின் சென்னை துணை நிறுவனம்.

Kalki Shopping Page

Kalki Shopping Page

நேப்பால் ருத்ராட்சம் ஒரு முகம் ருத்ராட்சத்திலிருந்து பதினான்கு முகம் ருத்ராட்சம் வரை கிடைக்கும், ருத்ராட்ச மாலை, சாலிகிராமம், ஸ்படிக மாலை, ஸ்படிக மூர்த்தி, மங்களம் உண்டான வலம்புரி சங்கு மற்றும் பூஜை சாமான்கள், வீடு அலங்காரத்துக்காக சங்கு பொருட்கள் அதாவது Shell Jewellery இவைகள் அனைத்தும் கிடைக்கும்.

(Fresh stocks have arrived)

நீன் செல்ஸ் & கிப்டஸ்,

லஸ் பஜார்,
4/19, ஆர்.கே. மடம் ரோடு,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004.

இந்த விளம்பர கட்டிங்கை கொண்டு வருபவருக்கு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஆசியுடன் எழுதிய நேப்பாள் ருத்ராட்ச மகிமை புத்தகம் இலவசமா வழங்கப்படும்.

இயற்கை மூலிகைப் பொடிகள் சிகிச்சை

சர்க்கரை, ஆஸ்த்மா, மூட்டுவலி, நரம்புத் தளர்ச்சி, ஞாபக சக்தி, அல்சர், காஸ்டிரிக், மூலம், B.P., இருதயக் கோளாறு, தோல் வியாதிகள், உடல் இளைக்க, கிட்னி, விஷக்கடிகள், முடி கறுத்து நீண்டு வளர, கற்பப்பை கோளாறுகள், கண் தொல்லைகள் முதலியவற்றிலிருந்து பூரண குணம் பெற நம் முன்னோர்கள் சித்தர்கள் கூறியபடி நோய் வென்று வாழலாம். பரம்பரை சித்த வைத்தியர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இயற்கை அபூர்வ மூலிகைப் பொடிகள் அனைத்தும் கிடைக்கும்.

மருத்துவரை நேரில் சந்திக்க மாலை 5 to 8.

SAKTHI NATURE CURE RESEARCH AND SERVICE CENTRE
1, YMCA BUILDING, ROYAPETTAH,
MADRAS -600 014. Ph: 831141
(Opp. Govt. Royapettah Hospital)

FOLLOW - MEE
DESIGNER SAREES
(Exclusively for ladies)
Dealers for

PARVATHA SAREES

(MADURAI CHUNGUDI)

We also deal in all kinds of fashion sarees and Wedding Sarees.

Fix to us at:

**Shop No. 22,
GOKUL ARCADE,
No. 2, SARDAR PATEL ROAD, ADAYAR,
MADRAS - 20.**

Adyar
STUDENTS XEROX

- **ADYAR**
  Opp Adyar Bus Terminus ☎:411358
- **ANNA SALAI**
  Near Anand Theatre ☎:8521433
- **ANNA NAGAR WEST**
  Thirumangalam Junction ☎:6261764
- **NUNGAMBAKKAM**
  Near Ganpat Hotel ☎:8278983
- **PONDY BAZZAR**
  Next to Nagesh Theatre ☎:4346580
- **TEYNAMPET**
  Opp. Anna Arivalayam ☎:454845
- **MYLAPORE**
  Opp.Jammi Building ☎:4997380
- **GUINDY**
  Opp.Railway Station ☎:2347016
- **PARRYS**
  Opp.High Court ☎:582513

நி 11

IF I CANT BLOW UP THE WORLD IN THE FIRST TEN SECONDS OF MY FILM, THE FILM IS A FLOP.

— IRWIN ALLEN

ஒரு ஹாலிவுட் திரைப்படப் பிரமுகர்

நாகேஷ்!

எனக்கும் அவருக்குமுள்ள தொடர்பினை, ஆழமான நட்பினை எண்ணிப் பார்க்கிறேன். நெஞ்சமெல்லாம் இனிக்கிறது. நினைவெல்லாம் மணக்கிறது. அந்த நாள் ஞாபகம் நெஞ்சத் திரையில் சித்திரங்களாகத் தெரிகின்றன.

நாடக உலகில் நாகேஷ் கொடிகட்டிப் பறந்த நேரம். அவருடைய மேடை நடிப்பைப் பலரும் பாராட்டிப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். முதன் முறையாக அவர் நடித்த நாடகம் ஒன்றைப் பார்க்கச் சென்றிருந்தேன்.

நாடகத்தில் நாகேஷ் தோன்றும் முதல் காட்சியே ஒரு பூகம்பமாக வெடித்தது. நாடகத்தில் அவர் அறிமுகக் காட்சி - மேடைக்கு அவர் நடந்து வரவில்லை; பறந்து வந்து கட்டிலில் தொப்பென்று விழுந்தார்! நாடகம் பார்த்துக் கொண்டிருந்தவர்களின் நெஞ்சம் திடுக்கிட்டது. பிறகு அவர் பேசிய அத்தனை வசனங்களுக்கும் கரகோஷம்தான். நாகேஷிடம் உள்ள எத்தனையோ சிறப்புக்களில் இதுவும் ஒன்று. தான் தோன்றும் முதல் காட்சி மின்னல் அடித்த மாதிரியாகவும் புதுமையாகவும் இருக்க வேண்டுமென்று தன்னை மிகவும் வருத்திக் கொள்வார்! ரசிகர்களின் கவனத்தையெல்லாம் மொத்தமாகத் தான் மட்டுமே ஈர்த்துக் கொண்டு, அரங்கத்திலிருக்கும் அத்தனை பார்வையாளர்களையும் சுருட்டி தன் பாக்கெட்டிலே போட்டுக் கொள்ளும் அற்புதத் திறன் படைத்த ஒரு அபூர்வக் கலைஞர் நாகேஷ்.

"திரைப்பட ஆரம்பத்தின் முதல் பத்து விநாடிகளில் ஒரு பூகம்பத்தை நான் ஏற்படுத்தாமல் போனால் எனது படம் தோல்வி என்று அர்த்தம்" என்று Irwin Allen சொன்னார்.

இந்த ரகசியத்தைத்தான் நாகேஷ் கற்று வைத்திருக்கிறார்.

நானும் நாகேஷும் 'உயிருள்ளவரை' என்கிற நாடகத்தில் இணைந்து நடிக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. Clipping.

ஒரு சோகமான காட்சி...

கே. பாலசந்தர்

ஒருவர் மயக்கமுறுகிறார்; உடனே ஒரு தம்ளர் தண்ணீர் கொண்டு வரும்படி, வேலைக்காரனாக நடித்த நாகேஷிடம் நான் கூறினேன். அதற்கு நாகேஷ், "தண்ணீருக்கு இப்பத்தான் போன் பண்ணியிருக்கிறேன்" என்று பலரும் எதிர்பாராத ஒரு வசனத்தைச் சொல்ல, நாடக அரங்கமே கைதட்டலினால் அதிர்ந்து போனது.

எதிர்பாராமல் வந்த இந்த 'ஜோக்'கினால் நோயாளியாகப் படுத்திருந்தவரும், உடன் நடித்த நானும் சிரிப்பை அடக்க முடியாமல் எங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு காட்சியை முடித்துக் கொண்டு மேடையை விட்டு உள்ளே போவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

நாடகம் முடிந்ததும், "இப்படி ஒரு சோகமான காட்சியில் எல்லோரையும் சிரிக்க வைத்து விட்டாயே" என்று நான் நாகேஷைக் கடிந்து கொண்டேன்.

னை

இப்படித்தான் இன்னொரு சம்பவம்: நாடக உலக நண்பர் ஒருவர் காலமாகி விட்டார். துக்கம் விசாரித்துப் போக ஒரு கூட்டம் வந்திருந்தது. என் பக்கத்தில் நாகேஷ் நின்று கொண்டிருந்தார்.

"எவ்வளவு பேர் வந்திருக்காங்க பாரு!" என்றார் நாகேஷ்.

'அது இறந்து போனவருடைய 'Popularity' ஐக் குறிக்கிறது' என்றேன் நான்.

நாகேஷ் சொன்னார் :

"அவர் இறந்தது உண்மைதானான்னு Confirm பண்ணிக்க பாதிப் பேர் வந்திருப்பாங்களா இருக்கும்" என்று என் காதோடு மட்டும் சொன்னார்.

எனக்கு வந்த சிரிப்பை அடக்க முடியாமல் தவித்தேன்.

"இந்த மாதிரி நேரத்தில் உன் பக்கத்தில் இருந்தாலே இதுதான்ப்பா ஆபத்து" என்று சொல்லியபடியே அங்கிருந்து நழுவி விட்டேன்.

வு

தனக்கென்று ஒரு

நாடகக் குழு இல்லாமல் பல அமெச்சூர் நாடகக் குழுக்களிலும் நடித்துக் கொண்டிருந்த நாகேஷ், எனது ராகினி ரெக்ரியேஷன்ஸ் குழுவின் "மேஜர் சந்திரகாந்த்" நாடகத்தைப் பார்த்துத்தான் எனது குழுவிலே எப்படியாவது சேர்ந்துவிட வேண்டுமென்று பல முறை என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அடிக்கடி இந்த நாடகம் நடக்கும் போது மேடைக்கு வருவார்.

சைக்கிளில் வந்தபடியே செய்தித்தாளை "ஸார், பேப்பர்!" என்று சொல்லி பேப்பர் பையன் தூக்கி வீட்டினுள் எறிந்து விட்டுப் போகிற மாதிரி அந்த நாடகத்திலே ஒரு காட்சி வரும். வேறு யாருமில்லையென்றால் அந்த பேப்பர் போடும் பையனாக நான் வந்து பேப்பர் போட்டு விட்டுப் போவேன். இந்த நாடகம் நடக்கின்றபோது ஒரு முறை மேடைக்கு வந்த நாகேஷ், "இன்னிக்கு நான் பேப்பர் போடறேன் பாலு" என்று கெஞ்சினார்.

க

அந்தக் காட்சியில் நடித்தது நாகேஷ்தான் என்று புரிந்து கொண்ட நாடகப் பார்வையாளர்கள் மத்தியிலே அன்றைக்குப் பெரிய சலசலப்பு ஏற்பட்டது.

நாகேஷைக் கதாநாயகனாக வைத்து ஏன் ஒரு நாடகம் எழுதக் கூடாது என்கிற எண்ணம் அன்றைக்குத்தான் எனக்குத் தோன்றியது.

லை

நான் அப்போது அக்கவுண்டண்ட் ஜெனரல் அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். என்னைத் தேடி ஆபீசுக்கும் அடிக்கடி வருவார். திரைப்படங்களில் நடிக்கத் தொடங்கி நாகேஷ் பிரபலமாகிக் கொண்டிருந்த நேரம் அது. அவர் என்னைத் தேடி வருவதை அலுவலகத்திலுள்ள அத்தனை பேரும் ஆச்சர்யத்துடன் பார்ப்பார்கள்.

அவரை மனத்தில் வைத்துக் கொண்டு சர்வர் சுந்தரம் நாடகம் எழுதிக் கொண்டிருந்த போது ஒரு நாள் நான் அவரிடம் கேட்டேன்:

"நீ ஒரு சிறந்த நடிகனாக வர வேண்டுமா? இல்லை வீட்டுக்கு வீடு பேசப்படும் House Hold Name என்கிற புகழ் மட்டும் போதுமா?"

"இரண்டும்" என்றார் தயங்காமல்.

'சர்வர் சுந்தரம்' அவரை இரண்டு மாக்கியது!

வெ

ஒரு நாடக அரங்கேற்ற தினம். 'எதிர் நீச்சல்' என்று நினைக்கிறேன். புதிதாக வாங்கிய தனது 'டூரர்' காரில் என்னை முன் சீட்டில் உட்கார வைத்துக் கொண்டு தாமே ஓட்டிக் கொண்டு வந்தார். கார் ஓட்டுவது அவருக்கு ரொம்பவும் பிடிக்கும்.

ஆலிவர் சாலையில் உள்ள மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப் போய்க் கொண்டிருக்கிறோம். கதீட்ரல் சாலை. காரின் வேகம் 80, 90, என்று மேலே மேலே மீட்டர் காட்டிக் கொண்டிருக்கிறது. எனக்கு அந்த வேகத்தைப் பார்த்து அஸ்தியில் ஜுரம் கண்டு விட்டது.

"கொஞ்சம் ஸ்பீடைக் குறைப்பா; எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது. நாம் போக வேண்டிய இடம் மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்; ராயப்பேட்டை ஆஸ்பத்திரி இல்லை" என்று சொன்னேன்.

"என்ன அப்படிச் சொல்லிட்டே பாலு! எதிர்கால தமிழகத்தின் ஒரு மிகச் சிறந்த சினிமா டைரக்டரை என் பக்கத்திலே வைத்துக் கொண்டு கார் ஓட்டும் போது எனக்கு என்ன பொறுப்பில்லையா?" என்று நாகேஷ் சொன்னார்.

"நானாவது சினிமா டைரக்டராவது... ச்சீ... போடா" என்றேன்.

"நிஜம் பாலு! நடக்குதா இல்லையா பாரு!"

நாகேஷின் ஜோஸ்யத்தில் அன்று எனக்கு நம்பிக்கையில்லை.

இந்தச் சம்பவம் நடந்த ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பே...

'சோ' எழுதிய நாடகத்தை நான் இயக்கிக் கொண்டிருந்தேன். ஒருநாள் ஒத்திகையின்போது 'சோ' அவர்களும் இதே கருத்தைத்தான் சொன்னார்கள்.

"எதிர்காலத்தில் நீ ஸ்ரீதர் மாதிரி பெரிய டைரக்டராக வருவாய் பாலு" என்று.



• சர்வர் சுந்தரம் (படம் உதவி : பிலிம் நியூஸ் ஆனந்தன்)

ஏறத்தாழ 25 ஆண்டுகள் கழித்து எனக்கு 'பத்மஸ்ரீ' விருது அளிக்கப்பட்ட அன்று நான் குற்றாலத்தில் 'ருத்ர வீணா' என்கிற தெலுங்குப் படப்பிடிப்பில் இருந்தேன். யூனிட்டில் உள்ள அத்தனை பேரும் மாலைகளைப் போட்டு எனக்கு மரியாதை செய்து மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

சோ, நாகேஷ் இருவரையும்தான் அன்று என் மனத்தில் நினைத்துக் கொண்டேன்.

எனக்கும் நாகேஷுக்குமுள்ள தொடர்பு நீடித்தது. 'வாடா போடா' என்று பேசிக் கொள்ளும் அளவிற்கு எங்களுடைய நட்பு மிக மிக நெருக்கமாக இருந்த நேரம்.

'சர்வர் சுந்தரம்' படத்தின் முதல் நாள் படப்பிடிப்பின் போது நான் செட்டில் இருந்தேன். படப்பிடிப்பைப் பார்த்துக் கொண்டு.

'பாலு ஸார்' என்று என்னைக் கூப்பிட்டார் நாகேஷ். கிண்டல் செய்வது போலிருந்தது எனக்கு.

"என்னடா கிண்டல் பண்றே" என்று கேட்டேன்.

அதற்கு நாகேஷ் சொன்னார்:

"நமது நட்பு வேறு; தொழில்ரீதியான தொடர்பு வேறு; இந்தப் படப்பிடிப்பு தளத்திலே நீ மரியாதைக்குரிய நாடகாசிரியர்; கதாசிரியர்; வசனகர்த்தா. மற்றவர்களுக்கு மத்தியில் நான் உன்னை மரியாதையாக அழைப்பதுதான் முறை; அப்பொழுதுதான், திரைத் துறையைச் சேர்ந்த மற்றவர்களும் உன்னை மரியாதையுடன் நடத்துவார்கள்."

நாகேஷின் தூரப் பார்வையையும் நற்பண்பையும் எண்ணி வியந்தேன்.

என் மீது அவருக்கும் அவர் மீது எனக்கும் அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

நாடக அரங்கேற்றத்தன்று காலையிலேயே இருவரும் அரங்கிற்குச் சென்று விடுவோம். நாடகம் சம்பந்தப்பட்ட எந்தச் சின்ன விஷயமாக இருந்தாலும் நானே அவற்றை நேரிடையாக Check பண்ணிப் பார்த்துக் கொள்வேன். அதே போலத்தான் நாகேஷும். இசை, ஒளி அமைப்பு, செட் போன்றவற்றில் மிகவும் கவனம் செலுத்துவார். எண்ணற்ற படங்களில் நடித்துக் கொண்டிருந்த போதும் நாடகத்தன்று மாலை நாலு மணிக்கே நாடக அரங்கத்திற்கு வந்து விடுவார். மேடை நாடகத்தில் அவர் காட்டிய வியக்கத்தக்க திறனை இன்று வரை நான் யாரிடமும் கண்டதில்லை. நாகேஷ் நாடக உலகில் பிடித்த இடத்தை இன்று வரை எவரும் எட்டிப் பிடித்ததில்லை என்பதுதான் எனது தாழ்மையான அபிப்பிராயம்.

சர்வர் சுந்தரம் நாடகத்தில் ஒரு காட்சி! நாகேஷ் மலர்ச் செண்டுடன் வந்து கதாநாயகியிடம் தன் காதலை வெளிப்படுத்தும் கட்டம். அவள் தன்னைக் காதலிக்கவில்லையென்கிற பேரிடியைக் கேட்ட சுந்தரம் ஏமாற்றத்துடன் திரும்பும் போது அவன் கைகளிலே இருக்கும் பெரிய பூச்செண்டைப் பார்த்து விட்டு திரும்பிக் கதாநாயகியிடம் வருவான். "கையிலே பூச்செண்டோட இந்த வீட்டுக்குள்ளே நான் நுழைஞ்சதை ரொம்பப் பேர் வீட்டுக்கு வெளியே நின்னு பார்த்துகிட்டிருந்தாங்க. இந்தப் பூச்செண்டை நான் திருப்பிக் கொண்டு போறதை அவங்க பார்க்க வேண்டாம்னு நினைக்கிறேன். அதனாலே உங்க பர்மிஷனோட இதை ஹால்ல ஒரு ஓரமா இங்கேயே வச்சுட்டுப் போயிடறேன்! பதிலுக்கு உங்ககிட்டே நான் ஒரு பரிசு கேட்பேன். அதை மட்டும் இல்லேன்னு நீங்க சொல்லிடக் கூடாது; இதோ, இந்த குப்பைக் கூடையைத்தான் பரிசாக் கேட்கிறேன். ஏன் தெரியுமா? நான் போனப்புறம் தவறிப் போய்க் கூட இந்த மலர்ச் செண்டை நீங்க குப்பைக் கூடையிலே போட்டுடக் கூடாதேன்னுதான்! வரேங்க."

கையில் குப்பைக் கூடையுடன் சுந்தரம் மேடையை விட்டு வெளியேறுவான்.

தொடர்ந்து இரண்டு நிமிடங்கள் ரசிகர்கள் கைதட்டுவார்கள்.

இந்தக் காட்சியில் நாகேஷின் நடிப்பும் சோக இழையோடு, ஏற்ற இறக்கங்களுடன் பேசும் வசனமும் காண்பவர்கள் நெஞ்சைக் கரைத்து விடும். சர்வர் சுந்தரம் எத்தனையோ முறை நாடகமாக நடத்தப்பட்டது. நாடக அரங்கின் எந்த மூலையில் நான் இருந்தாலும் இந்தக் காட்சியை மட்டும் நான் பார்க்கத் தவறியதேயில்லை. எத்தனையோ படங்களை இயக்கிய எனக்கு நாகேஷ் நடித்த இந்தக் காட்சி மனத்தில் பதிந்த அளவிற்கு வேறு எதுவும் பதிந்ததில்லை.

இந்தக் காலத்து அளவுகோலை வைத்துப் பார்க்கும்போது இந்தச் சம்பவம் சற்று மிகையானதுதான்; அதே போல் நாகேஷின் நடிப்பும் சற்று மிகைப்படுத்தப்பட்டதுதான் என்றாலும் அந்தக் காலத்தில் அவை பிரமிக்கத்தக்க வரவேற்பைப் பெற்றன என்பதுதான் உண்மை.

நகைச்சுவை கலந்த சோகம்; சோகம் கலந்த நகைச்சுவை! இந்தக் கலவையைக் கற்று வைத்த நாடக நடிகர்களோ திரைப்பட நடிகர்களோ மிக மிகக் குறைவு. இந்தப் பட்டியலில் நாகேஷுக்குத்தான் முதலிடம் - இது எனது தனிப்பட்ட கருத்து.

நாகேஷைப் பற்றி நினைத்துப் பார்க்கும் போது... "I Kiss the feet of talent" - Harry Cohn என்கிற Film maker சொன்னதுதான் மனத் திரையில் ஓடுகிறது.

(தொடரும்)

பொதுமக்களின் கருத்தைக் கண்டு பலவீனர்கள் நடுங்குகிறார்கள்; முட்டாள்கள் அத்துடன் மோதுகிறார்கள்; அறிவாளிகள் அதை எடை போடுகிறார்கள்; சாமர்த்தியசாலிகளோ அதை உருவாக்குகிறார்கள்! - மடாம் ரோலந்து

தகவல் : ஜே.பி. ராஜேந்திரன்



காரணம்

“சீக்கிரமா வந்து குளிங்களேன். பாத்ரூம் காலியாயிருக்கு...”

ரஞ்சனி குரல் கொடுத்தாள். கோபாலன், கலாவோடு உட்கார்ந்திருந்தான். கலாவுக்கு கணக்கு வராது. பக்கத்தில் உட்கார்ந்து சொல்லிக் கொடுக்க வேண்டும்.

“கலாவையும் கூட்டிட்டு வாங்க...”

“மேக்ஸ் பண்ணிட்டிருக்கு. கொஞ்சம் வெயிட் பண்ணு.”

“பாத்ரூம்ல யாராச்சும் போயிடுவாங்க. குளிப்பாட்டி உட்டுட்டு, சீக்கிரம் குளிங்க...”

குளித்து விட்டு என்ன செய்ய? யாரையாவது போய்ப் பார்க்க வேண்டும். அக்கவுண்ட்ஸில் 12 வருடம் சர்வீஸ். எந்தக் கணக்கை எப்படியும் மாற்ற முடியும். அதிலெல்லாம் நான் சூரன். எனக்கு வேலை கொடுங்கள். கெஞ்ச வேண்டும். உனக்கு மேல் நான் சூரன், போடா என்று விடலாம்.

“இன்னும் குளிக்கப் போகலியா?”

ரூமில் எட்டிப் பார்த்தாள் ரஞ்சனி. இவன் தலைநிமிர்ந்தான்.

“போறேன்... இரு”

“என்ன, என் கஷ்டத்தைப் புரிஞ்சுக்கவே மாட்டீங்களா? நீங்களும், அவளும் குளிச்சு துணியைப் போட்டாத்தானே நான் தோச்சுப் போட்டுட்டுக் கௌம்ப சரியாயிருக்கும்? மணி வேற ஓடிக்கிட்டே இருக்கு. என்ன மனுஷனோ...”

“ஆமா, இப்போ குளிச்சுட்டு என்ன பண்ணப் போறேன்?”

“ஒண்ணும் பண்ணப் போறதில்லைங்கறதுக்காக அப்படியே உட்கார்ந்துக்கிட்டிருப்பீங்களா. அப்போ, உங்க துணியை நீங்கதான் தோச்சுக்கணும்!”

அசந்தர்ப்பமாய் வார்த்தை வந்து விழுந்து விட்டது. எரிச்சல். இரண்டரை மாத எரிச்சல். கூடவே காலை அவசரமும் இணைந்து விட்டது. நரசம்மாவை வேலையிலிருந்து நிறுத்தி விட்டதிலிருந்து எரிச்சல் இன்னும் ஓவர்டோஸ்.

நரசம்மா பெரிய துணை. துணி, பாத்திரம், மொஸைக் துடைத்தல் எல்லாம் அவள் டிபார்ட்மெண்ட். ஒரு சம்பளம் மட்டுமே என்றான போது, அவள் நிறுத்தப்பட்டாள்.

“நாம ரெண்டு பேருமே செஞ்சுப் போம். அடுத்த வேலை கெடச்ச செட்டில் ஆனவுடனே, திருப்பியும் அவளைக் கூப்பிட்டுக்கலாம்.”

கோபாலன் சொன்னதுதான் நியாயமாகப் பட்டது. பேப்பர், கேபிள் டீ.வி. போன்ற உபரி செலவு கட்டுப்பாட்டில் இதுவும் ஒரு அங்கமானது.

“அம்மா பவுடர் போடு...”

கலா துண்டைக் கட்டிக் கொண்டு நின்றாள்.

“குளிச்சாச்சாடி கண்ணு? அப்பா குளிக்க



நாங்களா?"

"ம்..."

பவுடர் போட்டு, ஸ்கூல் கவுனை மாட்டி விட்டாள். அப்புறம் வேலை சரசரவென பறக்கத் துவங்கியது. கோபாலன் பேசவில்லை. கலாவை ஸ்கூலில் விட்டுத் திரும்பினான். ரஞ்சனி போவதையும் பார்த்துக் கொண்டிருந்தான். எதுவும் சொல்லவில்லை.

நெரிசல் அவ்வளவாயில்லை. இன்னும் ஒன்றிரண்டு ஸ்டாப் பிங்குக்குப் பின் சீட் கிடைத்தாலும் கிடைக்கலாம். கம்பியோரம் சாய்ந்து கொண்டான் ரஞ்சனி. மீண்டும் கோபாலன் ஞாபகமே வந்தது.

எல்லாம் திமிர். வேகம். கல்யாணம் ஆகி, ஒரு குழந்தை இருக்கிறது என்ற எண்ணம் இருந்தால், பயம் வந்திருக்கும். சண்டை வந்திருக்காது. பன்னிரெண்டு வருட வேலையை விட்டு விட்டு வந்திருக்கத் தோன்றாது. அப்படித் தோன்றியது என்றால் என்ன அர்த்தம், திமிர் தவிர? வேலை கிடைக்காமலா போய் விடும்?



"இங்கே பாரு கபாலி, நீ கொடுக்கறது ஆயிரமாவது 'மாமூல' இருக்கலாம்... அதுக்காக எங்க ஸ்டேஷன் சார்பா உனக்கு கட்–அவுட் வச்சி விழா எடுக்கணும்னு சொல்றது நல்லா இல்லே...!"

– ஸ்வீட் ரவி

அதுவும் என் பன்னிரண்டு வருட சர்வீஸ் சாமர்த்தியத்துக்கு என்ற பேச்சு. தொட்டாற்சிணுங்கி. எப்படி பனிரெண்டு வருடம் ஒரே கம்பெனியில் குப்பை கொட்டினார் என்பதே ஆச்சரியம்.

பிடிக்காமல்தான் இருந்தார். வாய்ப்புக்காகக் காத்திருந்தார் என்றுதான் தோன்றுகிறது. எந்த அலுவலகத்தில் பிரச்னை இல்லாமல் இருக்கிறது? ஆனால் எல்லாமே இவருக்கு பூதாகாரமானவை. அதை விட, தான்தான் புத்திசாலி என்ற நினைப்பு வேறு.

ராமசாமி உருவில் வாய்ப்பு வந்தது. சண்டை போட்டு விட்டு, டைப் பண்ணி ரெசிக்னேஷனைக் கொடுத்து விட்டு வந்து விட்டார்.

"திறமையிருக்கறவனுக்கு எங்கே போனாலும் வேலை உண்டும்மா, பாரு, எம்.டி.யே ஓடி வரானா இல்லியான்னு."

யாரும் வரவில்லை. வீணான சண்டை என்றுதான் வழியில் பார்த்த கௌரி சொன்னாள். இவர் ஏதோ செலவுகளை, வேறு வேறு எண்ட்டிரிகளாய் மாற்றிப் போட, ராமசாமி கேள்வி கேட்க, திமிராய் பதில். 'இதை இப்படித்தான் அக்கவுண்ட் பண்ணணும்னு கூட தெரியாதவனையெல்லாம் அக்கவுண்ட்ஸ் சீப்பா போட்டா உருப்படுமா கம்பெனி!'

கம்பெனி, ராமசாமி பக்கம்தான் நின்றது. பெரிய தவறைக் கண்டுபிடித்து விட்டதாகக் கூட பாராட்டினார்களாம். இருக்கலாம். இவர் செய்வது பலதும், எல்லா நேரமும் சரியாயிருப்பதில்லை. குறைந்தபட்சம் சண்டை போடாமலிருந்திருக்கலாம். அம்மா, ஐயா என்று காலில் விழுந்தாவது வேறு துணை நிறுவனங்களுக்கு மாற்றிக் கொண்டு போயிருக்கலாம். எம்.டி.க்கும், கோபாலன் மேல் நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை.

பஸ்ஸின் இறங்கு படியிடம் போய் நின்று கொண்டாள். அடுத்த ஸ்டாப்பில் இறங்க வேண்டும். இன்னும் பதினைந்து நிமிடம் இருக்கிறது. சீக்கிரமாகத்தான் வந்து விட்டோம்.

"என்னம்மா, இப்படி வர?"

திரும்பிப் பார்த்தாள். ராமசாமி. ஒன்றிரண்டு முறை வீட்டுக்கு வந்திருக்கிறார். ஞாபகம் இருந்தது.

"நீங்க எப்படி சார், இந்த பஸ்ல?"

"இங்க ஒரு கிரகப்பிரவேசம். அவசரமா போயிண்டிருக்கேன்."

சந்தோஷமாய் இருந்தது. பழையது நினைவில் வைத்துக் கொள்ளாமல் சரளமாய்ப் பேசுகிறார். இப்படி ஒரு மனுஷனோடவா இவர் சண்டை போடுவார்?

பஸ் நிற்க, ராமசாமியும் இறங்கினார்:

"எப்படி இருக்கார் உங்க ஹஸ்பெண்ட்?"

மெல்லச் சிரித்தாள். என்ன சொல்வது? அக்கறையோடு விசாரிக்கிறார்.

"வீட்டுலதான் சார் இருக்காரு!"

"வேற எதுவும் கெடைக்கலியா?"

இல்லையெனத் தலையாட்டினாள்.

"அப்போ நீதான் பாரம் சுமக்கறியா?"

தலையாட்டினாள்.

"கஷ்டந்தான். எனக்கு ஒண்ணும் மனசில இல்லன்னு வெச்சிக்கோ. காப்பி சாப்பிட

ஆர். வெங்கடேஷ்

ஒவ்வொரு விழாவிலும் ஸ்ரீராம் அளிப்பது பரிசுகள் மட்டும்தானா? அல்ல.

ஒரு பசுமையான உறவின் ஆரம்பம். இனிய நினைவுகளுக்கு ஒரு தொடக்கம்.

**ஸ்ரீராம்
விஜயதசமி விழா
பரபரப்பான 11 நாட்கள்
அக். 4 - 14, 1994.**

ஆண்டுகள் எத்தனை கடந்தால் என்ன? உங்களுக்கும் ஸ்ரீராமுக்கும் இடையே உள்ள உறவு பசுமையானது. அந்த உறவின் இனிமையை நீங்கள் மீண்டும் மீண்டும் உங்கள் நெஞ்சங்களில் அசை போட்டுச் சுவைக்க உதவும் வகையில் ஒவ்வொரு விழாக் காலத்திலும் ஸ்ரீராம் உங்கள் மீது பரிசு மழை பொழிகிறது.

ஸ்ரீராமுடன் கொண்டுள்ள உறவினால் நீங்கள் அடைந்துள்ள பயன்கள்தாம் எத்தனை, எத்தனை! சொந்த வீடு, சொந்தத்தில் தொழில், குழந்தைகளுக்கு உயர்மட்டக் கல்வி... இப்படி நீங்கள் — ஏன் நாங்களும்தான் — நினைத்துப் போற்றும் நிகழ்ச்சிகள் எத்தனையோ!

இதோ... விஜயதசமி விழா. நம்முடைய உறவைப் புதுப்பித்துக்கொள்ள மீண்டும் ஒரு வாய்ப்பு.


நினைவிருக்கட்டும். உங்களை மகிழ்விக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன — எப்போதும் போல. ரூ.75,000 வரையில் உள்ள சீட்டுகளை எடுப்பவர்களுக்கு, பொதுத்துறை, தனியார்துறை, அரசுப்பணி அல்லது அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரியும் மூன்று பேர் உத்தரவாதம் அளித்தால் போதுமானது.


சந்தாதாரர் பரிசு

வ. எண்	சீட்டின் மதிப்பு*	சந்தாதாரர் பரிசு
1.	250 x 40 = ரூ.10,000/-	3 கிராம் வெள்ளிக்காசு
2.	500 x 30 = ரூ.15,000/-	S.S. சாஸ்பாட் (S.S. Saucepot)
3.	625 x 40 = ரூ.25,000/-	ஹீரோ கைல் கடாய்
4.	1000 x 30 = ரூ.30,000/-	S.S. சர்விங் பௌல்
5.	1000 x 50 = ரூ.50,000/-	காவி காப்பர் பாட்டம் மினி ஃப்ரை
6.	1250 x 60 = ரூ.75,000/-	மில்டன் அல்ட்ரா காஸரோல்
7.	3000 x 30 = ரூ.90,000/-	HM மில்க் பான்
8.	2500 x 40 = ரூ.1,00,000/-	காப்பர் பாட்டம் ஸ்டூபான்
9.	5000 x 30 = ரூ.1,50,000/-	மில்டன் பாஷன் செட்
10.	5000 x 40 = ரூ.2,00,000/-	25 கிராம் வெள்ளிக்காசு (இரண்டு)
11.	10000 x 30 = ரூ.3,00,000/-	2 கிராம் தங்கக் காசு
12.	20000 x 25 = ரூ.5,00,000/-	4 கிராம் தங்கக் காசு

* நுழைவுக் கட்டணம் தனி


வேலையில் இருக்கும் பெண்மணி ரூ.15,000 வரையில் உள்ள சீட்டுகளை எடுக்கும்போது அவருடைய கணவரின் உத்தரவாதமே போதுமானது.


1



2



3


4



5


6


7


8


9


10 11 12

முன் அங்கீகாரம் பெறப்பட்டது.

லாமா?"

மணி பார்த்தாள்.

"நேரம் இருக்கோல்லியோ. போலா மோன்னோ?"

போகலாம். அவசரமில்லை. லேட்டானால் ஹெச்.எம்.மிடம் சொல்லிக் கொள்ளலாம். முதல் பீரியடும் இல்லை.

மின்விசிறிக்குக் கீழே அமர்ந்து கொண்டார்கள். காப்பி போதுமென்றாள் ரஞ்சனி.

"வருத்தமாதான் இருக்கும். என்ன பண்றது? பெரியவாளுக்கு மரியாதை கொடுக்கணும்னு தெரியணும். ஆபீஸ் முழுக்க சண்டைதான். எவனாவது இவனை நல்லவன்னு சொல்லச் சொல்லு பார்க்கலாம்."

காப்பி வந்தது. குடிக்கத் துவங்கினார்கள்.

"நான் ஒண்ணும் பெரிசா கேட்டுடலை. ஏண்டாப்பா, இப்படி மாத்தி எண்ட்ரி போட்டு அட்ஜஸ்மெண்ட் வேலையெல்லாம் பண்றேன்னேன். சண்டைக்கு வந்துட்டான்!"

செய்திருப்பார். காப்பி தம்ளரைக் கீழே வைத்தாள்.

"சண்டை போடாம இருந்தாலாவது, ஏதாவது பண்ணலாம். இப்பவும் ஒண்ணும் குடி முழுகிப் போயிடலை. என்னை வந்து பாக்கச் சொல்லேன். இந்தக் கம்பெனி இல்லன்னா, ஆயிரம் கம்பெனி. நான் சொல்றேன். உன்னைப் பார்க்கறச்சேவே கஷ்டமான்னா இருக்கு. என்னமா இருந்தவ. எளச்சு போனாப் போல இருக்கியே? சரியா சாப்பிடறதில்லியா?"


அப்பா கூட இவ்வளவு அன்பாய்க் கேட்டதில்லை. கண்ணோரம் நீர் திரண்டு விட்டது. கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"பக்கத்து வீட்லே ரெண்டு பேரும் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்களாம்...!"

"அதனாலே என்ன...?"

"ஒண்ணும் வித்தியாசம் தெரியலை. நம்ம மாதிரி தானே சண்டை போட்டுக்கறாங்க?"

— கே.வி.



"அழாதம்மா. அவன் நல்ல டேலண்டட் ஆள்ம்மா. என்கிட்ட அனுப்பிவை. நான் சொல்றேன், என்ன பண்ணலாம்னு. வீணா மனசைப் போட்டுக் கொழப்பிக்காதே. நான் இருக்கேனோல்லியோ?"

"என்ன மிஸ், உங்க ஹஸ்பெண்ட் பிஸினெஸ் ஸ்டார்ட் பண்ணிட்டாரா?"

ஜோதி டீச்சர். டிபன் பாக்ஸிலிருந்து ரஞ்சனி தலைநிமிர்த்தினாள்.

"இன்னும் பைனான்ஸ் செட்டில் ஆகலை."

"இரண்டு மாசத்துக்கு மேல ஆவுதுல்ல?"

வெறுமனே தலையாட்டினாள். மரியாதைக்குச் சொன்ன பொய். பிஸினெஸ் ஆரம்பிக்கப் போகிறார். அதனால்தான் வேலையை விட்டு விட்டார். மேலே மேலே இப்போது பொய்யைத் தொடர வேண்டும்.

"எங்க ரிலேடிவ் ஒருத்தர் இருக்காருங்க. அவுரு பைனான்ஸ் வாங்கித் தரது. போக்கு வரத்து எல்லாம் பாத்திட்டிருக்காரு. அவர வேணா வரச் சொல்லட்டுங்களா."

"இன்ட்ரஸ்ட் எவ்ளோ இருக்கும்?"

"நமக்கு அதெல்லாம் தெரியாதுங்க. சும்மா வீட்டுக்கு வருவாரு. எங்க வீட்டுக்காரர் பக்கச் சொந்தம். நல்ல மனுஷன்."

"இல்ல. இப்போது வட்டி நெறைய கேக்கறாங்க. அதான் பிரச்னை. இவரு கூட ரெண்டு மூணு பேரை காண்டாக்ட் பண்ணாரு. அப்புறம், இப்போ பேங்க்ல டிரை பண்ணிட்டிருக்காரு."

எவ்வளவு சரளமான பொய்கள்? வெட்கமாக இருந்தது. பரிதாபமாக இருந்தது. தன் நிலை இவ்வளவு தாழும் என்று நினைத்ததில்லை. எல்லாம் சீக்கிரம் நடந்து விடும் போல்தான் தோன்றியது. என்னவோ மறு மாசமே வேறொரு வேலை கிடைத்து விடும் போல் பேசினார். அவ்வளவு சுலபமில்லை என்பது போகப் போகத்தான் தெரிந்தது.

பேப்பரில் விளம்பரம் கூடக் கொடுத்தார். தம் திறமையையும், அனுபவத்தையும் பயன்படுத்திக் கொள்ளும்படி. யாரும் பதிலே போடவில்லை. அதுதான் நிலைமை. ஆனால், அவரால் அதை ஏற்க முடியவில்லை. யார் வெற்றிலைப் பாக்கு வைத்து அழைப்பார்கள்

சண்டைக்காரனை?

வேறு வழியே இல்லை. ராமசாமியைத்தான் போய்ப் பார்க்கச் சொல்ல வேண்டும். நிச்சயம் முரண்டு பிடிப்பார். சமாளித்து விடலாம். நிலைமை சொல்லி. இரண்டரை மாத வெறுமை நிச்சயம் மனதை மாற்றியிருக்கும். மாறவில்லையென்றால்? இல்லை. மாற்றியே ஆக வேண்டும்.

இனி இந்தப் பொய்கள், அவமானங்கள் தாங்க முடியாது. இதைத்தான் முதலில் சொல்ல வேண்டும். வேறு வார்த்தையில்லை. வாழ்வதற்கு மானம் முக்கியம். அதற்கு சொந்த வேலை, சம்பளம், கௌரவம் அவசியம். நாலு பேர் மதிப்பது அவசியம். கோபங்களை மூட்டை கட்டு. பவ்யம் பழகு. ராமசாமியைப் போய்ப் பார்.

அழுதேனும் சாதித்து விட வேண்டும்.

கடேரங்க கத்தரிக்காய் வாங்கிக் கொண்டான். எண்ணெயில் வாட்டி துவையல். கோபாலனுக்குப் பிடிக்கும். அங்கேயிருந்துதான் விஷயத்தை ஆரம்பிக்க வேண்டும். ரங்கநாதன் தெரு இடித்துக் கொண்டிருந்தது. கலாவுக்கு புடலங்காய்த் துண்டு வாங்கிக் கொண்டாள். இடிகளைச் சமாளித்தபடி நடக்கத் துவங்கினாள்.

என்ன ஆனாலும் பரவாயில்லை. குடும்பத்துக்காக விட்டுக் கொடு என்று கேட்க வேண்டியதுதான்.

"ஏய், பார்த்து போக மாட்ட..."

விகாரமாய்க் குரல் வரவே, அரண்டு போய்ச் சட்டென நின்றாள். திரும்ப, பாஷா!

"ஐயோ.... நீங்களாம்மா, சாரி.... யாரோன்னு..."

கோபாலன் ஆபீஸ் பியூன். சைக்கிளிலிருந்து இறங்கினான்.

"ஐயா எப்படிம்மா இருக்காரு. பாப்பா?"

மெல்லப் புன்னகைத்தாள். கூட நடக்கத் துவங்கினான்.

"வேலைக்குப் போறாருங்களா?"

"பாத்துக்கிட்டு இருக்காரு."

"காலையிலே ராமசாமி சாரைப் பாத்தீங்களா?"

"ம்..."

மெல்லச் சிரித்தான். என்னவோ போல் இருந்தது.

"ஹோட்டலுக்கு எல்லாம் போனீங்களாம்?"

"ஆமா, அதுக்கென்ன?"

"இல்ல, சொன்னாரு."

மறுபடி இளித்தான்.

"ஆபீஸ் புல்லா அதான் பேச்சு இன்னிக்கு. கூப்ட்ட எடத்துக்கெல்லாம் வருவீங்கன்னு..."

தவறு சட்டென உறைத்தது. வேறு ஏதோ அர்த்தமல்லவா இதற்கு? கோபம் கொப்பளித்தது.

"எவன்டா சொன்னது?"

பாஷா திகைத்தான். ரஞ்சனி கண்கள் கலங்குவது, என்னவோ போல் தோன்றியது.

"ராமசாமி சார்தாம்மா. அவருதான் எல்லார்கிட்டேயும் சொன்னாரு. அவரை உங்களுக்கு நல்ல பழக்கமாம். சிரிச்சு சிரிச்சு பேசுவீங்களாம். நான் கூட்டா வரானா இல்லியான்னு பாருடான்னு சொல்லிட்டிருந்தாரும்மா."

அதிர்ச்சியாய் இருந்தது. ஜீரணிக்க முடியவில்லை. தொண்டையைத் துக்கம் இறுக்கியது.

"முன்ன இதுபோல சொல்லி, தகராறு ஆயிதானம்மா, சாரு ரிசைன் பண்ணாரு? தெரியாதுங்களா உங்களுக்கு?"

மற்றுமொரு அதிர்ச்சி. இரண்டரை மாதமாய் இதைச் சொல்லாமலா புழுங்கிக் கொண்டிருக்கிறார்? கண்ணீர் வழியத் துவங்கியது. இந்த முறை அதை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.



மதுரை ஆரப்பாளையம் பஸ் நிலையம் அருகில் உள்ள ஹோட்டல் ஒன்றின் பெயர் : "விசிறி ராஜா புன்னகை உணவகம்!"

காரணம்?

ஹோட்டலின் உரிமையாளர் வேலுச்சாமி எப்போதும் கையில் விசிறியுடன் புன்னகை தவழும் முகத்துடன் திகழ்வாராம்!

— பி. ராஜசேகரன்

'வேதபுரத்து வியாபாரிகளுக்கு மணலைக் கயிறாகத் திரிக்கும் ஆற்றல் உண்டு. இந்திர பிரஸ்தத்து வியாபாரிகளோ அக் 'கயிற்றை'க் 'கார்ப்பெட்'டாக்கி விற்கக் கூடிய சாமர்த்தியசாலிகள்! ('இந்திர பிரஸ்தத்து வணிகமும் பொருளாதாரமும்' - டாக்டர் ஜன்முரளி சிங் - பக். 17-19)

"நீங்களா? எப்படி... இதே 'ஃப்ளைட்டி'லா வந்தீர்கள்?" என்றாள் அபூர்வா நஞ்சுண்டனிடம்.

"நானா? புரியலே. நான் வேதபுரத்தில் தானே இருக்கேன்" என்றான் நஞ்சுண்டன்.

அவன் பெட்டிகளை 'ட்ராலி'யில் வைத்துத் தள்ளிக் கொண்டு போகத் தொடங்கினான்.

"அப்படியானால், இந்திர பிரஸ்தத்தில் எங்களுடன் யார் பேசினாங்க?"

"நான் பேசலியே."

விமான நிலையத்தை விட்டு வெளியே வந்தார்கள்.

"உங்கள் குரல்தான். சந்தேகமேயில்லே. இல்லியா, வனிதா?"

"அப்படித்தான் பட்டது."

அவன் சாமான்களைக் காரில் ஏற்றினான். வனிதா பின்னால் உட்கார்ந்தாள்.

"என்ன சொல்றீங்க? எனக்கு ஒண்ணும் புரியலே..." என்றான் நஞ்சுண்டன்.

"நான் இந்த 'ஃப்ளைட்'லே வரேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"இந்திர பிரஸ்தத்திலேந்து தகவல் வந்தது."

"அப்போ, நம்ம தலைவர் என்னை உடனே வரச் சொல்லலியா?"

"இல்லியே..."

"அப்போ... தலைவர் என்னை உடனே வரச் சொன்னதா உங்க குரல்லே என் கிட்டே பேசினது யாரு?"

"என் குரல்லியா?"

"உங்க குரல்தான்... உடனே எங்களை நாங்க இருந்த இடத்திலே வந்து பாக்கிறதா சொன்னீங்க. வரவேயில்லே. என்ன ஆச்சுன்னு எனக்குப் புரியலே..."

"நான் எப்படி உங்களை வந்து பார்த்திருக்க முடியும்? நான் கடவுளா இருந்தா, ஒரே சமயத்திலே பல இடங்களிலே இருக்க முடியும். கடவுளை விடுங்க, நான் ஒரு மாந்திரீகன் கூட இல்லே."

அபூர்வா பக்க வாட்டமாகத் தலையைச் சாய்த்து அவனையே சில விநாடிகள் உற்றுப் பார்த்தாள்.

இவன் கூறுவது உண்மைதானா?

மிக இயல்பாகப் பேசுகிறான். பொய் சொல்லும் போது, மிக நுணுக்கமாகக் காட்டி விடக் கூடிய சலனத்தின் நிழல் கூட அவன் முகத்தில் தெரியவில்லை. அப்படியானால்...

இந்திர பிரஸ்தத்துக்காரர்கள் அவர்களுடைய கை வரிசையை அவளிடம் காட்டி விட்டார்கள் என்று அர்த்தமா?

வேதபுரத்து வியாபாரிகள் மணலைக் கயிறாகத் திரிக்கக் கூடியவர்கள் என்றால், இந்திர பிரஸ்தத்து வியாபாரிகள் அக் 'கயிற்றை' 'கார்ப்பெட்'டாக்கி விற்று விடக் கூடிய சாமர்த்தியசாலிகள் என்பது வாஸ்தவந்தான்.

நஞ்சுண்டனைப் பற்றி அவர்களுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும். அவன் குரலிலேயே பேசி, அவளை வேதபுரத்துக்கு உடனே புறப்பட்டு வரும்படி செய்து விட்டார்கள். வேதபுரத்துத் தலைவர் கட்டளையாம், என்ன ஏமாற்று வேலை?

வேதபுரத்து வியாபாரிகள்

18

அப்பொழுது அவளுக்கு திடீரென்று தோன்றியது. நஞ்சுண்டன் வேதபுரத்திலிருந்தே பேசவில்லை என்பது என்ன நிச்சயம்? இந்திர பிரஸ்தத்திலிருந்து பேசுவதாகப் பொய் சொல்லியிருக்கலாம். எதற்காகப் பொய்

சொல்ல வேண்டும்?

'அவர்களுடன் பேரம் பேசாதே. நான் இந்திரபிரஸ்தத்திலிருக்கிறேன்' என்று அவளை அச்சுறுத்தவா?


ஏன் இருக்கக் கூடாது?

அப்படியானால், பேரம் பற்றி இவனுக்கு எதுவும் தெரிந்திருக்க நியாயமில்லை. இவளிடம் அதைப் பற்றிச் சொல்வது உசிதமா?

இவன் எந்தக் கட்சி?

தலைவருக்கு நெருக்கமாகவுமிருக்கிறான், நடப்பது எதுவுமே அவனுக்கு உடன்பாடில்லை என்பதைச் சூசகமாகவும் தெரிவிக்கிறான். இல்லாவிட்டால், அன்று அந்த வீட்டில், நடப்பனவற்றை ஒரு நூலாக அவளால் வெளியிட முடியுமா என்று அவன் சவால் விடுவதற்கு என்ன காரணம்?

இந்திர பிரஸ்தத்துத் தலைவருடைய அந்தரங்கச் செயலர் சொன்னவை யாவும் பொய்யாக இருக்கலாம். வேதபுரத்துத் தலைவர் அவளைத் தேர்தலில் நிறுத்தி வைக்கப் போவதில்லை என்றார். அபூர்வா தோற்க வேண்டுமென்பதற்காகத் தான் இந்திர பிரஸ்தம் அனுப்பப்பட்டாள் என்றும் அவர் சொன்னார். தோல்வியைச் சுட்டிக்காட்டி அவளைச் சுலபமாகப் புறக்



இந்திரா பார்த்தசாரதி

கணித்து விடலாமென்பதுதான் இத் திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

எல்லாமே பொய்யா?

இந்திர பிரஸ்தத்துத் தலைவர் அவளை அவர் கட்சியின் தலைமை ஏற்க வேண்டுமென்று விரும்புகிறார். இதுதான் உண்மையா? சுவிஸ் பேங்கில் அவள் பேரில் பணம்!


"நான் பேசிக் கொண்டேயிருக்கேன், நீங்க என்ன யோசிக்கறீங்க?" என்றான் நஞ்சுண்டன்.

"மன்னிக்கவும். ஒரே களைப்பு. என்ன சொல்லிட்டிருந்தீங்க? கொஞ்சம் தூங்கிட்டேன்."

"முதல்லே வாழ்த்துக்கள்... உங்களை ரொம்ப பாராட்டி நம்ம தலைவர்கிட்டே இந்திரபிரஸ்தத்துத் தலைவரு பேசிருக்காரு. உங்க கிரக சஞ்சாரம் இப்பொ உச்சத்திலேருக்கு..."

"அப்படியா....?"

"நாளைக்கு பேப்பரிலே, டீவியிலே, எல்லாத்திலும் அபூர்வாதான். அதிசயப் பெண் அபூர்வா ஆற்றிய அற்புதம்! யாருக்குமே இது வரைக்கும் கிடைக்காத அவ்வளவு விளம்பரம்!"



"நான் கதை எழுதும் போது, 'வேண்டாம்... நிறுத்து... செய்யாதே'ன்னு... என் உள்ளுணர்வு தடுக்குது, டாக்டர்!"

"இதுக்குதான், அடுத்தவங்க கதையை, திருடாதீங்கன்னு, சொல்றது...!"

— ஆர். வசந்தகுமார்

" 'யாருக்குமே கிடைக்காத'ன்னு உங்களாலே உறுதியா சொல்ல முடியுமா?"

நஞ்சுண்டன் அவளைப் பக்கவாட்டமாகத் திரும்பிப் பார்த்தான். ஓர் எச்சரிக்கைப் பார்வை போல் தெரிந்தது.

"நான் ஒண்ணு கேக்கலாமா?" என்றாள் அபூர்வா.

"என்ன?"

" 'யாருக்கும் இல்லாத', எனக்கு மட்டும் ஏன்?"

"தகுதி."

"போதாது."

"என்ன போதாது?"

"நீங்க சொல்ற காரணம்."

அவன் பதில் சொல்லவில்லை.

"நீங்க இந்திர பிரஸ்தத்துத் தலைவரைப் பார்த்ததாகக் கேள்விப்பட்டேன்" என்றாள் நஞ்சுண்டன்.

"கேள்விப்பட்டது சரிதான். நாலு பாஷையிலே என்கிட்டே பேசினதாகப் பட்டது."

"பட்டதா?"

"ஆமாம்."

அவன் அதற்கு மேல் இதைப் பற்றி வற்புறுத்திக் கேட்கவில்லை.

கார் நின்றது.

பெட்டிகளை உள்ளே வைத்த பிறகு, நஞ்சுண்டன் சோபாவில் உட்கார்ந்தான்.

"ஒரு நல்ல காப்பி கொடுக்க முடியுமா?" என்று அவன் வனிதாவைப் பார்த்துக் கேட்டான்.

"நிச்சயமா.."

வனிதா உள்ளே சென்றாள்.

அபூர்வா அவனெதிரில் 'டைனிங் டேபிள்' நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள்.

"நீங்களே ஏர்போர்ட்டுக்கு வரக் காரணம் என்ன?"

"ஏன் வரக் கூடாதா?"

"நீங்க பெரிய ஆளு..."

"யார் பெரிய ஆளு? 'பெரிய ஆளைச் சந்திக்கப் போ'ன்னு மேலிடத்திலிருந்து கட்டளை வந்தா போக வேண்டியது என் வேலை."

"நான் தேர்தல்லே நிக்கப் போறது உறுதி தானா?"

"என்ன இப்படிக் கேக்கறீங்க? இவ்வளவு விளம்பரம் எதுக்காக? தேர்தல்லே நிக்கப் போறீங்க, உங்க சாதனையை ஜனங்களுக்கு சொல்றபடி சொன்னா, யார் உங்களை எதிர்த்து நின்னாலும், 'டெபாஸிட்' காலி... அவ்வளவுதான்."

"எப்பொ தேர்தல்?"

"பத்து நாள்லே 'நாமினேஷன் பேப்பர்' 'ஃபைல்' பண்ணணும். தேர்தல் அடுத்த மாதம் 25-ஆம் தேதி."

"அவ்வளவு சீக்கிரத்திலா?"

"ஆமாம். இன்னொரு விஷயம் கேக்கணும்னு நினைச்சேன், உங்களுக்குக் 'கராத்தே' தெரியுமா?"

" 'கராத்தே'யா?"

"ஆமாம்... எதிர்க்கட்சியிலே நிக்கப் போறவரு ஒரு கராத்தே 'ப்ளாக் பெல்ட்'. உங்களுக்கும் தெரிஞ்சா ஒரு 'அடிஷனல்' தகுதி."

"அப்பொ இப்படிச் செஞ்சுடலாமே? நானே நிக்கலே. இன்னொரு 'ப்ளாக் பெல்ட்' ஆளைப் பாருங்க. தேர்தலும் வேணாம். ரெண்டு பேரையும் சண்டை போட வச்சுப் பாருங்க, யார் ஜெயிக்கிறாங்களோ அவர் தேர்தல்லே ஜெயிச்சதா அர்த்தம். சுலபமா போச்சு. இந்த வோட்டு, சீட்டு இதெல்லாம் எதுக்கு?"

நஞ்சுண்டன் புன்னகை செய்தான்.

வனிதா காப்பி கொண்டு வந்தாள்.

"இந்திர பிரஸ்தத்துத் தலைவரைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?" என்றாள் அபூர்வா.

"ஏன்?"

"ஓர் அழுத்தமான ஆள் மாதிரி எனக்குப் படுது."

"இருக்கலாம்."

"வேதபுரத்திலே அவரைப் பத்தி என்ன அபிப்பிராயம்?"

"மேல்மட்டத்திலேருக்கிறவங்களைத் தவிர, கீழ்மட்டத்திலிருக்கிறவங்க யாருக்கும், அப்படியொரு தலைவர் இருக்காருன்னே தெரியாது. அவங்களுக்குத் தெரிஞ்சதெல்

TAMILNADU PEOPLE'S BENEFIT FUND (PURASAWALKAM) LTD.,

79, Perambur Barracks Road, Purasawalkam, Madras - 600 007.
Central Government Approved (Reg. No.18-21907/91). ☎ 5323360

TNPBF

DEPOSIT SCHEME

	46 Days	3 Months	6 Months	1 Year	2 Years	3 Years	5 Years
FIXED DEPOSIT	13%	14%	15%	17%	18%	19%	20%

20% FOR SENIOR CITIZEN SPECIAL SCHEME

for Rs.10,000/- and above 1 year

Your Deposit Doubles in 45 months Triples in 72 months.

	Rs.	1 Year	2 Years	3 Years	45 Months	72 Months	90 Months
CASH CERTIFICATE	1,000 5,000	1,180 5,920	1,430 7,150	1,730 8,650	2,000 10,000	3,000 15,000	4,000 20,000

"TAMIL MAHAL SELVAKALANCHIZAM" SCHEME

	Rs.	10 Years	15 Years	18 Years
CASH CERTIFICATE	1,000 5,000 10,000	6,500 32,500 65,000	16,000 80,000 1,60,000	28,000 1,40,000 2,80,000

"TAMILARASAN PORKUVIYAL" SCHEME

ரூ. 7500/- மட்டும் செலுத்தி 15-ஆம் ஆண்டு முடிவில் ரூ.1,25,000 பெறுவீர்	ரூ. 25,000/- மட்டும் செலுத்தி 5-ஆம் ஆண்டு முடிவில் ரூ.72,000 பெறுவீர்	ரூ. 35,000/- மட்டும் செலுத்தி 5-ஆம் ஆண்டு முடிவில் ரூ.1,00,000 பெறுவீர்	ரூ. 9,000/- மட்டும் செலுத்தி 21-ஆம் ஆண்டு முடிவில் ரூ.1,50,000 பெறுவீர்

"SENTAMIL SELVAKUVIYAL" SCHEME ஒரு முதலீடு செய்து பெறும் பணம் பெறுவீர்.

	Rs.	21 Years	
ரூ. 500/- மட்டும் செலுத்தி 21-ஆம் ஆண்டு முடிவில் ரூ.35,000 பெறலாம்	500 250	35,000 17,500	ரூ. 250/- மட்டும் செலுத்தி 21-ஆம் ஆண்டு முடிவில் ரூ.17,500 பெறலாம்

	Rs.	12 Months	24 Months	36 Months	48 Months	60 Months
RECURRING DEPOSIT	50 100	660 1,320	1,430 2,860	2,360 4,720	3,600 7,200	5,030 10,060

கடன்	நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும் சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்.	வட்டி விகிதம் ரூ.1.75

SAVINGS DEPOSIT INTEREST RATE 10% P.A.

கொடுக்கல் வாங்கல் ரூ.1/- செலுத்தி பங்குதாரர்களாகிறவர்களிடம் மட்டும்

Weekly Holiday Friday

Working Hours : Week Days 8.30 a.m. to 5.00 p.m. Sunday : 8.30 a.m. to 1.00 p.m.

V. KRISHNAMOORTHY B.A., BL., Secretary	A. THIAGARAJAN M.A., Executive Director	R. SUBRAMANIAN B.SC., B.L President

லாம் நம்முடைய கண்கண்ட தெய்வம், நம் தலைவர்தான்."

"கண் காணாத தெய்வம்."

"காப்பி நல்லாயிருக்கு..."

"நம்ம தலைவரை என்னாலே பார்க்கவே முடியாதா?"

"நீங்களே அன்னிக்கு 'ப்ரெஸ் மீட்'லே சொன்னீங்க, அகக் கண்ணாலே பாக்கிறதா... ஊனக் கண்ணாலே எதுக்குப் பாக்கணும்? ஊனக் கண் பல உபாதைகளுக்குட்பட்டது. காட்டராக்ட், க்ளாக்கோமா... ஆனா, அகக் கண்ணுக்கு இதெல்லாம் உண்டா? சுத்தமா, தெளிவா, இதயத்திலே வச்சுப் பாக்க முடியும்."

"ப்ளீஸ்... ஐ ஆம் ஸீரியஸ். நீங்க அவரைப் பாக்கிறதுண்டா?"

"என்னுடைய வழக்கமான பதில்தான் சொல்ல முடியும்."

"என்ன?"

"கேள்விகள் கேட்க வேண்டாம். பொய்கள் கூற வேண்டிய அவசியமிருக்காது."

"இந்திர பிரஸ்தத்துத் தலைவர் என்னை இங்கே அவரோட கட்சித் தலைமையை ஏத்துக்கும்படி சொல்றாரு" என்றாள் அபூர்வா.

"என்ன சொல்றீங்க?" என்று குரலை உயர்த்தித் திடுக்கிட்ட நிலையில் கேட்டான் நஞ்சுண்டன்.

அதில் ஒரு செயற்கைத் தன்மை இருந்தது போல் அபூர்வாவுக்குப் பட்டது.

"ஆமாம்."

"என்ன ஆமாம்?"

"சொன்னேனே, அதான்."

"நீங்க என்ன சொன்னீங்க?"


"யோசிக்கிறேன்."

"இடமேயில்லே... வேதபுரத்திலே அந்தக் கட்சியிலே, தலைவர், தொண்டர், ஆதரவு தரும் மக்கள் எல்லாரையும் சேர்த்தா மொத்தம் 23 பேர். பதினைஞ்சு சட்டசபை அங்கத்தினர்களே பதினைஞ்சு கட்சி. நீங்க யோசிக்கிறதுக்கு இடமேயில்லே."

"இது ஒரு சவால்தானே?"

"அப்பொ உங்களுடைய குடி உரிமை பறிபோகும். தேர்தல்லே நிக்க முடியாது."

"வேதபுரத்துக் 'குடி உரிமை'ன்னு எதுவும் கிடையாது. வேதபுரம் ஒரு சுதந்திர நாடில்லே. சுயாட்சிதான். நானும் இங்கேருக்கிற ஜனங்க மாதிரி முட்டாளில்லே" என்றாள் அபூர்வா.



"என் பையனுக்கு இங்கிலீஷ் கட்டுப் போட்டாலும் வரமாட்டேங்குது டாக்டர்?"
"எதுக்கும் இங்கிலீஷ் காய்கறி கொடுத்துப் பாருங்க... முன்னேற்றம் தெரியலாம்...!"
— எஸ். குமரவேல்

"அப்பொ நாங்க உங்களுக்கு இது சம்பந்தமா கொடுத்த லெட்டர், டாக்குமென்ட்...?"

"எல்லாம் 'ஜஸ்ட் பேப்பர்'. வேதபுரத்து ஜனங்க அவங்களுடைய தலைவர் உலகத்துக்கே தலைவர்னு நினைச்சுகிட்டா நினைச்சிட்டுப் போகட்டும்... யாருக்கு நஷ்டம்? நான் நினைக்கிறேன், உங்க தலைவருக்கு இந்த முட்டாள் ஜனங்க பேரிலே அவ்வளவு வெறுப்பு. அதான் அவங்களை இன்னும் முட்டாளாக்கி ரஸிச்சுக்கிட்டிருக்காரு."

"நீங்க எங்க தலைவரை எதுத்துக்கிட்டு இப்படி வெளிப்படையா வெளியே வந்தா என்ன ஆகும் தெரியுமா? ஒண்ணு, உங்க உயிருக்கு ஆபத்து. இன்னொண்ணு, உங்களை இந்த நாட்டை விட்டுப் போகச் சொல்லலாம்."

"வெளியிலே போகச் சொல்ற அதிகாரம் இந்திர பிரஸ்தத்திலேதானிருக்குது. தலைவராலே 'ஓபன்'னா பகைச்சுக்க முடியாது. என்னைக் கொல்லறதும் அவ்வளவு சுலபமான காரியமில்லே..."


"நீங்க பிரபலமாகறத்துக்கு யார் காரணம்? நாளைக்கே ஜனங்க உங்களைத் தூக்கி எறிய முடியாதா?"

"அதான் சொன்னேனே, இது ஒரு சவால். ஏத்துக்கலாம்னு பாக்கறேன்."

நஞ்சுண்டன் எழுந்தான், திடீரென்று புன்னகையுடன் சொன்னான், "விஷயம் சுவாரஸ்யமாகிக்கிட்டு வருது."

(தொடரும்)

"மக்களை புரிஞ்சிக்கவே முடியலை."
"ஏன்?"
"எப்படி சினிமா படம் இருக்கக் கூடாதுன்னு ஒரு சாம்பிள் படம் எடுத்தேன். அது என்னடான்னா, இருநூறு நாளா ஹவுஸ் ஃபுல்லா ஓடுது..."
— ஆர். வசந்தகுமார்



கீதையில் 'ஸ்வதர்மம்' என்ற சொல் அடிக்கடி கையாளப்படும். ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படையில் ஒரு தர்மம் இருக்கிறது. அதை அவன் விட முடியாது. விடக் கூடாது. குடிமக்களைக் காப்பது அரசன் கடமை. அதிலிருந்து அவன் நழுவக் கூடாது. நழுவினால் அவன் அரசனாக இருக்க முடியாது. உழைத்து, பொருளை அபிவிருத்தி செய்வது உழவர் கடமை. அதிலிருந்து அவர் விலக முடியாது; விலகக் கூடாது. விலகினால் சமூகம் வீணாகும்.



கனவு மெய்ப்படும் 6

அவரவர்க்கான ஸ்வதர்மம் எது என்பதை அவரவரே அறிய முடியும். அதிலிருந்து நழுவ அவருக்கு உரிமை இல்லை. அநீதிகளை அழிக்க வேண்டிய, போராட வேண்டிய அரச கடமையில் இருந்து அருச்சனன் நழுவிய நிலையில் பொய் ஞானம் பேசும் சந்தர்ப்பத்தில் 'போர் செய்' என்று அவனது ஸ்வதர்மத்தை பகவான் அவனுக்கு நினைவூட்டுகிறார். இது போலவே இந்த தேசத்து இளைஞர்கள் - இந்த தேசத்துக்குத் தாம் ஆற்றித் தீர வேண்டிய கடமைகளில் இருந்து நழுவக் கூடாது.

இன்று ஸ்வதர்மத்தைக் கைவிடுபவர்கள் பொதுவாக மூன்று வாதங்களில் ஒன்றை முன்வைக்கிறார்கள்.

1. எது என் ஸ்வதர்மம் என்பதற்கு எந்தவித வரையறையும் இல்லை. எனவே என் ஸ்வதர்மத்தை நான் அறியேன்.

2. என் ஸ்வதர்மம் லாபகரமானதாக இல்லை; எனவே கைவிடுகிறேன்.

3. மற்ற எவரும் அவரவர் ஸ்வதர்மத்தைக் கடைப்பிடிக்காத போது நான் ஏன் கடைப்பிடிக்க வேண்டும்? எவ்வாறு அது முடியும்?

முதல் வாதத்தை இப்போது மறுப்போம். மனசாட்சி உள்ள எவருக்கும் தன் கடமைகள் எவை என்பது தெரியாமல் போய் விடுமா? பெற்றோருக்கு, சமூகத்துக்கு, பள்ளிக்கு, படிஅளக்கும் நமது அலுவலகத்துக்கு நாம் ஆற்ற வேண்டிய இயல்பான கடமைகள் புரியாத அளவுக்கு நாம் மூடர்கள் இல்லை. "தன் நெஞ்சறிவது பொய்யற்க" என்கிறது தமிழ் வேதம்.

மற்றவரை ஏமாற்றுவது போல் மனசாட்சியையும் ஏமாற்றுபவர்கள்தான் இந்த முதல் வாதத்தை முன்வைக்கிறார்கள்.

ஒரு உதாரணம் : வீட்டிற்கு விருந்தினர் வந்து விட்டார். கடைக்குப் போய் வரும்படி கண்சாடை காட்டுகிறாள் அம்மா. நண்பர்களோடு வெட்டி அரட்டை அடிக்கும் விடலைப் பயலுக்கு அப்போது கடைக்குப் போக இஷ்டம் இல்லை. அம்மாவுக்கு அடுப்படியில் வேலை. எனவே கடைக்குப் போக முடியாது. இந்த நிலையில் கண்டிப்பாகக் கடைக்குப் போய் வருவது அந்தப் பயலுக்குக் கடமை. ஆனால் அலட்சியமாக "நீ என்ன வேணும்னாலும் செஞ்சுக்கோ.. எனக்குக் கவலை இல்லை. நான் போக முடியாது. அவ்வளவுதான்!" என்று பொறுப்பின்றிப் பேசும் பிள்ளைகள்... பிள்ளைகளா? பிறகு கடையில் போய் அம்மா வாங்கி வந்த இனிப்பை

அது என்ன ஸ்வதர்மம்?

சுகி சிவம்

வெட்கமில்லாமல் தின்ன மட்டும் ஜோராராக ஆஜராகி விடுவார்கள்! பொறுப்பைத் தட்டிக் கழிப்பது என்ன நியாயம்? பெற்றோரிடத்தில் இளம் பிள்ளைகளுக்குப் பெரும் கடமை இருக்கிறது. இதைப் புறக்கணிக்க நமக்கு உரிமையே இல்லை. இது போலவே சமூகத்தின் எல்லாப் பக்கங்களிலும் எல்லா நிலைகளிலும் நமக்கு இயல்பான கடமை இருக்கிறது. அந்த ஸ்வதர்மத்தைக் கைவிடுவது சமூக அமைப்புக்குப் பெருந்தீங்கு.

என் ஸ்வதர்மம் எனக்கு லாபகரமானதாக இல்லை என்ற இரண்டாவது வாதம் வேடிக்கையானது. அது லாபமா நஷ்டமா என்ற ஆராய்ச்சியை விட ஸ்வதர்மத்தை விட எனக்கு உரிமையே இல்லை என்பதைப் புரிந்து கொள்வது அவசியம்.

பதின்மூன்றாண்டு வனவாசம் என்று காட்டில் பொறுமையாக இருக்கும் தருமரைப் பாஞ்சாலி துளைத்தெடுத்தாள். "பதின்மூன்று ஆண்டு காத்திராமல் இடையில் போய் துரியோதனனை நீர் ஏன் கொல்லக் கூடாது?" என்று குமுறுகிறாள். "சத்தியம், பொறுமை என்று தர்மத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறீரே.. நீர் காப்பாற்றும் தர்மம் உம்மைக் காப்பாற்றவில்லையே... காட்டில் பிச்சை எடுக்க வைத்து விட்டதே" என்று சாடுகிறாள்.

தருமனுடைய பதில் அட்சர லட்சம் பெறும்.

"பெண்ணே... தர்மம் என்னைக் காப்பாற்றும் என்ற எண்ணத்தில் நான் தர்மத்தைக் காப்பாற்றவில்லை. அப்படிச் செய்தால் அது வியாபாரம். நான் தர்ம வியாபாரி அல்லவே? தர்மத்தைக் காப்பது என் பிறவிக் கடன். சத்யம், பொறுமை என்ற தர்மங்கள் என்னைக் காத்தாலும் காக்காது போனாலும் அவற்றைக் காப்பது என் கடமை. அதிலிருந்து நான் நழுவவே முடியாது" என்கிறார். இன்றைக்கு லாப நஷ்டக் கணக்குப் பார்த்து தர்மங்களைக் கைவிடுவதே தேசத்தின் சகல தடுமாற்றங்களுக்கும் காரணம்!

மூன்றாவது வாதம்... மற்ற எவருமே பின்பற்றாத போது நான் மட்டும் ஏன் பின்பற்ற வேண்டும் என்பது.. மற்றவர் சாப்பிடாத போது... சாப்பிட வழியில்லாத போது நாம் மட்டும் சாப்பிடுகிறோம். பல பேர் மூச்சு விட முடியாமல் செத்து விட்டார்கள் என்பதற்காக நாம் என்ன செத்தா போய் விட்டோம்? மற்றவர்களைப் பார்த்து நாம் ஸ்வதர்மத்தைக் கைவிடு வதற்குப் பதிலாக நம்மைப் பார்த்து மற்றவர்கள் பின்பற்றத் தொடங்கட்டுமே!

ராமகிருஷ்ணர் ஒரு கதை சொல்லுவார். துறவி ஒருவர் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த போது மரத்தின் மேலிருந்து தண்ணீரில் தேள் ஒன்று விழுந்து விட்டது. தத்தளித்தது. தண்ணீருக்குள் கைவிட்டுத் தேளைத் தூக்கினார் துறவி. தன்னைக் காப்பாற்றுகிறார் என்ற எண்ணமின்றி நறுக்கென்று கொட்டியது தேள். துடித்து, தேளைத் தவறி, தண்ணீரில் விட்டார் துறவி. மறுபடியும் கருணையோடு தூக்கினார். மறுபடியும் கொட்டியது. எத்தனை முறை முயன்றாலும் அதே கதை. கரையிலிருந்து ஒருவர் கேட்டார். 'சுவாமி, தேள்தான் கொட்டுகிறதே.. திரும்பத் திரும்ப ஏன் கொட்டுப்படுகிறீர்கள். விட்டு விட வேண்டியதுதானே?'

துறவி சொன்னார். "கொட்டுவது தேளின் இயற்கை குணம். காப்பாற்றுவது மனிதனின் இயற்கை குணம். அதனுடைய இயற்கையை அது விடாத போது என்னுடைய இயல்பை மட்டும் நான் ஏன் விட வேண்டும்?"

நண்பர்களே... ஸ்வதர்மத்தைக் கைவிடுவது அதர்மம். எனவே... இன்னுமா சொல்ல வேண்டும்?



• ஜப்பானியத் தோட்டம்


கோடம்பாக்கத்தை காலி பண்ணிக் கொண்டு தரமணியில் குடித்தனம் மாறி வந்து விட்டார்களோ என்று நினைக்கும்படியான கும்பல். ஃபிலிம் ஸிட்டியில் மூலைக்கொரு ஷூட்டிங். நாளுக்கொரு நட்சத்திரப் பட்டாளம். ஆரம்ப ஜோர் வெகு அமர்க்களமாகத்தான் இருக்கிறது.

தமிழ்ப் படங்கள் மட்டுமல்லாது, தெலுங்கு, ஹிந்தி தவிர டி.வி. சீரியல்கள், டாக்குமென்ட்ரி வகையறா கும்பல்களையும் காண முடிகிறது. என்னதான் இருக்கிறது இங்கே என்று காணவரும் கூட்டம் வேறு. சிறப்பு அலுவலர் ராஜ மனோகருக்கும் தலைமை அதிகாரி இயக்குநர் பி. மாதவனுக்கும், வரும் தயாரிப்பாளர்களை வரவேற்று, காப்பி வாங்கித் தரவே நேரம் சரியாயிருக்கிறது.

"இருபத்தோரு கோடி செலவில் உருவாகியிருக்கும் ஜெ. நகர், ஒரு 'தேசிய சாதனை" என்று பெருமிதம் பொங்குகிறார் அறுபதைக் கடந்த இளைஞர் பி. மாதவன். என்றாலும் சினி உலகைச் சேர்ந்தவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிய கொஞ்சம் உள்ளே நடை பயின்றோம்.

ஜெயமாருதியின் காவலில் (உள்ளே நிறைய 'ஜெய' இருக்கு சார். 'வொர்க்கர்ஸ் எல்லாருக்கும் கூட இனிஷியலை 'ஜெ' ஆக்கிடுவாங்க சீக்கிரம்'னு ஒருத்தர் கமெண்ட் அடிச்சாரு) கம்பீரமாகப் படுத்துக் கிடக்கும் மேம்பாலத்தில் ஏதோ ஹிந்திப்பட ஷூட்டிங். வில்லன்கள் காரில் துரத்த, ஹைஹீல்ஸ் போட்ட மதுபாலா 'தத்தக்கா புத்தக்கா' என்று ஓடி ஓடித் தப்பித்துக் கொண்டிருக்க, பார்வையை விலக்கி, ஒரு புரொடக்ஷன் ஆளுடன் பேச்சுக் கொடுத்தோம்.

"நல்லாத்தான் சார் பண்ணியிருக்காங்க. ஆனா, திரும்பத் திரும்ப இந்த ஏழெட்டு லொக்கேஷனை எத்தனை படத்துலதான் காட்டிட்டிருக்கறது? ஹீரோ ஒரு படத்துல போட்ட சட்டையை அடுத்த படத்துல போட்டாலே






• தத்ரூப கிராமம்

ஜெ



• 'கர்ணா' அர்ஜுன்: சுறாமீன் வாய் முன்பாக....

• காளிக்கும் ஜே!



விஸிலடிக்கிறவங்க நம்ம ரசிகருங்க. சினிமாக்காரங்களை விட டீ.வி. டிராமாக்களுக்கு ரொம்ப யூஸ்ஃபுல்லா இருக்கும் சார் இது!'' என்றார் அவர்.

'நம் டீ.விக்காரர்கள் ஒரு செட்டிலேயே ஒரு யுகத்தைக் கழித்து விடுபவர்களாயிற்றே' என்று எண்ணியபடி சைடு வாங்கி, ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டை ஒட்டிய கார்டனுக்கு வந்தால் டைரக்டர் சோலைராஜா மும்முரமாக வெண்ணிற ஆடை மூர்த்தியையும் மோகனாவையும் பெண்டு வாங்கிக் கொண்டிருந்தார். படம் : வன்னி வரப் போறா. ஹீரோ: பாண்டியராஜன்.

"தீபாவளி ரிலீஸ் சார்! 90 பர்ஸெண்ட் முடிஞ்சிடுச்சி. இன்னும் ரெண்டு பாட்டு பாக்கி'' என்று அவ்வப்போது வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். சூப்பர் ஸ்டார் சூரியன் சதி பண்ணிக் கொண்டிருக்க, வெளிச்சம் தலை காட்டிய வினாடிகளிலெல்லாம் உடனே, உடனே 'டேக்'.

கேபிள் ஒயர்கள் குறுக்கே ஓட, தோளில் துண்டுடன் உதவியாளர்கள் அதனுடன் போட்டி போட, ஒரு பக்கம் பளபளக்கும் அலுமினியக் கேரியர்களில் சாம்பார் கூப்பிட, மறுபக்கம் ஒலிப்பதிவாளர் கல்யாண், 'ட்ராக்

நகருக்கு ஒரு ஜாலி ஷெட்!



• சோலை ராஜா (படம் : கோபிநாத்)



• பி. மாதவன்

மாத்துய்யா' என்று குரல் கொடுக்க, நாம் டைரக்டரை இழுத்துக் கொண்டு ஒரு ஓரம் ஒதுங்கினோம்.

"எப்படி இருக்கு சார் ஃபிலிம் ஸிட்டி?"

"செஞ்சிருக்கிற வரைக்கும் நல்லாத்தான் இருக்கு. பிரும்மாண்டமாத்தான் பண்ணியிருக்காங்க. ஆனா - இவ்வளவு செலவு செய்திருக்கறதுக்கு இன்னும் கூட யூஸ்ஃபுல்லா செய்திருக்கலாம்.

"உதாரணமா இந்தப் புல்வெளி, கோர்ட், ஜெயில் மாதிரி லொக்கேஷனெல்லாம் எல்லா ஸ்டூடியோவிலும் இருக்குது. வெளியில கிடைக்காத சிலவற்றை யோசிச்சி, பிளான் பண்ணி இங்க கொண்டு வந்திருக்கலாம். ரயில்வே ஸ்டேஷன், ஏர்-போர்ட், பாலைவனம் இந்த மாதிரி. எதிர்காலத்துல பண்ணினாங்கன்னா நல்லாருக்கும்."

"மத்த ஸ்டூடியோக்களில் எடுக்கறதுக்கும் இங்க எடுக்கறதுக்கும் ஏதாவது வித்தியாசம் தெரியுதா?"

"ஸ்டூடியோக்களில் செட் போட்டு, நம்ம வசதிப்படி காட்சிக்கேற்ப மாத்திக்கலாம். இங்க ரெடி-மேட் டிரெஸ் மாதிரி இருக்கற இடத்துல எடுத்துக்கணும். இதுதான் பெரிய வித்தியாசம்."

"ரேட் விஷயம்?"

"கிட்டத்தட்ட ஸ்டூடியோ ரேட்தான். ஆனா 1000 ரூபாய் லொக்கேஷன், 2000 ரூபாய் லொக்கேஷன் (8 மணி நேரத்துக்கு) என்றெல்லாம் பிரித்து வைத்திருக்கிறார்கள். ஒரு இடத்தில் ஒரு 'ஷாட்' மட்டும் வைத்தால் கூட ஆயிரம் ரூபாய் கொடுத்து விட வேண்டும். வேறு ஒரு ஆயிரம் ரூபாய் லொக்கேஷனுக்குப் போனால் மறுபடி ஆயிரம் தர வேண்டும். இதை மட்டும் மாற்றினால் சௌகர்யம்!"

"எப்படி?"

"ஒரு ஆயிரம் கட்டினால் அந்த 'ரேட்'டிலுள்ள எந்த இடத்திலும் எடுத்துக் கொள்ளலாம் என்பது மாதிரி."

மாதவனிடம் பேசிக் கொண்டிருந்த போது இந்த விஷயத்தைச் சொன்னதும் குறும்பாகச் சிரித்தார்.

"ஒரு லொக்கேஷனில் ஒரு ஷாட்டோடு யாரும் நிறுத்திக் கொள்வதில்லை சார்! இங்குள்ள 'இத்தாலியன் கார்டனில்' ஒரு முழுப் பாட்டே எடுக்கலாம்! அதுவும் வித்தியாசமாக! நான் வேண்டுமானால் எடுத்துக் காட்டுகிறேன்!" என்றார்.

திரைப்பட நகரிலேயே மிக வித்தியாசமான இடமாக அந்த 'கிராமத்து செட்-அப்'பைத் தான் நம்மால் சொல்ல முடிகிறது.

வரிசை பிசகாத ஓட்டு வீடுகளும் குறுகலான மண்பாதையும், பாதையோர செடி, மர வகையறாக்களும், பளிச்சென்றொரு முருகன் கோவிலும் கோவிலுக்குள்ளேயே சின்னக் குளமும்... வாரே, வா! கட்டிய கலை இயக்குநருக்கு மானசீகக் கை குலுக்கல்.

இதுவரை பிளான் பண்ணியபடி



• வள்ளி வரப் போறா... படப்பிடிப்பில்

கட்டுமானங்கள் யாவும் முடிந்து விட்டன என்கிறார்கள். இரண்டாவது கட்டப் பணியாக ரயில்வே ஸ்டேஷன் - உண்மையான இஞ்சின், உண்மையான பெட்டிகள், உண்மையான 1 கி.மீ. ஓடுபாதை - விரைவில் வரப் போகிறதென்று மாதவன் சொன்னார்.

"ஒரே லொக்கேஷன், திரும்பத் திரும்ப எத்தனைப் படங்களில் வரும்னு கேக்கறதை நம்பாதீங்க சார்! டைரக்டர் புத்திசாலியா இருந்தா என்ன வேணா செய்யலாம்" என்று சொல்வதோடு, "நாங்களும் அவ்வப்போது அட்மாஸ்ஃபியரை மாற்றிக் காட்டத்தான் போகிறோம்!" என்கிறார் மாதவன்.

"இந்த இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிக்கு எத்தனை கோடி மக்களின் வரிப் பணம் செலவாகும்?" என்று கேட்க நினைத்தோம். மாதவன் முறைப்பது போல் இருந்ததால் ஸலாமிட்டு வெளியே வந்து, வுடு ஜூட்!

- கிச்சா

படங்கள் : **கேமரா திருஞானம்**



20

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. சிவப்பிரகாசம் ராஜாராமனை மாறுவேடங்களில் அவ்வப்போது சந்தித்துக் கொண்டிருந்தான். அவன் போட்ட மாறுவேடங்கள் அவரை அயர்த்தின. அவன் தமக்கு எதிரில் வந்து நின்ற போது சட்டென்று அடையாளம் தெரிந்து கொள்ள முடியாமல் திணறினார். எனவே ஒரு குறிச் சொல்லை அவன் சொல்ல வேண்டும் என்று இருவரும் ஏற்பாடு செய்து கொண்டார்கள். ஒருமுறை அந்தக் குறிச்சொல்லைச் சொல்லுகையில் அருகே இருந்த மனிதரோ மனிதர்களோ அடுத்த தடவை அவன் வரும் போது இருப்பின், சங்கேதச் சொல் என்று ஊகிக்கக்கூடும் என்பதால் மூன்று சொற்களுக்கு ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

நிரேந்திரநாத் பானர்ஜி சொல்லிக் கொடுத்த யோசனைப்படி ராஜாராமன் சென்னைத் துறைமுகப் பியூன் செபாஸ்டியனின் ஒத்துழைப்புடன் லண்டனுக்குக் கடிதத்தை யனுப்பியாகி விட்டது. அங்கிருந்து கப்பல் வரும் நாளுக்காக இப்போது காத்துக் கொண்டிருந்தார். இதையெல்லாம் அவர் கொஞ்சம் தயங்கிய பிறகு சிவப்பிரகாசத்திடமே கூறினார். கப்பல் திரும்பி வந்ததன் பின்னர் லண்டனிலிருந்து இந்திரநாத் பானர்ஜி அனுப்பும் கடிதத்தை அது இன்னாருக்குப் போகிறது என்பது செபாஸ்டியனுக்குத் தெரியா வண்ணம் பெறுவது எப்படி என்பதுதான் அவரை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

இந்திரநாத்துக்கு எழுதிய கடிதத்தில் உறைமீது தாம் அவனுக்கு எழுதியது போன்றே 'ஓய்' என்னும் ஆங்கில எழுத்தை எழுதுமாறு அவனிடம் கேட்டுக் கொண்டிருந்தார். எனவே கப்பல் வந்த பிறகு செபாஸ்டியனோடு ஃபோன் தொடர்பு கொண்டு 'ஓய்' எனும் குறியீடு உறைமீது உள்ள கடிதத்தை இன்ன இடத்தில் அவன் வைக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று முடிவு செய்து வைத்திருந்தார். ஆனால், எந்த இடம் என்பதைத்தான் அவரால் இன்னும் தீர்மானிக்க முடியவில்லை.

மறைந்திருந்து தம்மைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை அவனுக்கு அளித்து விடலாகாது என்பதால் அதற்குச் சிவப்பிரகாசத்திடமே யோசனை கேட்டார். முகவாயைத் தேய்த்தபடியும், கன்னத்தைச் சொறிந்தவாறும் சில வினாடிகளை ஆழ்ந்த யோசனையில் கழித்த பிறகு விரலைச் சொடுக்கினான்.

"நான் உங்களுக்கு இதுல உதவ முடியும்."

"நீ போலீஸ்காரனாச்சே, சிவப்பிரகாசம்? நீ

ஜோதிர்லதா கிரிஜா



அமரர்
கல்கி
எழுதிய

பார்த்திபன்

போய் இதுல சிக்கினா உன்னோட வாழ்க்கை, தொழில் எல்லாமே பாழாயிடும்ப்பா."

"அதெல்லாம் நீங்க கவலையே படாதீங்க, சார். போர்ட் ட்ரஸ்டுக்கு வெளியில ஒரு பெரிய வேப்ப மரம் இருக்கு. அதுக்குக் கீழே ஒரு சதுரக் கல்லு மேல ஒரு பிள்ளையார் சிலை இருக்கு. அந்தச் சிலைக்குப் பின்னால சின்னதா ஒரு இடைவெளி இருக்கும். அங்க ஒரு செங்கல்லை வெச்சு அதுக்கு அடியில உங்களுக்கு வந்த கவரை வெச்சுடச் சொல்ல லாம். அந்த அரசமரத்தடிப் பிள்ளையாருக் குத் தோப்புக்கரணம் போட எத்தனையோ பேரு வருவாங்க. நானும் அவங்கள்ள ஒருத் தனாப் போய்த் தோப்புக்கரணம் போட்டு, ஒரு தோதான நேரம் பார்த்துக் கல்லுக்கு அடியிலேருந்து கவரை அமுக்கிடுவேன். பக் கத்துல நம்பர் ப்ளேட் மாத்தின என்னோட மோட்டார் பைக் இருக்கும். அதுல உடனே கௌம்பிடுவேன்."

"என்ன வேஷத்துல போறதா இருக்கே, சிவப்பிரகாசம்?"

"பெரிசாத் தொங்கு மீசை வச்சுப்பேன். பட்டை பட்டையா விபூதியைக் குழைச்சு நெத்தி முழுக்கப் பூசிப்பேன். நடுவில பெரிசா ஒரு குங்குமப் பொட்டும் வச்சுப்பேன். கழுத் துல புரள்ற தலைமுடி. டோப்பா வெச்சுப் பேன். நேர் வகிடு. சாதாரண வெள்ளை வேட்டி, ஜிப்பா. அம்புட்டுத்தேன். எவனால யும் கண்டுபிடிக்க முடியாது சார். நீங்களே எத்தினிவாட்டி முழிச்சிருக்கீங்க?"

"அப்படியே வெச்சுப்போம். ஆனா அந்த செபாஸ்டியன் போலீஸ்கிட்டேருந்து - அதா



கனவு

சகாப்தம் படைத்த சரித்திரத் தொடர்கதை!

கோபுலுவின் உயிரோட்டமுள்ள வண்ணப்படங்களுடன்

வது வெள்ளைக்கார அரசாங்கத்துங்கிட்டே ருந்து - பரிசுக்கும் பணத்துக்கும் ஆசைப் பட்டு, முன்கூட்டி அவங்களுக்குத் தகவல் கொடுத்து அங்க வந்து காத்திருக்கப் பண்ணி உன்னைக் கையும் களவுமாப் பிடிச்சுட்டாங் கன்னா?"

"அப்படி ஏதாச்சும் நடந்தா அவனோட உயிருக்கே ஆபத்துன்னு பலதரம் எச்சரிக்கை பண்ணி இருக்கிறதா நரேந்திரநாத் பானர்ஜி சொல்லி இருக்காரில்ல? அதை நம்பி எறங்க வேண்டியதுதான்!"

"உன் தம்பி ரொம்ப ட்யூட்டி உணர்வு உள்ளவன், இல்லியா? சப்போஸ், அவனுக் குத் தெரிஞ்சு போறதுன்னு வெச்சுக்கோ. காட்டிக் கொடுப்பானா? சொந்த அண் ணன்னு பார்ப்பானா?"

"அவன் ரொம்ப ட்யூட்டி எண்ணம் உள்ள வந்தாங்க. அதனால, அவன் எப்படி நடந்துப் பான்றதைப் பத்தி என்னால சரியா கணிக்க முடியல்லீங்க. என்னதான் இருந்தாலும் கூடப் பிறந்த அண்ணனாச்சேன்னு கூடவா பார்க்க மாட்டான்?" என்று அவன் சிரித் தான்.

தன் தம்பியைப் பற்றிய முற்றும் சரியான கணிப்பு சிவப்பிரகாசத்துக்கு இல்லை என் பதை அவன் இரண்டு விதமாகவும் பேசியதி லிருந்து புரிந்து கொண்டதில் ராஜாராமனின் கவலை அதிகரித்தது.

"நீங்க கவலையேபடாதீங்க, சார். நான் பார்த்துக்கறேன்" என்று அவருக்கு ஆறுதல் கூறி விட்டு அவன் புறப்பட்டுப் போனான்.

"அஞ்சு வருஷம் கழிச்சு மறுபடியும்

அருள்வாக்கு



காய்கறித் தோட்டம் போடுவதற்கு என்ன பலன்? கத்திரிக்காய் ஸாம்பார், வெண்டைக்காய் கறி இத்யாதி தானே? ஒருத்தருக்கு இந்த ஸாம்பாரும் கறியும் வேண்டியிருக்கவில்லை. ஆனாலும் அவருக்கு என்னவோ வேதனை - புத்ர சோகம். business - இல் loss மாதிரி என்னவோ ஒன்று. அது தெரியாமலிருக்க, வெட்டி, கொத்தி ஏதாவது கார்யம் பண்ணி மறக்கடிக்கலாமென்று காய்கறித் தோட்டம் போடுகிறார். அதற்காக, தோட்டம் போடுவதன் பலன் என்ன என்று கேட்டால், 'புத்ர சோக நிவ்ருத்தி' என்று சொல்லலாமா?

இப்படித்தான் ஒரு கர்மாவின் இஹாமுத்ர பலன் (இஹ - அமுத்ரபலன்: பூலோக, ஸ்வர்க்கலோக இன்பப் பயன்கள்.) வேண்டாமென்று கர்மா செய்கிறவன் பெறும் சித்த சுத்தியைக் கர்ம பலனாகச் சொல்வதில்லை. அது ஈச்வர ப்ரஸாதமாக அவன் பெறுவதே.

"நேர்ப் பலன் தனக்கு வேண்டாமென்றிருந்தும், நம்முடைய ஆக்ஞை என்பதாலும், ஸமூஹ ஒழுங்கை உத்தேசித்தும் நம்முடைய ப்ரீதிக்காகவே இவன் இவ்வளவு நன்றாகக் கர்மாநுஷ்டானம் செய்கிறானே! இந்த மனோபாவத்துக்காக இவனுடைய சித்தத்தின் அசுத்தங்களைப் போக்குவோம்" என்று ஈச்வரனே அநுக்ரஹிப்பதுதான் சித்த சுத்தி.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

உண்டாயிருக்கா குஞ்சம்மா. ஒரு பிரசவத்துக்கும் இன்னொரு பிரசவத்துக்கும் இடையில் இவ்வளவு பெரிய இடைவெளி இருக்கிறது நல்லதில்லேன்னு சொல்லுவா. அதனால அவளை முன்னெப்போதையும் விட இன்னும் அதிக ஜாக்கிரதையோட கவனிச்சுக்கணும், ராமசாமி" என்று விசாலம் கவலையாகச் சொன்னது கேட்டு,

"ஆகட்டும், அக்கா. டாக்டர் ராமலட்சுமி ரெட்டிகிட்ட கூட்டிண்டு போய்க் காமிக்கிறேன்..." என்றார்.

மறுநாளே டாக்டர் ராமலட்சுமி ரெட்டியிடம் குஞ்சம்மாவை அவர் அழைத்துப் போனார். ஏதோ மருந்துகளையும் மாத்திரைகளையும் எழுதிக் கொடுத்த டாக்டர், உடம்பு கவலைப்படும்படியாக இல்லை என்று அறிவிக்க, ராமசாமிக்கு அப்பாடா என்றிருந்தது. குஞ்சம்மாவுக்குந்தான்.

வழியில், "ஏன்னா, இந்தத் தரம் பொண் பொறக்கணும்னு வேண்டிக்குங்கோ..." என்று அவள் சொன்னது கேட்டு அவருள் சிரிப்புப் பொங்கியது.

"இனிமே வேண்டிண்டு எந்த லாபமுமில்லே. அது என்னிக்கோ முடிவு செய்யப்பட்டு விட்டது. இதெல்லாம் நம்ம இஷ்டப் பட்டபடியா நடக்கும்? பொண்ணு பிறந்தா உன்னாட்டமே அழகா இருக்கணும்!"

"நல்லதுதான்; பொறக்கப் போறது ஒரு சகுந்தலை மாதிரி அழகான பொண்ணா இருக்கட்டும். பாரதத்துக்கு ஒரு பரதனை அவள் தந்த மாதிரி இவளும் சாதனை புரியட்டும்" என்றாள்.

சென்னைத் துறைமுக அரசமரத்தடிப் பிள்ளையாரின் சிலைக்குப் பின்னாலிருந்து உறையை எடுத்துச் செல்ல வேண்டிய நாள் நெருங்க நெருங்க சிவப்பிரகாசம் பரபரப்பில் இருந்தான்.

அன்று மாலை ஞானப்பிரகாசம், "உங்கிட்ட ஒரு சுவாரசியமான ரகசியம் சொல்லணும், அண்ணே" என்றான்.

"என்னது?"

"லண்டன்லேருந்து ஒரு ரகசியத் தபால் இங்க நம்ம மெட்றாஸ்ல ஒருத்தருக்கு நாளைக்கு வருது. அதைத் துறைமுகத்துக்குப் பக்கத்துல இருக்கிற அரசமரத்தடிப் பிள்ளையாருக்குப் பின்னாடி செபாஸ்டியன்னு ஒரு ஆளு கொணர்ந்து வைக்கப் போறான். அவன் வெச்சதுக்குக் கொஞ்ச நேரத்துக்குப் பெறகு அதனோட சொந்தக்காரன் வந்து எடுத்துக் கிட்டுப் போவானாம். அது என்ன லெட்டருன்னு கண்டுபிடிக்கலாம்னு இருக்கேன்..."

சிவப்பிரகாசத்துக்கு நெஞ்சுக்குள் உலக்கையால் இடிபடுகிற படபடப்பு உண்டாயிற்று.

"அப்படியா? உனக்கு யாரு சொன்னாங்க?"

"செபாஸ்டியன்னு சொன்னேனே, அவனைத் தெரியும் எனக்கு. அவன்தான் சொன்னான். அதுக்காகப் பத்து ரூபா கேட்டிருக்கான். தரேன்னிருக்கேன்."

"எதுனாச்சும் வம்பில மாட்டிக்காதே, ஞானப்பிரகாசம்."

"அதெல்லாம் நீ ஒண்ணும் கவலையே படாதேண்ணே. இது மாதிரி ஏதாச்சும் செஞ்சு சீக்கிரமாப் பிரமோஷன் வாங்கணும்..."

"உன்னிஷ்டம்" என்று சொல்லி விட்டு அவனைத் தடுப்பது எவ்வாறு என்ற சிந்தனை

யில் ஆழ்ந்தான் சிவப்பிரகாசம்.

21

ராஜாராமன் தமது அலுவல் அறையில் அமைதியற்று உட்கார்ந்து கொண்டிருந்தார். அன்று லண்டனிலிருந்து வரும் உறை அவர் கைக்கு வர வேண்டிய நாள். அதற்காகவே, தான் விடுப்பு எடுத்துள்ளதாய் முந்தைய நாள் அவரைச் சந்தித்துச் சிவப்பிரகாசம் சொல்லிப் போயிருந்தான். நாற்காலியின் முதுகில் சாய்வதும், நிமிர்வதும் எழுந்து நிற்பதும் நடப்பதும் கதவு திறக்கப்படுகிற போதெல்லாம் படபடப்புக் கொள்ளுவதுமாய் அவர் பரபரத்துக் கொண்டிருந்தார்..

கடைசியில் ஒருவழியாக சிவப்பிரகாசம் வந்து சேர்ந்தான். மாறுவேடத்தில் இருந்ததால் சைகை செய்தான்.

அவன் நாற்காலியில் உட்காருவதற்குக் கூட நேரம் கொடுக்காமல், "கவர் வந்து சேர்ந்துடுத்தா, சிவப்பிரகாசம்?" என்றார் தாங்க முடியாத ஆவலுடன்.

"ஒருவழியாக் கொணாந்துட்டேன், சார். அதுக்கு முன்னாடி ஒரு சின்னக் களேபரம், சார்" என்றபடி தன் சட்டைப் பைக்குள் பத்திரமாய் வைத்துக் கொண்டிருந்த 'ஒய்' என்ற பெரிய ஆங்கில எழுத்து எழுதப் பெற்றிருந்த உறையை எடுத்து அவரிடம் கொடுத்த அவன் பெருமூச்சு விட்டான்.

"வீட்டுக்குப் போய்ப் படிக்கலாம்னு தோணுது, சிவப்பிரகாசம். இங்க, ஆபீஸ்ல வேணாம். என்ன சொல்றே?"

"ஒருவிதத்துல அது சரிதான் சார்."

"என்னமோ களேபரம்னு சொன்னியே? என்னப்பா?"

தம்பி ஞானப்பிரகாசத்துக்குச் செய்தி அந்த செபாஸ்டியன் வாயிலாகவே தெரிந்து விட்ட உண்மையை அவன் தெரிவித்ததும், "அடத் துரோகி" என்று ராஜாராமனின் உதடுகள் முனகின.

"அப்புறம்?"

"இன்னிக்குக் காலையில காப்பியில தூக்க மாத்திரையைப் பொடிச்சுக் கலக்கிக் குடுத்துட்டேன். 'கண்ணை என்னமோ திடீர்னு அசத்துதுண்ணே. கொஞ்சம் படுத்துட்டுப் போறேன். ஒம்பதுக்கு எழுப்பு'ன்னு சொல்லிட்டுப் படுத்தான். நான் கதவைச் சாத்திட்டு கிருதாவும் தொங்கு மீசையும் ஒட்ட வெச்சுக்கிட்டு டோப்பா முடியோட பைக்குல போய் அந்தக் கடுதாசை எடுத்துக்கிட்டு வந்துட்டேன்... ஞானப்பிரகாசத்துக்கு உடம்பு சரியில்லாததால அவன் எழுப்ப எழுப்பத் தூங்கிட்டே இருக்கான்னு சொல்லி அவனுக்கும் லீவு சொல்லிட்டேன்..."

"அந்தப் பய செபாஸ்டியன் கொஞ்ச தூரத்துல நின்னுண்டு அப்ப உன்னைக் கவனிச்சிருப்பான்னு சொல்லு."

"கவனிச்சானோ, இல்லாட்டி போயிட்டானோ. அதைப் பத்தி என்ன, சார்? கவர் நம்ம கைக்குக் கிடைச்சுடுச்சு. அப்படியே கவனிச்சிருந்தாலும் என்னை அவனால கண்டு பிடிக்க முடியாதே இன்னார்னு? ஆனா அவனை நான் இன்னொரு மாறுவேஷத்துல போய் நாலு தட்டுத் தட்டலாம்னு இருக்கேன். காட்டிக் கொடுத்தா அவனோட உயிருக்கே ஆபத்து விளையும்கிற எச்சரிக்கையையும் மீறி இப்படி நடந்துக்கிட்டிருக்கானே? அவனைச் சும்மா விடலாமா?. ஒரு வாரத்துக்கு எந்திரிக்க முடியாதபடி பண்ண வேண்டாமா?"

ராஜாராமன் எழுந்து நாற்காலி முதுகில் தொங்கிக் கொண்டிருந்த கறுப்புக் கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டார்.

"நீங்க முதல்ல போய் உங்க காரைக் கிளப்புங்க, சார். நான் பின்னாலேயே என் வீட்டுக்குப் போறேன்."

ராஜாராமன் நன்றி கண்களில் தெரியக் கையசைத்து விடைபெற்றுத் தம் காரில் ஏறிக் கொண்டார். வழக்கத்தை விடவும் விரைவாகக் காரை ஓட்டிக் கொண்டு வீட்டையடைந்து பரபரப்புடன் உள்ளே போனார்.

அறைக்குள் நுழைந்ததும் கட்டிலில் உட்கார்ந்த ராஜாராமன் மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு பதற்றத்துடன் அந்த உறையைப் பிரித்தார்.


அன்புள்ள ஐயா,


இக் கடிதத்தை எழுதுபவன் இந்திரநாத் பானர்ஜியின் நண்பன். என் பெயர் தங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. ஏனெனில் அதை வெளியிடல் எனக்கு ஆபத்தில் முடியலாம். இந்திரநாத் தற்போது இந்தியா விடுதியில் இல்லாததால் கப்பல் தொழிலாளி பீட்டர் ஜேம்சிடமிருந்து தங்கள் கடிதம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. தங்களைப் பொறுத்தவரையில் வேற்றாளான நான் அதைப் பிரித்துப் படித்ததற்குத் தங்களிடம் முதலில்

"ஆசைக்கு ஒண்ணு, ஆஸ்திக்கு ஒண்ணா?"

"ஊஹூம்... லஞ்சத்துக்கு ஒண்ணு, சம்பளத்துக்கு ஒண்ணு...!"

- ஆர். மணிவண்ணன்





உதவியாளர் : நூல் நிலையங்கிற போர்டை ஏன் சார் வாசக சாலைன்னு மாத்தச் சொல்றீங்க?

நூலகர் : பல பேர் நூல்கண்டு ஸ்டாக் இருக்கான்னு கேட்டுக்கிட்டு வர்றாங்களே, அதனாலேதான்...!

- தஞ்சாவூர் ராஜ்பாரதி

மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். தங்களுக்கு உதவுவது மட்டுமே எனது நோக்கம்.

தங்கள் மகன் அருணாசலம் பிரான்ஸ் நாட்டில் இல்லை என்னும் திட்டவட்டமான தகவல் எங்களுக்கு மேடம் காமாவிடமிருந்து வந்து வெகுநாளாயிற்று. ஆனால் அத்தகவல் வந்த நேரத்தில் இந்திரநாத் பானர்ஜி எங்களுடன் இல்லை. இருந்திருந்தால் எப்படியாவது அந்தத் தகவலைத் தன் தம்பி நரேந்திரநாத் மூலம் தங்களையடையச் செய்திருப்பான். அருணாசலம் பிரான்ஸையடையாததால் மிக மோசமான நிலைக்கு அவன் ஆளாகி இருக்கலாம் என்று நாங்கள் அஞ்சுகிறோம். ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு, வேறு எங்கேனும் சிறை வைக்கப்பட்டிருக்கலாம். அல்லது... ஐயா, அடுத்த சாத்தியக்கூறு பற்றி யோசிக்கையில் எனது கை நடுங்குகிறது. விநாயக் தாமோதர் சாவர்க்கருக்கு நேர்ந்தது போல் அவன் சுடப்பட்டிருக்கலாம். சாவர்க்கர் சுடப்பட்டும் தப்பி விட்டார். ஆனால் உங்கள் மகன் தப்பினானா இல்லையா என்பது தெரியவில்லை. நான் எழுதுவது வெறும் யூகத்தின் பேரில்தான். நான் நினைப்பது தவறாக இருக்கக்கூடும். ஆனால், தப்பி மட்டும் இருந்தால் செய்தி எப்படியும் எங்களுக்கு வந்து சேர்ந்து விடும். ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் எங்களுக்கு ஆதரவாளர்கள் இருக்கிறார்கள். ஆக, ஒன்று அவன் சுடப்பட்டிருக்கலாம். அல்லது அந்தமானிலோ அல்லது திலகர் சிறைவைக்கப்பட்டுள்ள பர்மாவைச் சேர்ந்த மாண்டலேயிலோ சிறை வைக்கப்பட்டிருக்கலாம். அருணாசலம் உயிரோடு இருக்கிறான் என்றே நாங்கள் நம்புகிறோம். தங்களுக்கு அதைரியமூட்டும் இக்கடிதத்தை எழுதாமல் என்னால் பொய்களைச் சொல்ல முடியும். ஆனால் தகப்பனாராகிய தங்களுக்கு உண்மை தெரிந்திருக்க வேண்டும் என்பதாலேயே மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு இதை எழுதுகிறேன். இளைஞனாகிய அருணாசலம், இந்தியா சுதந்திரம் பெற்றதும் சிறையிலிருந்து விடுபட்டு விடுவான் என்று நாம் நம்புவோமாக. அல்லது நன்னடத்தைக்காக அதற்கும் முன்னாலேயே கூட அவன் விடுவிக்கப்பட்டு, மறுபடியும் நமது போராட்டத்தில் இன்னும் அதிக முனைப்புடன் கலந்து கொள்ளவும் கூடும்.

இந்திரநாத் பானர்ஜி தற்போது எங்களுடன் இல்லை எனும் செய்தியால் தாங்கள் குழப்பமடைந்திருக்கக்கூடும். அவன் உயிருடனேயே இல்லை ஐயா, உயிருடனேயே இல்லை! அவன் தம்பி நரேந்திரநாத் ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருப்பதால் அவனுடனும் எங்களால் தொடர்பு கொள்ள இயலாதிருக்கிறது. அவன் அப்பாவின் கல்கத்தா விலாசத்துக்கு எழுதலாமென்றால், வயோதிக காலத்தில் தாங்குவாரா என்று கவலையாக இருக்கிறது. மேலும் அவர் மகனைக் காவல் துறை தேடிக் கொண்டிருப்பதால் அவருக்கு வரும் கடிதங்கள் சோதனைக்கு ஆட்படலாமல்லவா? அதனாலும் எங்களுக்குத் தயக்கமாக இருக்கிறது.

இந்திரநாத் பானர்ஜி இறந்ததற்குக் காரணம் சரியாகத் தெரியவில்லை. அடித்துப் போடப்பட்டு இறந்து போனான். வெள்ளையர்கள் சிலர் இந்தியரை இழிவாகப் பேசியதைத் தாங்க முடியாமல் அவன் பதிலடி கொடுத்து வார்த்தைகளால் சாடினான் என்ற செய்தி எங்களுக்குத் தெரிய வந்தபிறகு மறுநாள் எங்கள் விடுதியின் வாசலில் அவன் அடித்துப் போடப்பட்டுக் கிடந்தான். மருந்தும் பயனளிக்காமல் இறந்து போனான். 'என் தம்பியைச் சந்திக்க நேர்ந்தால் உன் அண்ணன் வந்தே மாதரம் என்று சொல்லிக் கொண்டேதான் உயிர் விட்டான் என்ற உண்மையை மறக்காமல் அவனிடம் சொல்லுங்கள். அவன் ரொம்பப் பெருமைப்படுவான்' என்று சொல்லிக் கொண்டே அவன் கண் மூடினான்.

உங்கள் மகன் அருணாசலத்தைப் பொறுத்த வரையில் உங்களுக்கு நல்ல செய்தி கிடைக்க வேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனை. வந்தே மாதரம்...


கையெழுத்திடப்படாத அக்கடிதத்தைப் படிக்கும் போதே ராஜாராமனின் பார்வை கண்ணீரால் மங்கியது. அவருக்கு அந்த அறை சுழல்வது போல் இருந்தது. கண்கள் இருண்டு, அறைச் சுவர்கள் தம்மை நோக்கி நகர்வன போல் தோன்றியது. கடைசியில் சமாளிக்க அவர் செய்த முயற்சி பயனற்றுப் போக, அவர் கட்டிலிலிருந்து உருண்டு கீழே தடாலென்று விழுந்தார்.

(தொடரும்)

அடைகாக்கும் கோழிகள்

அனந்தலட்சுமி

"இப்பவே மணி ஏழரை ஆறது. தொட்டு தொட்டு காரியம் இழுத்துண்டு தான் போறதே தவிர்த்து இன்னும் சமையல் ஆன பாடில்லை. ஆச்சு. இதோ ரகு குளிச் சுட்டு வந்துடுவான். ட்ரெயினுக்கு நாழியாற துன்னு பறப்பான். ஆபீஸ் கௌம்பற நேரத் துலதான் 'அதக் காணல, இதக் காணல' னுட்டு 'திதி'னு குதிப்பான். ஜானு எழுந்துக் கற நேரம். அவளுக்கு காப்பி கலந்து கொடுத் தாகணும். இதுல சின்னது கௌசி வேற எழுந்துடுத்துன்னா வேற வெனையே வேண் டாம். கார்த்தால எழுந்துக்கறச்சேயே அழுது ஆர்ப்பாட்டம் பண் ணிண்டு தொட்டதுக்கும் பிடிவாதம் பிடிச்சுண்டு ஆத்தையே ரெண்டு பண்ணிடும். அத சமா ளிக்கறதுக்குள்ளே போதும் போதும்னு



ஆயிடும்."

விசாலத்துக்கு இப்படி பேசிக் கொண்டே வீட்டு வேலைகளைக் கவனிப்பது வாடிக்கை யான ஒன்று. அப்படி செய்கையில் தான் வேலைகள் மளமளவென முடிகிறது என்பது அவளது எண்ணம்.


"ம்மா... ம்மா..." கொல்லை முற்றத்தில் கவுனை வழித்துச் சுருட்டிக் கொண்டு கையில் ஜட்டியைச் சுழற்றிக் கொண்டு நின்றிருந்தது, மூன்று வயது கௌசி. விசாலம் தண்ணீர்ச் செம்பை எடுத்துக் கொண்டு அதன் அருகில் செல்ல,

"நீ வாண்டாம். அம்மாதான் அலம்பி விடணும்" என்று சிணுங் கியது கௌசி.

"என் சமர்த்துல்ல. அம்மா தூங்கறாளோல்லியோ? பாட்டி அலம்பி விடறேன்டா" என்று கொஞ்சி கெஞ்சினாள். ம்கூம். ஒன் றும் பலிக்கவில்லை. கௌசி தன் அடித் தொண்டையைத் திறந்து கத்தி ரகளை செய்ய, அந்த சத்தத்தில் விழித்துக் கொண்ட ஜானு, தன் பானை வயிற்றைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு அசைய முடியாமல் அசைந்து நடக்க முடியாமல் நடந்து வந்தாள். 'புஸ்புஸ்'ஸென்று மூச்சு விட்டாள். ஒன்பது மாதக் கருவைச் சுமந்து கொண்டிருக்கும் அந்தப் பெரிய வயிற்றைப் பார்க்கும் போதெல்லாம் விசாலத்தின் பெற்ற மனம் பகீர் பகீரென அடித்துக் கொள் ளும்.

விசாலத்தின் கையிலிருந்த தண் ணீர் செம்பை வாங் கிக் கொண்டு குனிய முடியாமல் வயிற்றை அழுத்திக் கொண்டு கௌசியிடம் குனிந்து கழுவி விட, விசாலம் ஆற்றாமையும் வேத னையுமாய்,

"வயசு மூணாகப் போறது. இன்னமும்



''எந்த துணிச்சல்ல நீ பத்திரிகை நடத்தப் போறேன்னு சொல்றே?''
''எல்லாம் முதலமைச்சரை வாழ்த்தி வரும் விளம்பரங்களை நம்பித்தான்.''
- கி. சந்திரமோகன்

எதுக்கெடுத்தாலும் அம்மா அம்மானுட்டு. மத்தவா சுழுவி விட்டா கசக்கறதாக்கும்" என்று கத்த, ஜானுவுக்கு கோபம் வந்தது.

''ஏம்மா காலங்கார்த்தால குழந்தைய வெய்யறே? அதுக்கு என்ன தெரியும்?''

''பின்னே என்னடி! ரெண்டாவது பேறுக்கு பொறந்தாத்துக்கு அனுப்ப மாட்டேனு ஒத்தக் கால்ல நின்னா ஒன் மாமியார்காரி. அவோ கால்ல கையில விழுந்து ஒன்னை இங்க அழைச்சிண்டு வந்ததே ஒன் பாடு என்பாடுனு ஆயிடுத்து. இங்க வந்தும் ரெஸ்ட் எடுக்க விடாம இது நாள் முழுக்க ஒன் பிராணனை வாங்கறதே" என்று புலம்பிக் கொண்டே ஜானுவின் முறைப்பை சட்டை செய்யாமல் அடுக்களைக்குச் சென்று ஜானுவுக்காக தண்ணீர் விடாமல் எடுத்து வைத்திருந்த பாலைக் காய்ச்சி அளவான சர்க்கரை, டிகாக்ஷன் கலந்து குடிக்கும் சூட்டிற்கு நிதானமாய் ஆற்றி கூடத்திற்குக் கொண்டு வந்தாள்.

ஜானு தூணில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்தாள். முகத்தில் ஆயாசம் தெரிந்தது. பல் துலக்கி முகம் கழுவியிருந்ததில் காதோர முடிகளில் நீர்த் திவலைகள் தெரிந்தன. உதடுகள் வெளிறி வீங்கினாற்போல் பெருத்திருந்தன. முகம் களையற்றுப் போய் கண்களில் சோர்வு தெரிந்தது. அவளைப் பார்க்கும் போதே விசாலத்தின் முகத்தில் வாஞ்சையும் பரிவும் பொங்கின.

"ஜானு, காப்பிய சாப்டுட்டு கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ. நான் வெந்நீர் விளாவி வெச்சுட்டு கூப்பிடறேன். குளிச்சுட்டு சாப்ட்டுடலாம்" என்று காப்பியை நீட்டினாள். அருகில் அமர்ந்து ஜானுவின் கைவிரல்களைப் பின்புறமாய் மடக்கி சொடுக்கி விளையாடிக் கொண்டிருந்த கௌசி,

"எனக்கு காப்பி" என்றது.

அதன் வாயருகில் டம்ளரை நீட்டிய ஜானுவைத் தடுத்தாள் விசாலம்.

"நான் அதற்குப் பால் கொண்டு தரேன். இத நீ சாப்டு."

"ம்ஹூம். எனக்குப் பால் வாண்டாம். அம்மா காப்பிதான் வேணும்" என்று அடம் பிடித்தது கௌசி. ஜானு, டபராவிலிருந்த காப்பியை டம்ளரில் கொஞ்சம் கொஞ்சமாய் ஊற்றிக் கொடுக்க 'க்மக்... க்மக்' என்ற சத்தத்துடன் அத்தனை காப்பியையும் கௌசி காலி பண்ணி விட, விசாலத்தின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. கள்ளிச் சொட்டு போன்ற பாலில் தண்ணீரே விடாமல், வாயும் வயிறுமாய் இருக்கும் தன் மகளுக்காக ஆசை ஆசையாய் கலந்த காப்பியாயிற்றே!

"சனியன்... சனியன்" என்று முணுமுணுத்தாள்.

"இதுக்கு போய்க் குழந்தைய சனியன்னு திட்டணுமா? அதுக்கு இல்லாதது எனக்கு வேண்டியதில்ல" என்ற ஜானுவின் சிடுசிடுப்பைக் கண்டுகொள்ளாமல் அடுக்களைக்கு ஓடினாள்.

"அம்மா, நான் கிளம்பறேன்" - ரகு வாசல் நடையிலிருந்து குரல் கொடுத்தான். விசாலம் லொங்கு லொங்கென்று தன் வயதை மறந்து வாசல் நடைக்கு ஓடினாள்.

"ரகு, சாயங்காலம் வரச்சே அரை டஜன் ஆப்பிளும் கால் கிலோ திராட்சையும் வாங்கிண்டு வாடா. ஜானுவுக்கு நிறைய பழங்கள் சேர்க்கச் சொல்லியிருக்கா டாக்டர்."

"சரி, வாங்கிண்டு வரேன்" - ரகு கிளம்ப,

"ரகு, சித்தே நில்லேன். வரச்சே கௌசிக்கு கொஞ்சம் பேரீச்சை வாங்கிண்டு வரயா?" என்று கேட்டாள் ஜானு.

தலையசைத்த ரகு, எதற்காகவோ தனக்குள் சிரித்துக் கொண்டான்.


மாலை வேளை. வாசல் நடையில் அமர்ந்து தெருவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் ஜானு. கௌசி, ஜானுவின் தோள்களைப் பற்றிப் பின்னால் சாய்ப்பதும் முன்னால் தள்ளுவதும் அவளது மூக்கைப் பிடித்து திருகுவதும் கண்களைக் கைகளால் பொத்தி விரல்களால் அழுத்துவதுமாய் இருக்க, எல்லாவற்றிற்கும் வளைந்து கொடுத்துக் கொண்டிருந்த ஜானுவின் மேல் கோபமாய் வந்தது விசாலத்துக்கு.

"கௌசி, போய் விளையாடேன்டி. அம்மாவை இப்படிப் படுத்தறியே. பாவம் இல்,

84 பிறந்த நாட்களை கொண்டாடிய பிறகு நாங்கள் எங்களை பிறந்த நாள் கொண்டாடு வதில் வல்லுனர்களாகக் கருதுவதில் ஆச்சரியம் இல்லை!

அறிமுகப் படுத்துகிறோம்

DUGAR



உங்கள் செல்லக் குழந்தை வாயில் ஸில்வர் ஸ்பூனுடன் பிறக்கா விட்டால் என்ன! இதோ அதை ஈடுகட்ட ஓர் அரிய வாய்ப்பு. துகர் டெபாசிட் திட்டங்களில் ஏதேனும் ஒன்றில் அக்டோபர் 15ம் தேதிக்கு முன்பு டெபாசிட் செய்திடுங்கள். நீங்கள், பிரமிக்க வைக்கும் ஓர் இரட்டை ஆச்சரியம் பெறுவீர்கள். அத்துடன் 84 வயது வல்லுனர்களின் நல்வாழ்த்துக்க – ளையும் பெற்றிடுவீர்கள்.

DUGAR
FINANCE INDIA LTD

HIRE PURCHASE ⊃ LEASING ⊃ MERCHANT BANKING ⊃ PROPERTY DEVELOPMENT ⊃ PUBLIC DEPOSITS ⊃ FOREIGN EXCHANGE

REGD. OFFICE: DUGAR TOWERS, 123 MARSHALLS ROAD, MADRAS 600 008. ☎ 8283535 (10 LINES) FAX: 8281122

BRANCHES:

												SALEM	☎	68789
ADYAR	☎	4919046	MYLAPORE	☎	4942256	CALICUT	☎	63344	GUDUR	☎	21820	SECUNDERABAD	☎	846006
MOUNTROAD	☎	8521868	BANGALORE	☎	5565589	COIMBATORE	☎	231867	MADURAI	☎	36106	TIRUPATI	☎	21977
T.NAGAR	☎	4341541	MALLESWARAM	☎	365276	ERNAKULAM	☎	369515	NELLORE	☎	27576	VISHAKAPATNAM	☎	46581

Particulars required to be specified as per Non-Banking Financial Companies and Miscellaneous Non-Banking Companies (Advertisement) Rules, 1977.

(a) **Name of the Company:** DUGAR FINANCE INDIA LIMITED (b) **Date of Incorporation:** 20th May, 1981 (c) **Business:** Hire Purchase, Leasing, Property Development, Merchant Banking, Foreign Exchange & Portfolio Management. (d) **Branches:** Mount Road, Mylapore, T.Nagar, Adayar (Madras), Bangalore, Malleswaram, Calicut, Coimbatore, Ernakulam, Gudur, Madurai, Nellore, Salem, Secunderabad, Tirupati, Visakhapatnam. (e) **Management:** The Company is managed by its Managing Director under the supervision of the Board.

(f) Names, Addresses, and occupation of the Directors:
● **DR. C. ANNA RAO** (Chairman) Former Chairman, Board of Trustees, TTD, Chalikani Anna Rao Road, Srinivasa Colony, Tirupati -517 507 ● **Shri. B. LALCHAND MARLECHA** (Vice-Chairman) Merchant & Banker 30, Mannarswami Koil Street, Royapuram, Madras -600 013. ● **Shri. C.R. RAO** Company Director White House, Gudur -524 101 (A.P.) ● **Shri. V. RAMACHANDRAN** Senior Advocate 24, Nungambakkam High Road, Madras -600 034 ● **Shri. C.V. KRISHNAIAH** Mine Owner & Company Director "Sree Krupa", Nehru Nagar, Gudur -524 101 (A.P.) ● **Shri. R. RAMAKRISHNAN** Industrialist & Former Member, Rajya Sabha "Hari", 14, Seethamma Road, Madras -600 018 ● **Shri. M.K. PANDURANGA SETTY** Industrialist & Company Director "Prashanth", 27, Bull Temple Road, Bangalore -560 004 ● **Shri. S.B.T. PANI** Chief General Manager, [illegible] Company Director, "[illegible]", 45, Mandapam Road, Kilpauk, Madras -600 010 ● **Shri. T. PADAM DUGAR** Company Director 21, Commander-in-chief Road, Madras - 600 105. ● **Shri. N. TARACHAND DUGAR** (Managing Director) Industrialist & Banker 21, Commander-in-chief Road, Madras - 600 105.

(g) & (h) Profits of the Company, before and after making provision for Tax and Dividends declared by the Company for the three financial years immediately preceding the date of advertisement.

Year ended	Profit before provision for tax (Rs. in Lakhs)	Profit after provision tax (Rs. in Lakhs)	Dividend declared
30-06-1991	46.88	46.88	20%
30-06-1992	81.55	78.28	20%
30-06-1993	92.85	81.80	20%

(i) Summarised financial position of the Company as appearing in the two latest Audited Balance Sheets.

Liabilities	30-06-93 (Rs. in Lakhs)	30-06-92 (Rs. in Lakhs)	Assets	30-06-93 (Rs. in Lakhs)	30-06-92 (Rs. in Lakhs)
Share Capital	300.00	300.00	Fixed Assets	590.77	632.34
Reserves & Surplus	111.59	84.36	Investment	64.69	27.90
Secured Loans	625.77	664.49	Current Assets	1855.32	1610.21
Unsecured Loans	1303.37	924.81	Loans & Advances	212.74	199.33
Current Liabilities & Provisions	442.60	400.77	Miscellaneous Expenditure	59.81	15.55
	2783.33	2384.43		2783.33	2384.43

(j) **Contingent liabilities** 30-06-93 (in Lakhs) 30-06-92 (in Lakhs)

	30-06-93 (in Lakhs)	30-06-92 (in Lakhs)
(a) Estimated amount of contracts remaining to be executed on capital account and not provided for	1.00	3.00
(b) Counter guarantees to Bankers	5.00	5.00
The Company can raise by way of deposits under the directions	3517.80	3788.12
Aggregate of deposits actually held	1303.37	924.81

(k) **The Company has no overdue deposits other than unclaimed deposits.**

(l) **The Company hereby declares** (i) that the company has complied with the applicable provisions of the directions of Reserve Bank of India, (ii) that the compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the RBI and (iii) that the deposits accepted by the Company will be unsecured and rank pari passu with other unsecured liabilities.

This advertisement is issued on the authority and in the name of the Board of Directors of the Company. The text was approved by the Board of Directors on 23rd December 1993 and a copy duly signed by a majority of the Directors has been filed with the Regional Office of Reserve Bank of India, Department of Financial Companies, Bangalore.

By Order of the Board
For DUGAR FINANCE INDIA LIMITED
N. TARACHAND DUGAR Managing Director

லியா அவோ?"

"அம்மா, அவனை ஒரு குழந்தேனே நெனைக்கறதில்லே நீ" என்ற ஜானு.

"கௌசி கண்ணா, அம்மா பாத்ரூம் போயிட்டு வருவேணாம். நீ சமர்த்தா இங்கியே விளையாடிண்டிருப்பியாம்" என்று அதற்கு ஒரு முத்தம் கொடுத்து விட்டு கையை ஊன்றி எழுந்தாள்.

"இருடி ஜானு. இரும்பு வாளியை நீ தூக்க வாண்டாம். நான் கொண்டு வந்து பாத்ரூம்ல வெக்கறேன்" என்று விசாலம் அவன் பின்னாலேயே ஓட,

"ஏம்மா இதக்கூட நான் செஞ்சுக்க மாட்டேனா? கொழந்த வாசல்ல தனியா வெளையாடிண்டு இருக்கானேனு இல்லியா ஒனக்கு? பஸ்ஸும் லாரியுமா போறது. தெருவில இறங்கிடப் போறா. அவளப் பார்த்துக்கோ" என்று சிடுசிடுப்பாய்க் கூறி விட்டு ஜானு நகர,

"இருடிம்மா. நான் வாளியக் கொண்டு வெச்சுட்டு வந்துடறேன். அப்புறமா நீ போலாம். அதுவரை நீ இங்கியே இருந்து அவளப் பார்த்துண்டிரு" என்று விட்டு கொல்லைப்புறத்திற்கு விரைந்தான் விசாலம்.

காலை பதினொரு மணி.


அதிகாலை எழுந்தது முதல் பம்பரமாய் சுழன்று சுழன்று சமையல் மற்றும் வீட்டு வேலைகளைப் பரக்க பரக்க செய்து முடித்து, ரகுவை அலுவலகம் அனுப்பி ஜானுவையும் கௌசியையும் கவனித்து ஒரு வழியாய் காலை நீட்டி கைகளால் நீவி விட்டுக் கொண்டு அமர்ந்திருந்தாள் விசாலம். பாவம், அவளுக்கும் வயது கொஞ்சமாகவா ஆகிறது! வைகாசி வந்தால் அறுபத்து நான்கு முடியப் போகிறதே! சோர்வும் தூக்கமும் கண்களை அழுத்த நான்கைந்து கொட்டாவிகள் வந்தாயிற்று. மணையைப் போட்டு சிறிது நேரம் தலையைச் சாய்த்தால் தேவலை என்றிருந்தது. ஆனால் அப்படியே கண்ணயர்ந்து விட்டால் என்ன ஆவது? பனிரெண்டு மணியளவில் ஜானுவுக்கு ஜூஸ் பிழிந்து தர வேண்டுமே! கொட்டாவியை மென்று கொண்டே,

"ஏண்டி ஜானு! தூக்கம் வந்தா சித்த நாழி தலைய சாய்க்கலாமோல்லியோ? இடுப் பொடியறாப்போல எத்தனை நேரம் தான் உக்காண்டிருப்பே" - அக்கறை பொங்கக் கேட்டாள் விசாலம்.

"உதவின்னு கேட்டு வந்தவங்களை எங்க தலைவர் சும்மா திருப்பி அனுப்பினதேயில்லை!"

"அடப்பாவமே, அவங்ககிட்டேயும் அஞ்சு பத்து கறந்துடுவாரா?"

- வேதபுரி எஸ். ரமேஷ்



"தூக்கம் வர்றதுதான். என்ன பண்றது? கௌசி இப்போ முழிச்சிண்டுட்டா சாதம் ஊட்டியாகணும். நான் ஊட்டாட்டா சாப்ட மாட்டாளே" என்றாள் ஜானு. கண்களில் தூக்கம் சுழன்று கொண்டிருந்தது.

விசாலம் எழுந்து சென்று ஒரு பழைய சலவை வேட்டியை எடுத்து வந்தாள். கத்தரிக்கோலால் சதுரம் சதுரமாய் வெட்டி பிறக்கப் போகும் குழந்தைக்காக லங்கோடு துணிகள் தயாரித்து ஒரு சிறிய பையில் அடுக்கிக் கொண்டிருந்தாள்.

"மாமி, ஒரு கால்படி கோதுமை மாவு இருந்தா கொடுங்களேன். சாயங்காலமா அரைச்சுட்டு வந்ததும் திருப்பி தந்துடறேன்" - எதிர் வீட்டு சாவித்திரி மாமி வந்தாள்.

"என்னடி ஜானு! பொறந்தாத்துக்கு வந்து இருபது நாளாகப் போறது. இன்னும் ஒன் உடம்பு தேறின பாடில்ல. நன்னா சாப்பிடறியோன்னோ? ஆத்துக்காரரைப் பிரிஞ்சிருக்கிற ஏக்கமோ?"

ஜானு சிரித்துக் கொண்டாள். தூங்கி விழித்து விட்ட கௌசியை எரிச்சலாய் பார்த்த விசாலம்,

"ம்க்கும்! சாப்பிட்டு என்ன பிரயோஜனம்? இதுதான் நாளெல்லாம் அவ பிராணனை வாங்கறதே. எங்கே ஒடம்பு தேர்றது? சித்த நாழி அவள நிம்மதியா இருக்க விடறதில்லே."

ஜானுவுக்குக் கோபம் வந்தது. "பாருங்கோ மாமி. குழந்தைக்கு என்ன தெரியும்னே நெனைக்க மாட்டேங்கறா. அதக் கண்டாலே ஆகறதில்ல இவளுக்கு. கரிச்சுக் கொட்டிண்டிருக்கா"

சாவித்திரி மாமிக்குச் சங்கடமாக இருந்தது.

"அம்மா! ரகு மாமா வந்துட்டா. எனக்கு பொம்மை வாங்கிண்டு வந்திருக்கா" - குட்டிப் புயலாய் ஓடி வந்த கௌசி உற்சாக மிகுதியில் ஜானுவின் மேல் 'பொதீர்' என விழ, விழுந்த வேகத்தில் அதன் முழங்கால் பலமாய் அவள் வயிற்றில் பதிய, 'அம்மா... ஆ' என அலறி விட்டாள் ஜானு.

இடுப்புப் பகுதியில் வலி தெறிக்க பற்களைக் கடித்துக் கொண்டு தூணில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள். கண்களின் ஓரங்களில் கண்ணீர் திரண்டிருந்தது. தலையை இருபுறமாய் வேகமாய் அசைத்து வலியைப் பொறுத்துக் கொண்டாள். நல்ல வேளை! விபரீதமாய் ஒன்றும் ஆகவில்லை.

பார்த்துக் கொண்டிருந்த விசாலத்தால் அதற்கு மேல் தாளமுடியவில்லை. கௌசியின் கைகளைப் பிடித்துக் கொண்டு கன்னம், முதுகு என்று பாராமல் சகட்டு மேனிக்கு அடித்து நொறுக்க ஆரம்பிக்க, கௌசி அலற, ஜானு தனது வலியை மறந்து, 'அம்மா விடு அவளை' என்று ஆவேசமாய்க் கத்தினாள். கௌசியை இழுத்து, தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

"ஏம்மா, உனக்கென்ன வெறியா புடிச்சுடுத்து? குழந்தைனு கூட பார்க்காம இப்படி போட்டு அடிக்கறயே! அதன் ஒடம்பு என்னத்துக்கு ஆறது? அது என்ன தெரிஞ்சா செய்தது? இப்போ எனக்கென்ன ஆயிடுத்து? செத்தா போயிட்டேன்?" என்று படபடவென பொரிந்த ஜானுவின் வாயை அவசரமாய்ப் பொத்தினாள் விசாலம்.

"பகவானே! என்னடி பேச்சு இது ஜானு! இந்த மாதிரி சமயத்துல நீ இந்த வார்த்தையெல்லாம் பேசலாமா? எனக்கு ஒடம்பெல்லாம் ஆடறதே"

புலம்பியபடி ஜானுவின் இடுப்பைத் தடவிக் கொடுத்தாள். அவளைத் தன் மடி மீது படுக்க வைத்துக் கொண்டு விசிறியால் விசிறினாள். நெற்றி வியர்வையைத் தனது சேலைத் தலைப்பால் ஒற்றி விட்டு அவளது தலையைக் கோதியவாறு கேட்டாள்.

"ஜானு! இப்போ வலி எப்படி இருக்கு? டாக்டரண்டை போலாமா?"

'நான் திட்டினது உனக்கு வலிக்கலையே! அது மாதிரிதானே அவ இடிச்சதும்' என்று சொல்ல நினைத்த ஜானு, பேசாமல் இருந்து விட்டாள். அம்மாவுக்கும் புரியும். புரிய வேண்டும். புரிந்தால் நல்லது...

இழக்காத இரவு

4

வெங்கட்டின் மார்பில் கைவைத்துத் தள்ளி அவன் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட இன்ஸ்பெக்டர் தங்கமுத்து, "என்ன ஆச்சு உங்களுக்கு? ஒழுங்கா நடந்த உண்மைகளை உங்க வாயாலேயே ஒத்துக்கங்க. இல்லைன்னா கொண்டு போய் லாக்கப்ல வெச்சி வேற மாதிரி விசாரிக்க வேண்டி வரும். உங்க வைஃப் ராதிகாவை தற்கொலை செய்துக்கச் சொல்லி வற்புறுத்தினீங்களா, இல்லையா?" என்றார்.

மீண்டும் ஆவேசப்பட்டான் வெங்கட். சொடக்குப் போட்டு அவர் முகத்துக்கு நேராய் ஒரு விரலைக் காட்டி முகத்தில் அத்தனை நரம்புகளும் புடைத்து நிற்க, "அந்த உத்தமியைப் பத்தி இனி ஒரு வார்த்தை பேசினா நான் மிருகமாயிடுவேன். என்னய்யா வேணும் உனக்கு? உண்மைதானே வேணும்? வர்றேன். இங்கேயே இரு. இப்ப வர்றேன்" என்று கத்தி விட்டு சட்டென்று படிகள் இறங்கி மறைந்தான் வெங்கட்.

அவனைத் தொடர்ந்து செல்வதா, இல்லை காத்திருப்பதா என்கிற குழப்பத்திலிருந்து அவர் விடுபடும் முன்பாகவே மூன்று, மூன்று படிகளாகத் தாவியேறி வந்து மூச்சிரைத்த வெங்கட், அவரிடம் ஒரு மடக்கப்பட்ட லெட்டரை நீட்டினான்.

"இந்தாங்க. படிங்க. இதில இருக்கு உண்மை. ராதிகா தற்கொலை செய்துகிட்டப்போ எழுதி வெச்சது ரெண்டு லெட்டர்ஸ். ஒண்ணு இந்த சமுதாயம் முழுக்க படிக்கிறதுக்கு. இன்னொண்ணு நான் மட்டும் படிக்கிறதுக்கு எழுதப்பட்டது. படிச்சுப் பாருங்க. ரெண்டுமே அவ எழுதி தன் ஜாக்கெட்ல வெச்சிருந்தது தான். இந்த சம்பவத்தில நான் செஞ்ச ஒரே காரியம், எனக்காக எழுதப்பட்ட லெட்டரை யாருக்கும் காட்டாம பத்திரப்படுத்தினது மட்டும்தான். அது தப்புன்னா எனக்கு என்ன தண்டனை வேணும்னாலும் கொடுங்க" - அவன் குரல் அதன் உச்சத்தில் கிரீச்சிட்டது.



இன்ஸ்பெக்டர் தங்கமுத்து அந்தக் கடிதத்தைப் படிக்கத் துவங்கினார். படிக்கப் படிக்க அவருக்குள் ஒரு பரபரப்பு உயர்ந்தது. நெற்றியோர நரம்புகள் அசைந்தன. கண்கள் சிவந்தன. கடிதம் பிடித்திருந்த அவரின் விரல்கள் மெதுவாக நடுங்கின.

"ராஸ்கல்!" என்றார் மேலும் படித்தபடி.

முழுவதும் படித்து முடித்ததும் எதிரே நின்ற வெங்கட்டை நிமிர்ந்து பார்த்தார். பார்வை வழுக்கியது. இரண்டு விநாடிகளுக்கு மேல் அவன் முகத்தைப் பார்க்க முடியாமல் மெதுவாகத் தலைகுனிந்தார்.

அவன் அருகில் வந்தார். தோளில் கை வைத்தார்.

"ஐ'ம் ஸாரி வெங்கட். உங்க இடத்தில நானிருந்தா இப்படிப் பொறுமையா இருந்திருப்பேனாங்கிறது சந்தேகம்தான். யு ஆர் கிரேட். உங்க மனைவியோட வார்த்தைக்கு அவ்வளவு தூரம் மதிப்பு கொடுத்திருக்கிற நீங்க, ஒரு எக்ஸ்ட்ராடினரி ஜென்டில்மேன்."

கண்களில் கண்ணீர் வழிய நின்ற

பட்டுக்கோட்டை பிரபாகர்

அவனைக் கட்டிக் கொண்டார் இன்ஸ்பெக்டர் தங்கமுத்து.

"உங்க மனைவியைப் பத்தி ஒரு யூகத்துல நான் சொன்ன அபத்தமான கற்பனைகளுக்காக என்னை மன்னிச்சிடுங்க."

"நீங்க என்ன சார் பண்ணுவீங்க? உங்க கடமையில நீங்க சின்சியரா இருந்தீங்க. நான் ராத்திரி ரெண்டு மணிக்கு வந்து கதவைத் தட்டினப்போ, இறந்த அவ முகத்தில இருந்த சோகத்துக்கு தூக்கக் கலக்கம்தான் காரணம்னு சொல்லி என்னை சமாளிச்சுட்டா. நானும் எதையும் தப்பா எதிர்பார்க்கலை. படுத்து, பயணக் களைப்புல தூங்கிட்டேன். திடீர்னு முழிப்பு வந்தப்போ மூணு மணி. பக்கத்தில அவ இல்லை. தேடிப் பார்த்தா மாடி ரூம்ல தொங்கறா. ரெண்டு லெட்டர்ஸ்! படிச்சுப் பார்த்துட்டு எனக்குப் பைத்தியமே பிடிச்சிடுச்சி! சத்தம் வராம வாயைப் பொத்திக்கிட்டு அழுதேன். அப்படியே உக்காந்துகிட்டு இமைக்காம அவளையே பார்த்துக்கிட்டு வெதும்பிக்கிட்டிருந்தேன். எனக்குள்ளே பொங்கின ஆத்திரத்தை எல்லாம் ரொம்ப ரொம்ப சிரமப்பட்டு அடக்கிக்கிட்டேன். அவ சாகறதுக்கு முன்னாடி வெச்ச கடைசி கோரிக்கையை நிறைவேத்தலைன்னா அவ ஆத்மா சாந்தியடையாதுன்னு தோணிச்சு. அவ பர்சனலா எனக்கெழுதின லெட்டரை மறைச்சிடறதுன்னு தீர்மானிச்சேன். இன்ஸ்பெக்டர், உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். ஊர், உலகத்துக்கெல்லாம் அவ வயத்து வலி தாங்காம தற்கொலை செய்துக்கிட்டதாவே தெரியட்டும். ப்ளீஸ்... அதான் அவ விருப்பம். உண்மையான காரணத்தை உடைச்சி அவளுக்கு அவமரியாதை சேர்க்கப் போறீங்களா? தயவு செஞ்சி வேண்டாம் சார்...."

வெங்கட் அவரின் இரண்டு கைகளையும் பற்றிக் கொண்டு கெஞ்சினான் கண்ணீர் மல்க.

"கவலைப்படாதீங்க வெங்கட். சத்தியமா அந்தப் புண்ணியவதியோட ஆத்மாவுக்கு நான் களங்கம் சேர்க்கறதா இல்லை. ஆனா இந்த லெட்டர் என்கிட்டே இருக்கட்டும். ஒரு சின்ன வேலை இருக்கு. அதுக்கப்புறம் இதை நானே எரிச்சிடறேன். என்னை நீங்க நம்பலாம். இந்த காக்கிச் சட்டையைப் போட்டுக்கிட்டு உங்க முன்னாடி நிக்கவே எனக்குக் கூசுது."

"சார், ஒரு விரல் கண்ணைக் குத்திடுச்சிங்கிறதுக்காக எல்லா விரல்களையும் நொந்துக்கற முட்டாளில்லை சார் நான். நீங்க மனசாட்சி உள்ள ஆபீசர். உங்களைப் பார்த்து நான் பெருமைப்படறேன்."

"மனசாட்சி உள்ளவன் மட்டுமில்லை வெங்கட். தப்பு செஞ்சவங்க யாரா இருந்தாலும் அதுக்கான தண்டனையை அடைஞ்சுதான் ஆகணும்னு ஒரு கொள்கையை மனசுல ஆணித்தரமா எழுதி வெச்சிருக்கிறவன். வர்றேன், இப்போ தலை குனிஞ்சு போறேன். மறுபடி உங்களை சந்திக்கிறப்போ தலை நிமிர்ந்துதான் பார்ப்பேன்."

"நீங்க சொல்றது எனக்குப் புரியலை."

"சீக்கிரம் புரிஞ்சுக்குவீங்க" என்ற இன்ஸ்பெக்டர் புறப்பட்டார்.

ஸ்டேஷனுக்கு வந்த இன்ஸ்பெக்டர் தங்கமுத்து, "எஸ்.ஐ. எதுவும் போன் செஞ்சாரா?" என்றார் ஏட்டிடம்.

"இல்லைங்கய்யா. அவர் சம்சாரம் விவாகரத்து கேட்டு வக்கீல் நோட்டீஸ் அனுப்பிருக்குதுங்கய்யா, அதுல ரொம்ப அப்செட் ஆகி புறப்பட்டுப் போனவருதான்" என்றார் ஏட்டு.

"தன் பொண்டாட்டி வக்கீல் நோட்டீஸ் அனுப்ப ஏற்பாடு பண்ணிட்டிருக்கிறதா சொல்லிட்டிருந்தாரு. அது வந்துடுச்சா? வெளிலதான் ரொம்ப தைரியம் அந்தாளு. உள்ளுக்குள்ளே ரொம்ப கோழை" என்றவர் போன் எடுத்து கதிர்வேலை தொடர்பு கொண்டார்.

"ஹலோ கதிர்வேல், இப்பதான் ஏட்டு மேட்டர் சொன்னார். ரொம்ப அப்செட் ஆகாதீங்க."

"....."

"என்ன இது சின்னக் குழந்தையாட்டம்? மனசைக் குழப்பிக்காதீங்க. நிதானமா யோசிச்சு முடிவெடுங்க. நான் ராத்திரி பத்து மணிக்கு உங்க ஃபிளாட்டுக்கு வர்றேன். டிஸ்கஸ் பண்ணலாம். தைரியமா இருங்க" என்று போனை வைத்தவர், "என்னய்யா இது, இப்படி தேம்பித் தேம்பி அழுறான்? ஆய், ஊய்னு குதிப்பான். ஒரு வக்கீல் நோட்டீசுக்கே இவ்வளவு தூரம் நொந்துட்டான். பேசாம செத்திடலாம் மாதிரி இருக்குன்னு சொல்றான்யா" என்றார்.

"ரொம்ப அதைரியப் பட்டுட்டார் போல!"

"ஃபிளாட்ல அந்தான் மட்டும் தனியா வேற இருக்கான். நான் கொஞ்சம் சமா



மோட்டார் சைக்கிள் பரிசுத் திட்டம்
போட்டி - 6

● ''சங்கீதம்னா உனக்கு சாப்பாடு மாதிரியா?''
''இல்லை. சுவாசம் மாதிரி!''
● ''நான் கரை ஏறிட்டேன்; நீங்க இன்னும் ஏறல்லியே?''
● ''ஓடிப் போயிடலாமா?''
● ''அம்மா, நான் காலேஜுக்கு போயிட்டு வர்றேன்!''
● ''நீங்க நல்லவரா? கெட்டவரா?''

மேற்கண்ட ஐந்து 'டயலாக்'கள் அந்தந்தப் படங்கள் வெளி வந்த கால கட்டத்தில் மிகப் பிரபலமாய்ப் பேசப்பட்டவை. அவை எந்தெந்தப் படங்கள் என்று கண்டுபிடிக்க வேண்டியது இந்த வாரப் போட்டி:

கூப்பனில் விடைகளை நிரப்பி, 26 வார முடிவில் மொத்தமாக அனுப்புங்கள். அதிகப் போட்டிகளில் கலந்து கொண்டு, அதிக வெற்றி பெற்றவருக்கு மோட்டார் சைக்கிள் பரிசு. தவிர ஆறுதல் பரிசுகளும் உண்டு. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

போட்டி - 6
டயலாக் இடம் பெற்ற படங்கள்:
1.
2.
3.
4.
5.
என் பெயர்:......................................
முகவரி:..
....
....

தானப் படுத்தியே ஆகணும்.'' என்றார் தங்க முத்து.

இரவு பத்து மணிக்கு ஆறு மாடிகள் கொண்ட அந்த அபார்ட்மெண்ட்சில் ரெண்டாவது மாடியில் உள்ள ஃபிளாட்டில் உள்ள சப்-இன்ஸ்பெக்டர் கதிர்வேலைப் பார்க்க வந்தார் மஃப்டி உடையிலிருந்த தங்க முத்து.

உற்சாகமாக வரவேற்ற கதிர்வேல், "விண்ட்டேஜ் வாங்கி வெச்சிருக்கேன்'' என்றார்.

"மொட்டை மாடில காத்து சில்லுன்னு வருமே, எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு அங்க போயிடலாமே...''.

"தாராளமா.''

இருவருமாக நாற்காலிகளை, டீப்பாய், விஸ்கி, சிக்கன் பிரியாணி, சிப்ஸ், கடலை, சோடா என்று சகலமும் எடுத்துக் கொண்டு மொட்டை மாடிக்கு வந்தார்கள்.

பொதுவான விஷயங்கள் பேசிவிட்டு கதிர்வேலின் மனைவி விவாகரத்து நோட்டீஸ் அனுப்பியிருக்கும் விஷயத்திற்கு வருவதற்குள் கதிர்வேல் மூன்றாவது ரவுண்டு முடித்து விட்டார்.

"உங்க மனைவி உங்ககிட்ட கோவிச்சிட்டுப் போய் ஆறு மாசமிருக்குமில்லே?'' என்றார் தங்கமுத்து.

"ஒரு வருஷம் ஆச்சு சார்.''

"உங்க வைஃப் இல்லாதது உங்களுக்கு ரொம்ப வசதியாப் போச்சு. இஷ்டத்துக்கு கொட்டமடிச்சிருப்பீங்களே!''

"ஹிஹி! அது ஒரு சௌகரியம்தான். அவ இருந்தா லாட்ஜுல ரூம் போடணும். ஏதாச்சும் அவளுக்குப் பொய் காரணம் சொல்லணும். இப்ப போன் பண்ணி வீட்டுக்கே வரவழைச்சுடலாம் பாருங்க.''


"அதுசரி, இந்த வெங்கட்டோட சம்சாரம் - அதான் தற்கொலை செஞ்சுக்கிட்டு செத்துப் போச்சே, அந்தப் பொண்ணை என்ன செஞ்சீங்க?''

கதிர்வேல் போதையிலும் திடுக்கிட்டார்.

"என்ன சொல்றீங்க நீங்க?''

"ஒண்ணுமில்லை. அந்தப் பொண்ணு ராதிகா உண்மையை இன்னொரு லெட்டர்ல தன் புருஷனுக்கு எழுதி வெச்சிட்டு தான் தற்கொலை பண்ணிட்டிருக்கா. அதைப் படிக்கிறேன், கேளுங்க.''

தன் சட்டைப் பையிலிருந்து அந்தக் கடிதம் எடுத்து வாய்விட்டுப் படிக்கத் துவங்கினார் தங்கமுத்து.




அதைவிட உங்கள் அக்கறைகளையும் உணர்ந்தவர்கள்.

''அன்புள்ள கணவருக்கு, உங்கள் மனைவி ராதிகா எழுதியது. இரவு பதினொரு மணி இருக்கும். பெங்களூரிலிருந்து ஒரு போன் வந்தது. உங்கள் கம்பெனியின் பெங்களூர் கிளை ஆபீசர் பேசினார். 'மேடம், பெங்களூர்ல உங்க ஹஸ்பண்ட் ஏறின விமானம் புறப்பட்டு கொஞ்ச நேரத்தில இயந்திரக் கோளாறாகி...' அவ்வளவுதான் சொன்னார். வாக்கியம் முடிப்பதற்கு முன் தொடர்பு அறுந்து போய் நமது தொலைபேசி சுத்தமாக டெட் ஆகிவிட்டது. எவ்வளவு முக்கியமான தகவல்! இப்படி முழுக்கத் தெரியாமல் அறுந்தால் என் பதட்டம் எப்படியிருக்கும்? யோசித்துப் பாருங்கள். விமானம் என்ன ஆயிற்று? உங்களுக்கு என்ன ஆயிற்று? எனக்குப் பைத்தியம் பிடித்து விடும் போலிருந்தது. மேற்கொண்டு விபரம் யாரைக் கேட்பது? யாருக்காவது போன் செய்யலாம் என்றாலும் போன் செத்துக் கிடக்கிறது! சட்டென்று எனக்கு நீங்கள் ஒருமுறை அறிமுகப்படுத்திய சப்-இன்ஸ்பெக்டர் கதிர்வேலின் நினைவு வந்தது. அவர் அதிகாரத்தோடு பலருக்கு போன் செய்து சரியான தகவல் பெற்றுத் தருவார் என்று நம்பினேன். அதனால் உடனே வீட்டைப் பூட்டிக் கொண்டு எஸ்.ஐ. கதிர்வேலின் பிளாட்டுக்கு வந்தேன். விஷயத்தைப் பதட்டத்தோடு சொன்னேன். என்னை ஆசுவாசப்படுத்தினார். குடிக்க தண்ணீர் கொடுத்தார். சில விநாடிகளில் எனக்கு தலை சுற்றியது. ஒரு வித போதையான மயக்கம் ஏற்பட்டது. உணர்விருந்தும் இல்லாத நிலை. அந்தப் பொறுக்கி என் உடைகளைக்களை வதை என்னால் எதிர்க்க முடியவில்லை. அவன் என்னை... என்னை...

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு போதை தெளிந்து, எழுந்து, உடைகளைத் திருத்தி குமுறி அழுதேன். 'வெளியே சொன்னால் உனக்குத்தான் வெட்கக்கேடு!' என்று அலட்சியமாகச் சொன்னான் இறக்கமில்லாத அந்தப் பாவி. வந்து விட்டேன். கதறி அழுதேன். தீர்மானித்தேன்.

"எந்த பிரச்னையும் இல்லாமல் நீங்கள் வந்து தாமதத்திற்கான காரணம் சொன்னீர்கள். திடீரென்று எனக்கேற்பட்ட களங்கத்தை நான் எப்படிச் சொல்வது? எனக்கு வாழப் பிடிக்கவில்லை, போகிறேன். அன்புள்ள கணவரே, என் மரணத்தின் உண்மையான காரணம் உங்களுக்கு மட்டும் தெரிய வேண்டும் என்றுதான் எழுதினேன் இதை. ஒரு மகத்தான பொய்யோடு நான் சாவதில் சம்மதமில்லை. எனக்கு ஒரு உறுதிமொழி வேண்டும் உங்களிடமிருந்து. இதனால் ஆத்திரப்பட்டு பழி வாங்கும் நடவடிக்கைகளில்





''சார்... உங்களைத் தேடி ஒரு பாட்டி வந்திருக்காங்க.''

''பாட்டியா! எதுக்கு?''

''அவங்க குழந்தை நட்சத்திரமா நடிச்ச முதல் படத்துக்கு நீங்க இன்னும் பணம் செட்டில் பண்ணலையாமே!''

— புளியரை கணேசன்

ஈடுபட மாட்டேன் என்பது ஒன்று, எக்காரணம் கொண்டும் உனக்கேற்பட்ட இந்த அவமானத்தை ஊரறியச் செய்யமாட்டேன் என்பது ஒன்று. அந்த மிருகத்தைப் பழி வாங்குவதால் நீங்கள் சிறை செல்ல நேரிடலாம். உங்களுக்கு அந்த அவமானம் கூடாதென்பதால் மீண்டும் என் கோரிக்கையாக, இறுதி விண்ணப்பமாக உங்களை அமைதியும், ரகசியமும் காக்கச் சொல்கிறேன். சட்டப் பிரச்னைகள் வரக் கூடாதென்பதற்காக எனக்கு அடிக்கடி நிஜமாகவே வரும் வயிற்றுவலியை மரணத்திற்குக் காரணமாகக் காட்டி மற்றொரு கடிதம் எழுதி வைத்திருக்கிறேன். அதை போலீசுக்கும், மற்றவர்களுக்கும் காட்டுங்கள். இந்தக் கடிதத்தைப் படித்து விட்டு உடனே எரித்து விடுங்கள். தங்களை விட்டுப் பிரிந்து செல்ல அனுமதியுங்கள். தங்கள் அன்பு மனைவி, ராதிகா.

கடிதம் முழுக்கப் படித்துவிட்டு நிமிர்ந்தார் தங்கமுத்து.

சப்-இன்ஸ்பெக்டர் கதிர்வேலின் முகம் வெளிறியது. போதையின் தள்ளாட்டத்தோடு சேர்ந்து பதட்டமும் தொற்றிக் கொள்ள, உடல் நடுங்கியது.

அவரையே பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் தங்கமுத்து, "நீ எல்லாம் ஒரு போலீஸ் அதிகாரியாடா? எதுக்குடா ஒரு குடும்பப் பொண்ணை இப்படி சதி பண்ணி கற்பழிச்சே? வெக்கமா இல்லை உனக்கு? காவல் துறைடா இது! காவல்னா என்ன அர்த்தம்? உதவி கேட்டு வந்தவளை சீரழிச்சு இப்படி சாகடிச்சிட்டியேடா பாவி! எதுக்குடா உனக்கு காக்கிச் சட்டை? காக்கி கலர் தியாகத்தைக் குறிக்கிற மகத்தான நிறம்டா. உழைப்பைக் குறிக்கிற உன்னத நிறம்டா. எந்திரிடா" என்று ஆத்திரமாக கதிர்வேலின் சட்டையைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினார்.

போதையின் காரணமாக நிற்க முடியாமல் தள்ளாடினார் கதிர்வேல்.

''இத பாருங்க...''

''ஷ்! நீ எதுவும் பேசாதே! உன்னை மாதிரி ஒரு சில பொறுக்கிங்களால ஒட்டு மொத்தமா டிபார்ட்மெண்ட்டுக்கே கெட்டப் பேரு! தன் வைஃபோட வேண்டு கோளுக்காக வெங்கட் உன்னை தண்டிக்காம விடலாம்! ஆனா நான் ஒரு நேர்மையான போலீஸ்காரன். உனக்கு தண்டனை வேணும்டா! அப்பதான் எனக்கு தலை நிமிரும்!'' என்றவர் கையில் இப்போது துப்பாக்கி இருந்தது.

"அய்யோ!" என்றார் கதிர்வேல்.

"நட! நடடா!" என்று துப்பாக்கி முனையில் கதிர்வேலை அந்த மொட்டை மாடியின் கைப்பிடி சுவருகில் நடத்தி வந்தபின், "நீ சாகணும் கதிர்வேல். அதுக்கு அரசாங்கம் கொடுத்திருக்கிற இந்த துப்பாக்கியையும், தோட்டாவையும் பயன்படுத்த வெச்சுடாதே! கமான், ஜம்ப்! ஏறிக் குதிச்சுடு பார்க்கலாம்" என்றார்.

கதிர்வேல் ஆறு மாடிகளையும் சில விநாடிகளில் கடந்து கீழே மோதி, சிதைப் பாய்ச் சிதறினார்.

அவசர அவசரமாகப் படிகளில் இறங்கி கீழே வந்த இன்ஸ்பெக்டர் தங்கமுத்து, அதற்குள் கூடிவிட்டிருந்த கூட்டத்தை விலக்கிப் பார்த்து, ''மைகாட்!'' என்று திட்டமிட்டபடி அதிர்ந்து, ''யார் வீட்ல போன் இருக்கு?'' என்றார் பரபரப்பாக.

போனுக்கு வந்து அவசரமாக எஸ்.பி.க்கு போன் செய்து, "சார், நான் இன்ஸ்பெக்டர் தங்கமுத்து பேசறேன். நம்ம ஸ்டேஷன் எஸ்.ஐ. கதிர்வேல் தன் மனைவி டைவர்ஸ் நோட்டீஸ் அனுப்பிச்சிட்டதுக்காக ரொம்ப நொந்து போயிருந்தார். அவருக்கு, அவர் வீட்ல மொட்டை மாடியில வெச்சி அட்வைஸ் பண்ணிட்டிருந்தேன். தண்ணியடிச்சுட்டு நிதானத்தில இல்லாம, தன்னிரக்கத்தோட தன் மனைவியை கொடுமைப் படுத்திட்டதா நொந்து போய் பேசிட்டிருந்தவர், திடீர்னு ஓடிப் போய் மொட்டை மாடி லேர்ந்து குதிச்சுட்டார் சார். நான் எதிர் பார்க்கவே இல்லை. ஒரு சடன் டிப்ரஷன்ல பைத்தியக்காரத்தனமா தற்கொலைல இறங்கித் தொலைச்சுட்டார்'' என்று மேலும் விவரங்கள் சொல்லத் துவங்கினார்.

போன் செய்துவிட்டுப் புறப்பட்ட இன்ஸ்பெக்டர், வழியில் ஒரு இருட்டான தெருவின் குப்பைத் தொட்டி அருகில் பைக்கை நிறுத்தி, ராதிகாவின் கடிதம் எடுத்தார். லைட்டரால் நெருப்பூட்டி பற்ற வைத்தார்.

கடிதத்தின் ஜுவாலையில் தெரிந்த அவர் முகத்தில் ஒரு கம்பீரம் மின்னியது.

முற்றும்

டாக்டர் பேசுகிறார்!

ஏது இருந்தாலும் தலைக்கனம் இருக்கக் கூடாதே!



போன வாரம் முழுக்க முழுக்க 'பிளேக்' பரபரப்பு! அவ்வளவு கொடுமையான உயிர்க் கொல்லி நோய்க்குத் தடுப்பு மருந்தும் சிகிச்சை மருந்துகளும் இருக்குது. ஆனால் ஒரு சாதாரண, தினசரி தொல்லையான ஜலதோஷத்துக்குச் சிகிச்சையே கிடையாது என்னும்போது ஆச்சரியமாயில்லை!

'ஜலதோஷத்துக்குச் சிகிச்சையளிக்கப்பட்டால் ஏழு நாட்களில் குணமாகும்; சிகிச்சை அளிக்காமல் இருந்தால் ஆறு நாட்களில் குணமாகும்!' - என்பது மருத்துவ நூல்களிலேயே காணப்படும் 'பொன்மொழி.'

இதுக்குக் காரணம் ரொம்ப சிம்பிள். பிளேக், காலரா மாதிரியான நோய்களை உண்டாக்கறது பாக்டீரியா நுண்கிருமிகள்.

தோஷத்துக்கு மருந்து இல்லை!

ஆனால் ஜலதோஷம், ஃப்ளூ ஜுரம் வருஷா வருஷம் மெட்ராஸ் ஐ - இதெல்லாம் 'வைரஸ்' என்கிற நுண்கிருமி கன்னால வருது. ஜலதோஷத்தை ஏற்படுத்தக் கூடிய எண்பத்தெட்டு வகை வைரஸ்கள் உள்ளன என்பது ஒரு கணக்கெடுப்பு! (இது சுமார் பதினைந்து வருஷத்துக்கு முந்தைய கணக்கெடுப்பு என்கிறதால இப்ப இன்னும் கூட அதிகமாகியிருக்கலாம்)

பாக்டீரியாக்களை எதிர்த்துப் போராடி ஒழிக்கிற மருந்துகள்தான் 'ஆன்டிபயாடிக்குகள்' - டெராமைஸின், டெட்ராஸைக்ளின், ஆம்பிஸிலின் போன்ற 'இன்' விகுதி மாத்திரைகள். இப்போது புதிய தலைமுறை ஆன்டிபயாடிக் வந்திருக்கிறது. இது 'அமாக்ஸிஸிலின்' என்கிற அடிப்படைப் பொருள் கொண்டது. 'ஆம்ப்கிளாக்ஸ்' 'நோவாகிளாக்ஸ்' என்று 'கிளாக்ஸ்' விகுதி கொண்ட பெயர்களுடன் படு காஸ்ட்லி மருந்துகள்!

பாக்டீரியாக்களை எதிர்த்துப் போராட மருந்து இருக்கிற மாதிரி வைரஸ் கிருமிகளை எதிர்த்துப் போராட மருந்தே கிடையாது! இதுனாலதான் ஜலதோஷத்துக்கு ட்ரீட்மென்ட் இல்லை என்று சொல்றோம்.

ஆனால், அதே ஜலதோஷம் ரொம்பத் தீவிரமா ஆகிறபோது உடல் தளர்ந்து எதிர்ப்பு சக்தி குறையறதால உடம்பில் வேறு சில பாக்டீரியா தொற்றுக் கிருமிகள் வந்து ஒட்டிக் கொள்ள வழி செய்யுது. உதாரணமா - தொண்டை புண்ணாகுது; நெஞ்சில் கபம் கட்டிக் கொண்டு ஜுரம் வருது.. காதில் கூட சில சமயம் சீழ் பிடித்துக் கொண்டு வலி வருது. இதை 'செகன்டரி இன்ஃபெக்ஷன்'னு சொல்லுவோம். ஜலதோஷம், ஜுரம், இருமல்னு டாக்டரிடம் போகும்போது அவர் ஆன்டிபயாடிக் எழுதிக் கொடுக்கறது இந்த செகன்டரி இன்ஃபெக்ஷனைப் போக்கத்தான். சாதாரணமா யாரும் ஜலதோஷம் பிடிச்சதுமே டாக்டர்கிட்டே ஓடறதில்லை. இரண்டு நாள் பொறுத்துப் பார்ப்போம். மூன்றாம் நாள் ஜுரமோ, தொண்டை வலியோ வர்றப்பதான் டாக்டரிடம் போவோம். அவரும் 'மூணு நாளைக்குச் சாப்பிடுங்க'ன்னு மருந்து எழுதிக் கொடுப்பார். அந்த மருந்து 'கோர்ஸ்' முடிந்ததும் உடம்பு நேராகும். மருந்து

சாப்பிட்டதாலதான் ஜலதோஷம் போச்சுன்னு நாம நினைச்சுக்குவோம்; ஆனால் ஜல தோஷம் இயல்பா ஆறு நாள் நீடிச்சுட்டுத் தானாகக் குணமாகியிருக்கும். டாக்டர் குடுத்த மருந்துகள் ஜல தோஷத்தையொட்டி வந்த மற்ற தொல்லைகளைப் போக்கத்தான் உதவியிருக்கும்!

'ஜலதோஷமா? எங்கள் மாத்திரையைப் போட்டுக் கொள்ளுங்கள்; நொடியில் நிவாரணம்...' என்று சில மாத்திரைகளை விளம்பரம் செய்கிறார்களே...? என்று நீங்கள் கேட்பீர்கள். இந்த மாத்திரைகளினால் தற்காலிக நிவாரணம்தான் தர முடியும் - (இதை நாங்கள் 'symptomatic relief' என்று சொல்வோம் - அதாவது ஜலதோஷத்தின் அறிகுறிகளை அகற்றும்) ஆனால் ஜலதோஷ காரணியான வைரஸ் கிருமிகளிடம் இந்த மருந்துகளால் வாலாட்ட முடியாது! பொது வாக, இந்த மருந்துகளையெல்லாம் நாமாக வாங்கிச் சாப்பிட்டுச் சுய வைத்தியம் செய்து கொள்வது சரியில்லை.

மழைக்காலம் வந்துவிட்டது. இனி திரும்பிய பக்கமெல்லாம் தும்மல், மூக்குறிஞ்சல்தான். 'வெந்நீரில் குளி'; 'மழையில நனையாதே'; 'இந்தக் குளிரில ஐஸ் வாட்டரா?'; 'இளநீர் குடிக்காதேன்னு சொன்னேன்; கேட்டியா?' 'மோர் சாதம் வேண்டாம்' இப்படியான டயலாக்குகள் வீட்டில் அடிக்கடி கேட்க ஆரம்பிக்கும். இந்திய மருத்துவ முறையில், (ஆயுர்வேதம், சித்தம் போன்றவை) குளிர்ச்சிக்கும் சளிக்கும் சம்பந்தமிருப்பதை ஏற்கிறார்கள். ஆனால் அலோபதி முறையில் இந்த சித்தாந்தத்தை ஏற்பதில்லை. ஜல தோஷம் என்பது வைரஸ் கிருமி விளைவிக்கும் allergic reaction - (ஒவ்வாமை விளைவு) என்றுதான் சொல்கிறோம். ஒவ்வாமையை எதிர்க்கும் anti-allergic மருந்துகளைச் சில சமயம் கொடுக்கிறோம். முன்பெல்லாம் இந்த மருந்துகளைச் சாப்பிட்டால் தூக்கம் தூக்கமாக வரும். இப்போது தூக்கம் ஏற்படுத்தாத anti-allergic மருந்துகள் வந்துவிட்டன. ஆனால் எந்த மருந்தையுமே அடிக்கடி சாப்பிடாமல் இருப்பது நல்லது.

'அது எப்படி டாக்டர், எனக்கு மாசத்துக்கு இரண்டு முறை சளி புடிக்குது; டஜன் கணக்கில் தும்மல்; குழாயைத் திறந்த மாதிரி மூக்கிலிருந்து தண்ணி கொட்டுது; போதாததுக்குத் தலைக்கனம்... மருந்து சாப்பிடாமல் என்ன செய்ய...?' என்று சிலர் கேட்பீர்கள். இந்தத் 'தலைக்கனக்காரர்களுக்கு' அடுத்த வாரம் பதில் சொல்கிறேனே!

- டாக்டர் ஆர். பார்த்தசாரதி



காதலின் நாற்றங்கால்!

கண்கள் —
இதய மாளிகையின்
இரு வாசல்கள்.

கண்கள் —
அகத்தைக் காட்டும்
முகத்தின் சாளரங்கள்.

கண்கள் —
கண்ணீர்க் குளத்தில்
கரையேறா மீன்கள்.

கண்கள் —
காதல் தூது செல்லும்
கருவண்டுகள்.

கண்கள் —
மௌனமொழி பேசும்
மனதுக்குத் தூண்டில்.

கண்கள் —
கவிதையின் ஊற்றுக்கண்
காதலின் நாற்றங்கால்.

கண்கள் —
உணர்ச்சிச் சுடர்விடும்
உயிர்த் தீபங்கள்.

— கமலக்கண்ணன்



ஐசிஎஸ் R. நடராஜன்
நிர்வாக இயக்குநர்

ஐசிஎஸ்

(நிதி நிறுவனம்)

221, சத்தியமூர்த்தி சாலை, ராம் நகர்
கோயமுத்தூர் - 641 009.

54 ஆண்டுகளுக்கு
மேலான அரிய சேவை

குறுகிய கால டெபாசிட் திட்டம்

காலம்	ஒரு நாள் முதல் 12 மாதங்கள் வரை
வட்டி விகிதம் ஆண்டுக்கு	**15%**

டெபாசிட் தொகையை எப்போது வேண்டுமானாலும் உரிய வட்டியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

சுபிட்சம் வைப்புத் திட்டம்

ரூ. 10,000/- செலுத்தினால் 45 மாதங்களில்

ரூ. **21,000/-** கிடைக்கிறது.

பிக்சட் டெபாசிட் திட்டம்

காலம்	12 மாதங்கள்	24 மாதங்கள்	36 மாதங்கள்	48 மாதங்கள்	60 மாதங்கள்
ஆண்டுக்கு ஒரு முறை வட்டி	**18%**	**18.5%**	**19%**	**19.5%**	**20%**
மாதம் ஒரு முறை அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறை வட்டி	**16%**	**16.5%**	**17%**	**17.5%**	**18%**

கார்கள், இதர இலகுவான வாகனங்கள் (Light Vehicles), கோவை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அசையா சொத்துக்கள், ஷேர் சர்டிபிகேட்கள், இந்திர விகாஸ் பத்திரங்கள், தங்க நகைகள் ஆகியவற்றின் பேரில் கடன் பெற நேரில் அணுகவும்.

மூன்று தலைமுறை வாடிக்கையாளர்களின் முழு நம்பிக்கையைப் பெற்றது !

"காமெடி இல்லை; காம நெடிதான்!"



"அந்தக் காலத்துப் படங்களில் காமெடி இருந்தது. இந்தக் காலத்துப் படங்களில் இருப்பது வெறும் காம நெடிதான்" என்று அடிக்கடி சிரிக்கச் சொல்லி சிந்திக்க வைப்பார் மறைந்த நகைச்சுவை நடிகரான தங்கவேலு.

ஏறத்தாழ எண்ணூறு படங்களில் நடித்தவர்; மூவாயிரம் முறை மேடை ஏறியவர்.

"ஒண்ணு, தூங்கும்போது செத்துப் போயிடணும்; இல்லை மேடையில் நடிக்கும் போது உயிர் போயிடணும். அதுதான் எனக்கு ஆசை" என்பார்.

சிறு வயதிலேயே நாடகக் கம்பெனிக்கு வந்து விட்டவர். பாய்ஸ் கம்பெனி, நவாப் ராஜமாணிக்கம் குழு என்று பல கம்பெனிகளில் இருந்து திறமையை மெருகேற்றிக் கொண்டவர். "அதனால்தான் சினிமாவில் எவ்வளவு பிஸியாகவும், பிரபலமாகவும் இருந்தபோதிலும் தொடர்ந்து நாடகங்களிலும் நடித்துக் கொண்டிருந்தார். மேடையை மிகவும் புனிதமாய்க் கருதினார். நாடகம் நடக்கும் போது மேடையில் தோன்றுபவர்கள் தவிர பிற நடிகர்களும், மற்ற டெக்னீஷியன்களும் மேடையின் பக்கவாட்டில் உட்கார்ந்து கொண்டு அரட்டை அடிப்பதை அவர் ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்" என்கிறார் நாடக ஆசிரியர் ராது.

தங்கவேலுவுக்கு 'சதிலீலாவதி' முதல் படம். அதுவே எம்.ஜி.ஆருக்கும், கூட முதல் படம். அவர்கள் இருவரும் மளமளவென்று வாய்ப்புகளைப் பெற்று விட்டாலும், தங்கவேலு இரண்டாவது சினிமா சான்ஸ் கிடைக்கப் பதினேழு வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. படம்: பணம்.

அவர் இளமையாய் இருந்தாலும் அவருக்குக் கிடைத்தவை என்னவோ சற்று வயதான குணச்சித்திர, நகைச்சுவை கேரக்டர்கள்தான். "என் அதிருஷ்டத்தைப் பாரு! என் வயசு நடிகர், நடிகைகளுக்கு நான் அப்பாவா நடிக்க வேண்டியிருக்கு" என்பார் தமாஷாய்.

நாடகாசிரியர் ராது 92-ல் தாம் எழுதிய நாடகங்களைத் தொடர்ந்து 36 மணி நேரங்கள் நடத்திய போது, நான்கு நாடகங்களில் (சுமார் ஒன்பது மணி நேரம்) தங்கவேலு உற்சாகமாய் நடித்தார். அவருக்கு அப்போது வயது எழுபத்தைந்து!

"ஒருநாள் நாடகத்தின் பூஜை. குத்து விளக்கேற்ற தீப்பெட்டி கேட்ட போது, பத்து கைகள் நீண்டன, தீப்பெட்டியுடன். ஒரு தீப்பெட்டியை வாங்கி விளக்கேற்றி விட்டு, நிதானமாய் எங்கள் பக்கம் திரும்பி, "இத்தனை பேருக்கு சிகரெட் பிடிக்கிற பழக்கம் இருக்குன்னு தெரியற போது எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கு! நான் உங்க எல்லாரையும் விட வயசுல பெரியவன். நான் சொல்லறேன்! சிகரெட் வேணாம். வீணா உடம்பைக் கெடுத்துக்காதீங்க!" என்றார். நான் உட்பட அந்தப் பத்து பேரில் இன்று எட்டுப் பேர் சிகரெட் பிடிப்பதில்லை" என்கிறார் ராது.

- எஸ். சந்திரமௌலி

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் 64-வது ஆசார்யாள் அவர்களின் வார்ஷிக ஆராதனை மஹோத்ஸவம்

5.11.1994 சனிக்கிழமை

வடகோடி பிருந்தாவனம், கும்பகோணம் - 612 001.

(ஸ்ரீ காஞ்சி ஸ்ரீமஹாஸ்வாமிகளின் பராத்பரகுரு ஆராதனை)

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தை அலங்கரித்த 64-வது ஆசார்யாளான ஸ்ரீ சந்திர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சரணர்களின் வார்ஷிக ஆராதனை இவ்வருஷம் கிருத்திகா சுக்ல த்விதியா (5.11.94) சனிக்கிழமையன்று கும்பகோணத்திலுள்ள அன்னாரது அவதார க்ருஹத்தில் 33 வேதவித்துக்களைக் கொண்டு நடத்துவதற்கு ஸ்ரீ மஹா ஸந்நிதானங்கள் அனுக்ரஹித்திருக்கிறார்கள். ஆகையால் இப்புனிதமான ஆராதனையை நடத்த குறைந்தபக்ஷமாக ரூ. 1,00,000/- தேவைப்படுகிறது.

பக்தகோடிகளின் பேருதவியாலேயே செய்யப்படும் இந்த மஹத்தான கைங்கர்யத்தில் எல்லா அன்பர்களும் நேரிடையாகக் கலந்து கொண்டு எல்லா அம்சங்களிலும் ஒத்துழைத்து திரவ்விய உபகாரம் செய்து இப்புனிதமான ஆராதனையை விமரிசையாக நடத்திக் கொடுத்து ஸ்ரீ மஹநீயர்களின் பரிபூர்ண அனுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

T.S. குருமூர்த்தி,
(Retd. Chief Cashier UCO Bank)
Trustee & Convener

"மந்த்ரி ரத்னம்" A.R. சேஷய்யா சாஸ்திரி
(முன்னாள் ஸ்ரீகார்யம் & ஏஜண்ட்
ஸ்ரீ காமகோடி பீடம்)
மானேஜிங் டிரஸ்டி

நன்கொடையை வாரி வழங்கிட வேண்டுகிறோம். அனுப்ப வேண்டிய முகவரி: A/C Payee D/D or Cheque or M.O. வடகோடி பிருந்தாவனம் டிரஸ்ட் C/o குலபதி K.G. கிருஷ்ணமூர்த்தி Retd. H.M. 24, டபீர் நடுத் தெரு, கும்பகோணம் - 612 001.

நன்கொடை அனுப்புவோர் விலாசத்தை தெளிவாக எழுதியனுப்பினால் ஆராதனைக்கு பிறகு பிரஸாதம் அனுப்ப உதவியாக இருக்கும்.

● எஸ். ஜெய்சங்கர், மாங்குடி.

? மின்வாரியத் துறை வேலைக்கு ஆள் எடுப்பதில் ஏகமாக முறைகேடுகள் நடைபெறுகிறதாமே?

! உங்களுக்குப் பதிலளிக்கும் வேலூர், கே.கே. வேங்கடேசனின் கேள்வி பின்வருமாறு : இன்று மின்வாரியத்தில் வேலைக்குச் சேர வேண்டுமென்றால் ரூ. 70,000 கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்து வேலை வாங்கியவர்கள் என்ன நினைத்துக் கொண்டு வேலை செய்வார்கள்?

● மஞ்சுதேவன், பம்பாய்.

? குத்து மதிப்பாக திருச்சி உச்சிப் பிள்ளையாரை எத்தனை முறை தரிசனம் செய்திருப்பீர்கள்?


! பக்தி என்பது குறிப்பிட்ட ஒரு தலத்திலுள்ள தெய்வத்தையோ அதனை வணங்குகிற எண்ணிக்கையையோ அடிப்படையாகக் கொண்டது அல்ல.

● ஆர்.டி. பாரத்மணி, இராசிபுரம்.

? செவாலியர் சிவாஜி, "காலம் வரும் போது அரசியலில் குதிப்போம்" என்று அறிவித்தது யாரைக் கலக்கும்? யாரைக் குலுக்கும்?

! யாரையும் பாதிக்காது. இப்படி அடிக்கடி குதிக்கிறேன், தாவுகிறேன் பேர்வழி என்று அவர் விழுந்து அடிபட்டுக் கொள்வதுதான் மிச்சம்!


"ரொம்ப இரிட்டேட்டிங்!" • இந்தியப் பிரதமர்?





ஜெ.க்கு இந்தியப் பிரதமராகும் தகுதி இருக்கிறதா?

• "நுவைக்கும் கல்!"



● பி. என். ஜெய்சங்கர், திருவாரூர்.

? "லஞ்சத்தை ஒழிக்க முடியும்" என்கிறாரே மக்கள் சக்தி இயக்கத் தலைவர் உதயமூர்த்தி?

! அதுமட்டுமா? "கங்கை - காவிரி இணைப்பு அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்; நதிகளை தேசியமயமாக்கி முதலில் தென்மண்டல நதிநீர் இணைப்புத் திட்டம் தொடங்குவோம்" என்று கூறி, மக்களிடம் இதற்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த அண்மையில் 2000 கி.மீ. பாத யாத்திரை மேற்கொண்டு சிதம்பரத்தில் நிறைவு செய்தார். இவரைப் போல் நம்பிக்கையைக் கைவிடாதவர்கள் இன்னும் சிலர் இருப்பதால்தான் இந்த நாடு வாழத் தகுந்த இடமாக இன்னமும் இருக்கிறது.

● புளியரை கணேசன், சென்னை.

? எழும்பூர் ரயில் நிலையத்தில் ஆட்டோ கட்டணப் பலகை திறந்து வைக்கப்பட்டிருக்கிறதே, எதற்கு?

! எவ்வளவு ரூபாய்க்கு ஏய்க்கறாங்கன்னு தெரிஞ்சுக்கிட்டு ஏமாறத்தான்!

● எஸ். குமரேசன், மதுரை.

? நம் தமிழக முதல்வர் மாவட்டம் தோறும் அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைக்கும் அதே நேரத்தில் தமது பாதுகாப்புப் பணிக்கு மகளிர் காவலரை நியமித்துக் கொள்ளாதது ஏன்?

! அதானே! அல்லி தர்பார் பற்றி படித்து, கேட்டிருக்கும் நமக்கு இது ஒரு குறையாகத்தான் படுகிறது. அனைத்து மகளிர் காவல் நிலையங்களும் கூட பெரும்பாலும் குடும்ப நீதிமன்றங்கள் போல் செயல்படுவதாகத்தான் பேச்சு. சட்ட ஒழுங்கு, மற்றும் பாதுகாப்புப் பணிகளில் பெண் போலீஸாரை ஈடுபடுத்துவதில்லை என்ற குறை பெண் போலீஸாருக்கே உண்டு எனத் தெரிகிறது.

• "லஞ்சத்தை ஒழிப்போம்!" • அரசியலுக்கு வந்தால்...?







• யாரைக் கலக்கும்?

● ச. ஜான் ரவி, கோவில்பட்டி.

? 'புரட்சித் தலைவி ஆணையிட்டால் அவர் வீட்டுத் துணி துவைக்கும் கல்லாக இருப்பதற்குக் கூட ஆயத்தமாக இருக்கிறேன்' என்று பேசியிருக்கிறாரே, காளிமுத்து?

! பெருக்கும் துடைப்பம், சுமக்கும் செருப்பு, குரைக்கும் நாய்... இப்ப துவைக்கும் கல்... இதோடு முடியலை, இன்னும் இருக்கு! ஒண்ணொண்ணா எடுத்து வுடுவாரு பாருங்க.

● எம். பிரபு, குமராட்சி.

? சோனியா அரசியலுக்கு வந்தால்?

! 'தமிழகத்தை மலையாளம் ஆளுகிறதே' என்று வயிற்றில் அடித்துக் கொண்டவர்கள், 'இந்தியாவை இத்தாலி ஆள்கிறதே' என்று தலையில் போட்டுக் கொள்வார்கள்!

● கே. செந்தமிழ்பாண்டியராஜன், காளையார் கோயில்.

? பிளேக் நோய்க்கு ரூ. 20 கோடி அரசு ஒதுக்கியிருப்பது பற்றி?

! நோய் பரவிய பிறகு முழித்துக் கொண்டு ரூ. 20 கோடி செலவு செய்வதற்குப் பதில் நோய் வருமுன்னரே சுத்தம், சுகாதாரம் முதலியவற்றுக்காக இதில் பாதியாவது செலவழித்திருந்தால் குத்துமதிப்பாக ரூ. 20 ஆயிரம் கோடி அந்நியச் செலாவணி நஷ்டமாகியிருக்காது. இப்போது டூரிஸ்ட்கள் வரவு பூஜ்யம். ஏற்றுமதி கணிசமான பாதிப்பு. மக்களுக்கோ சொல்லொணா அவதி. வாழ்க்கைக்குப் பயன் தரத்தக்க கல்வி அளிக்காதது; சுகாதார இலாகாவின் மெத்தனம்; எலிகளை ஏப்பம் விடக்கூடிய பாம்புகளை அவற்றின் தோல்களுக்காக அழித்தது எல்லாம் சேர்ந்து பழிவாங்கி விட்டது.

● வி. ஆர். ரவிசந்திரன், வேப்பங்காடு.

? ஓமனிலிருந்து வரும் கடல் ஆழ்குழாய் எரிவாயுவால் இந்தியா எந்த அளவுக்குப் பயனடையப் போகிறது?

! அதை வீணாக்காமல் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளப் போகிறோம் என்பதைப் பொறுத்து இருக்கிறது. எங்கே, பம்பாய் கடற்கரையோரப் பகுதிகளில் கிடைக்கும் எரிவாயுவையே முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டதாகத் தெரியவில்லையே? 'ஹதர்ன் காஸ்', கிரிட் காஸ் ஆகிப் போச்சே? கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன்... கதை தான்!

● நெல்லை சேகர், சென்னை - 14.

? 'ஜெ. நல்லா ஆட்சி செய்யறாங்க, ஆனா கட்-அவுட் கலாசாரம்தான் ரொம்ப இரிட்டேட்டிங்கா இருக்கு' என்று ஜெ. பற்றி ரஜினிகாந்தின் கருத்தை பத்திரிகைகள் பெரிதுபடுத்துவானேன்?

! ஒருவேளை கட்-அவுட் கலாசாரத்தை ஆரம்பித்து வைத்ததே திரையுலக ஸ்டார்கள் தான் என்பதை நினைவூட்டுவதற்காக இருக்கலாம்!

● எல். எம். அபிதாட்சயா, மதுரை.

? தமிழக முதல்வருக்கு இந்தியப் பிரதமராகும் தகுதி இருக்கிறதா?

! தகுதி பற்றி இங்கே யாருங்க கவலைப்படறாங்க? வோட்டு யாருக்கு விழும்னுதானே பார்க்கிறாங்க? அப்படி பார்க்கறச்சே ஜெ.யை விட சோனியாவுக்கு சான்ஸ் அதிகம் ஆச்சே!

● அ. முஸ்தபா, தக்கோலம்.

? ரேஷனில் அரிசி விலை உயர்த்தி இருப்பது பற்றி?

! உயர்த்துவதும் எதிர்ப்பு தோன்ற, வாபஸ் பெறுவதும் தமிழக அரசுக்கு வாடிக்கை.

● பால. கிருஷ்ணமூர்த்தி, மருங்கூர்.

? செப்டம்பர் 29 வேலை நிறுத்தம் வெற்றியா, தோல்வியா?

! அயல்நாட்டு முதலீட்டாளருக்கு நமது கதவுகளை அகலத் திறந்து விடுவதை எதிர்த்து, எதிர்க்கட்சியினர் நடத்திய வேலை நிறுத்தம் என்ற அளவில் வெற்றி. கலவரங்களுக்குப் பயந்து, 'பஸ் ஓடாது' என்று அறிவித்து எதிர்க்கட்சிகளின் வேலையைச் சுலபமாக்கிய அளவில் தமிழக அரசுக்குப் படுதோல்வி!

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
எஸ். குமரேசன்,
269, காமராசர் சாலை,
மதுரை - 9.

வட்டமேஜை

♦ தலையங்கத்தில், 'அரசியலிலிருந்து இறையுணர்வைப் பிரிக்கக் கூடாதெ'ன்ற காந்திஜியின் உபதேசம் இன்று கடைப்பிடிக்கப்படும் முறையைச் சொன்ன கடைசி வரி நயத்தை சொர்க்கத்திலிருந்து காந்தியே ரசித்திருப்பார்!
சென்னை - 91,
ஐயாறு வாசுதேவன்.

♦ காந்தியை மறவாதிருக்க 125 வழிகள் தலையங்கம் கண்டேன். அண்ணலின் அரிய கருத்துக்களுக்கு நாம் எப்படி மதிப்பளித்து, அவரது கனவுகளை நனவாக்குகிறோம்(?) என்கிற நிஜத்தை வேடிக்கை கலந்து பிரதிபலித்தது வேதனையாக இருந்தாலும் யோசிக்க வைத்தது.
கோவை,
இல. ராஜகோபால்.

♦ கவர்ஸ்டோரியில், பல இடங்களில் ராமமூர்த்தி பதிலில் மழுப்பல் தெரிகிறது. காங்கிரஸ் தனியாக நின்றால் சில தொகுதிகளில் டிபாசிட்டே காலியாகும் நிலையில், காங்கிரஸின் கூட்டணி இல்லாமல் எந்த மாநில கட்சியும் தமிழ் நாட்டில் ஆட்சிக்கு வந்து விட முடியாது என்று அவர் சொல்வது, இதே இதழில் வந்திருக்கும் 'நாம் சிரித்தால் நவராத்திரி'யைக் கூடத் தூக்கிச் சாப்பிட்டு விடும் படியான தமாஷ்.
வடகரை,
பாலு.

♦ "காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் ஒன்று சேர்ந்து மக்கள் மத்தியில் மீண்டும் தலைதூக்கி தனித்து நின்று ஆட்சி அமைப்போம்'' என்று நம்பிக்கையுடன் கூறாமல், ''இனி காங்கிரஸுக்கு ஆட்சியில் பங்கு தருகிற கட்சியுடன்தான் கூட்டணி வைத்துக் கொள்ள வேண்டும் என்பது தான் எனது நிலை!" என்று தேசியக் கட்சியின் ஒரு மாநிலத் தலைவரின் பொறுப்பற்ற இந்த பதில், தமிழக காங்கிரஸ் மீது மக்கள் கொண்டுள்ள கொஞ்ச நஞ்ச மதிப்பும் மரியாதையும் இழக்கச் செய்வதாக உள்ளது.
சென்னை - 78,
பூங்கோதை குப்புஸ்வாமி.

பாராட்டுக்கள்.
ஊத்தங்கரை,
கவி. செங்குட்டுவன்.

♦ தஞ்சை மகேஷ் ப்ரியனின் "காந்தியம் தோற்பதில்லை" - ஆத்மார்த்தமான, அற்புதப் படைப்பு. வாத்யார் கண்ணுசாமி போல் ஊருக்கு ஒருவர் போதும், நாடு சுபிட்சமடைய.

வாழப்பாடி சொன்னா சரிங்க!

♦ ஜெ. அரசில் 1500 கோடி ஊழலா? வாழப்பாடி சொன்னால் சரிங்க. தமிழ் நாட்டின் தலையெழுத்து குறித்து நினைத்தாலே தலை சுற்றுகிறது சார்.
மேலகிருஷ்ணன்புதூர்,
பிரபாலிங்கேஷ்.

♦ எத்தனை ஆண்டுகள் ஆனால் என்ன! இன்றும் மாறாத மணம் வீசுகிறது ரஸவாதியின் 'ரோஜா முள்' சிறுகதை. மறைந்த அந்தப் படைப்பாளியின் பாதங்களுக்கு மானசீகமாய் ஆயிரம் ரோஜா மலர்களைச் சமர்ப்பிக்கிறேன்.
திருச்சி - 20, சரஸ்வதி பஞ்சு.

♦ போட்டிக் கதையாக இருந்தாலும் காந்தி பிறந்த நாளை நினைவுபடுத்தும் விதத்தில் 'காந்தியம் தோற்பதில்லை" என்ற கதையை வெளியிட்டு சிறப்பு தேடிக் கொண்டு விட்டீர்கள்.
பாராட்டுக்கள்.
விசலூர்,
ஜி. ஜி. கிருஷ்ணன்.

♦ 'நாம் சிரித்தால் நவராத்திரி' கமெண்ட்ஸ் மிக அருமை! இன்றைய அரசியல் கட்சிகளின் அவல நிலையை தெளிவாகப் படம் போட்டுக் காட்டிய கல்கிக்கு வாழ்த்துக்கள்.
திருச்சி, ஆர். சுகன்யா.

♦ அட்டையிலும் உள்ளேயும் 'கட்டெறும்புக் கலக்கல்கள்' செம மஜா!
மதுரை - 16,
எல். எம். அபிதாட்சயா.

♦ 'சோனியாஜீ'யின் சென்னை விஸிட்டை ஒரே பக்கத்தில் 'நச்'சென்று கொடுத்திருந்த விதம் சூப்பர்.
திருச்சி,
ஆர். சங்கரநாராயணன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.



• நெடுஞ்செழியன்



• சுரேஷ் சக்கரவர்த்தி

பூம்புகாரில் ஜெ.படம்!

• அந்தக் காலத்துப் பிரபல நடிகர் அண்ணாஜி ராவ், இசைக் கலைஞரும் கூட. அவருடைய 22 வயது மகனுக்கு கோயமுத்தூர் கம்பெனியொன்றில் இஞ்சினியர் வேலை. திடீரென மகனுக்கு கடுமையாய் அம்மை நோய் தாக்கியதும், பயந்து போய், திருக்கோவிலூரை அடுத்துள்ள தபோவனத்தில் இருந்த சுவாமி ஞானானந்த கிரியிடம் அழைத்துக் கொண்டு போனார். "குணமானபின் மகனை என்னிடமே விட்டு விட்டுப் போய்விடு!" என்றார் ஞானானந்தர். தந்தையும் ஒப்புக் கொண்டார். நோய் குணமான இளைஞரும் ஞானானந்தகிரியின் சீடரானார். அந்த சீடர்: அண்மையில் ஜலசமாதியடைந்த சுவாமி ஹரிதாஸ் கிரி.

• "நம் ஊர் அமைச்சர்கள் நடுகிற மரங்கள் அனைத்தும் ஒழுங்கான முறையில் பராமரிக்கப்பட்டால், தமிழ்நாடே இன்று காடாகியிருக்கும். ஆனால், மரங்கள் நடப்படுவதுடன் சரி! அப்புறம் அவற்றைக் கவனிப்பாரில்லை!" - இப்படி மரம் நடு விழாக்களை விமர்சித்தவர் தமிழகத்தின் நிரந்தர நெ.2. நெடுஞ்செழியன்!

• சென்னை நகரின் பல்வேறு பகுதிகளிலும் சிறு பத்திரிகைகள் நிறைய வரத் துவங்கியுள்ளன. அடையாறு டைம்ஸ், அண்ணா நகர் டைம்ஸ், மைலாப்பூர் டைம்ஸ் - இவை ஆங்கிலத்தில். தமிழில் : பெரம்பூர் செய்திகள், சிடி நியூஸ்....

• சுரேஷ் சக்ரவர்த்தி. சன் டீ.வி. மூலம் வெகு பிரபலமாகி விட்ட முகம்! இவர் பாலசந்தரின் அழகன், பாலு மகேந்திராவின் மறுபடியும் போன்ற படங்களில் நடித்திருப்பதுடன் ஒரு சில படங்களுக்கு வசனமும் எழுதியிருக்கிறார். சினிமா வாழ்க்கை டல் அடிக்கவே இரண்டாண்டுகள் துபாய்க்குப் போயிருந்தார். திரும்பி வந்ததும், சன் டீ.வி. நிகழ்ச்சிகள் இவரை வெகுவாய்க் கவர, கலாநிதி மாறனைச் சந்தித்துப் பேசினார். வாய்ப்பு கிடைத்தது. இப்போது சுரேஷ், சன் டீ.வியில் சீனியர் தயாரிப்பாளரும் கூட.

• *கைவினைப் பொருட்கள் விற்கப்படும் பூம்புகார் எம்போரியத்தில் திரும்பிய பக்கமெல்லாம் மரப்பலகையில் ஜெயின் பெயிண்டிங். "இதற்கு முன்னால் எந்த முதல்வரின் படமும் இது போல் வரையப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டதில்லை" என்று சொன்னார் ஒரு சேல்ஸ்மேன். பல அ.தி.மு.க. பெரும் புள்ளிகள், வேறு பல கைவினைப் பொருட்களை வாங்கிச் செல்கிறார்களே தவிர, முதல்வரின் பெயிண்டிங்கைக் கண்டு கொள்வதில்லையாம்! (மாட்டிக் கொண்டார்கள்!)*

• முன்பெல்லாம், தமிழக அரசின் செய்திப் படங்களில் துவக்கத்தில் அண்ணா சமாதியைக் காண்பிப்பார்கள். பின்னர் கலைஞரின் சமீபத்திய பதவிக் காலத்தில் வள்ளுவர் கோட்டத்தைக் காண்பித்தார்கள். இப்போது எம்.ஜி.ஆர். சமாதியைக் காண்பிக்கிறார்கள். அண்ணா நாமம் வாழ்க!

— **மௌஷ்மி, கௌசல்யா**



சேல்ஸ் & எக்ஸ்போர்ட் அலுவலகம் : குப்தா சாரீஸ் & டிரஸ் மெட்டிரியல்ஸ்
413 G.I.D.C. பண்டேஸரா, சூரத்-394 221 (இந்தியா) போன் : 0091-261-690885 ஃபாக்ஸ் : 0091-261-691100.

REGISTERED NO. M.
Registered as Newspaper in

